கல்கி



KALKI 7-7-1957 30 நயா பைசா


பாருங்கள்!
ஒரு அரை வில்லை ஸன்லைட் தான்
இவ்வளவு சலவையும் செய்து
முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே
இதை நிறைவேற்றியது!
SUNLIGHT
SOAP
பளிச்சென்று வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 248-58 TM

கல்கி
பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டின் டயரியிலிருந்து

மாலை பத்திரிகையில் இச்செய்தி வெளியாகியிருந்தது...



ஒரு செய்தி துணுக்கு கூறிற்று: "ஸ்ரீ அனந்த் கோஸ்லா என்ற ஒரு முனிசிபல் சிற்பி, அம்பாலா ரோட்டில் சைக்கிள் மீது செல்லுகையில், மோட்டார் விபத்துக்குள்ளாகி இன்று மரணமடைந்தார். அவர் ஒரு பஸ்ஸினால் மோதப்பட்டதாகத் தெரிய வந்தது."

அன்றைய மாலைச் செய்தியை படித்த எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. ஸ்ரீ கோஸலாவை நான் அறிவேன். சொல்லப்போனால், இரண்டே மாதங்களுக்கு முன்புதான் அவரை ஒரு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுக்கச் செய்தேன்.

ஸ்ரீ கோஸ்லாவின் மனைவிக்கோ அன்றைய செய்தி அவள் வாழ்க்கையே அஸ்தமித்தது போன்ற உணர்ச்சியையூட்டியது. அந்த நிலையில் அவளுக்கு சிறிதும் ஆறுதலில்லை. ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன் அவள் கணவன் முன் யோசனையுடன் செய்த காரியம் அவள் வருங்கால வாழ்க்கைக்கு ஒரு வழி வகுத்தது. அதன்படி மாதந்தோறும் ரூ. 50 வீதம் செலுத்தி "டபிள் ஆக்ஸிடெண்ட் பெனிபிட்" கூடிய ஒரு "மல்டி—பர்பஸ் பாலிஸி"யில் அவன் செய்த முதலீடு அவளுக்கு உடனடியாக கிட்டத்தட்ட ரூ. 11,000 கொடுக்க வாக்களித்தது மற்றும் மாதந்தோறும் ரூ. 200 வீதம் 2 வருஷங்களுக்கும், அத்துடன் அதற்கு அடுத்த 20 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் ரூ. 100 வீதமும், அத்துடன் அதன் முடிவில் ரூ. 9,000 மேலும் ஒருவருஷத்திய போனஸாம் ஆகமொத்தம் ரூ. 48,600 கொடுக்கவும் வாக்களித்தது.

கணவனை இழந்த அவளுடைய துக்கத்தை ஆற்ற என்னால் இதை விட வேறொன்றும் செய்யமுடியவில்லை. ஆனால் அவளுக்கும் அவளுடைய இரு குழந்தைகளின் வருங்கால சுகத்திற்கும் சம்ரக்ஷணைக்கும் என்னால முடிந்தமட்டும் ஏதோ செய்ய முடிந்தது.

★ இந்த சம்பவத்தில் சம்பந்த பட்டவர்களின் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. ஆனால் இந்த சம்பவம் உண்மையில் நடந்தது.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ASP/LIC 13



மலர் 16 } இதழ் 49 }

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - *பாரதியார்*

{ ஹேவிளம்பி { ஆனி 23

அறிவைப் போற்றுவோம்!

தெய்வப்புலமை திருவள்ளுவர் அற்புதமான ஒரு கருத்தை வெளியிட்டார்.

அதாவது ஒருவனுக்கு அறிவு மட்டும் இருந்தால் போதும், அவன் எல்லா நலன்களையும்' பெற்றவன் ஆவான் என்றார். அறிவு இல்லாதவன் எவ்வளவு நலன்களைப் பெற்றிருந்தாலும் அவையெல்லாம் பெற்றவனாக மாட்டான் என்றார்.

" அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் "

சுதந்திர பாரத நாட்டில் சுபிட்ச வாழ்வுக்கான பல திட்டங்கள் வகுக்கப் பட்டு வருகின்றன. மாபெரும் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தத் திட்டங்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன. உணவுப் பெருக்கத்துக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மனிதன் இவற்றுடன் மட்டும் திருப்தியடைந்து விடவில்லை. அவனுக்கு அறிவுப் பசியும் இருக்கிறது. அந்த அறிவுப் பசிக்கு ஆகாரம் அளிக்கக் கூடியவை சர்வகலாசாலைகள்தாம்! இந்தச் சர்வகலாசாலைகளின் நிலை என்ன என்பதை சுதந்திர பாரத நாட்டில் புதிய கண்கொண்டு பார்க்க வேண்டும்.

சமீபத்தில் நமது சர்வகலாசாலைகள் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடின. அதிலிருந்து சென்ற நூறு ஆண்டுகளுக்கு மேலாக நம் நாட்டில் சர்வகலாசாலைகள் வாழ்ந்து வந்திருக்கின்றன என்று அறியலாம். இந்தச் சர்வகலாசாலைகளில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் எத்தனையோ பேர் புகழுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆனாலும் சர்வகலாசாலை பொதுவாக நமது வாழ்வுக்கும் பண்பாட்டுக்கும் முற்றும் மாறுபட்ட பண்பாட்டைத்தான் வளர்த்து வந்திருக்கின்றன. ஆம்! சர்வகலாசாலைகள் பெரிதும் அரசாங்கக் குமாஸ்தாக்களைச் சிருஷ்டிக்கும் யந்திரங்களாக இருந்திருக்கின்றன. இதற்கெல்லாம் அந்நிய ஆட்சி நடைபெற்று வந்ததுதான் காரணம்.

சர்க்கார் உத்தியோகங்களுக்குச் சர்வகலாசாலைப் பட்டதாரிகளே வேண்டும் என்று அன்றைய அரசாங்கம் சட்டம் விதித்தவுடன் லட்சக்கணக்கான மாணவர்கள் சர்வகலாசாலையை முற்றுகை யிட்டார்கள். பட்டம் பெற்று வெளியில் வந்தார்கள். இதனால் சர்வகலாசாலையின் தரம் குறையத் தொடங்கியது. சென்ற வருஷத்திலிருந்து சர்வகலாசாலையின் தரத்தை உயர்த்தச் சர்வகலாசாலையினர் முயன்று வருகிறார்கள்.

சர்வகலாசாலையில் பட்டப் படிப்பு பெறுவதற்கு முன் "பூர்வாங்கப் படிப்பு" ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் பூர்வாங்கப் படிப்பில் தேறியவர்களே பட்டப் படிப்புக்கு அருகதையுள்ளவர்களாவார்கள். ஆனால் இந்த வருஷம் நடைபெற்ற பூர்வாங்கப் பரீட்சையில் தேறியவர்களின் தொகை மிக மிகச் சொற்பம் என்று கூறி வருகிறார்கள். இதன் பயனாகச் சர்வகலாசாலையில் பட்டப் பரீட்சைக்கு நுழையும் மாணவர்களின் தொகை பெரிதும் குறைந்து விடும் என்று கல்லூரி நிர்வாகிகள் பயப்படுகிறார்கள். கல்லூரிக்கு வரும் மாணவர்களின் தொகை குறைந்தால் கல்லூரிகளை நடத்துவது கஷ்டம். போதிய நிதி வசதி இருக்காது என்றும் சொல்லுகிறார்கள். இதன் விளைவாக, சென்ற சில ஆண்டுகளில் திறக்கப்பட்ட கல்லூரிகள் மூடப்பட வேண்டியிருக்கும் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில், சர்வகலாசாலை கமிஷன் தலைவர் திரு தேசமுக் மிகவும் உற்சாகமும் நம்பிக்கையும் அளிக்கும் ஒரு பிரசங்கம் புரிந்திருக்கிறார். மைசூர்

சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்தில், சர்வகலாசாலைகளுக்கு நம்பிக்கை யூட்டும் வகையில் பேசியிருக்கிறார்.

" 'சர்வகலாசாலைகளை நல்ல முறையில் நடத்தப் பணத்துக்கு எங்கே போவது?' என்று கேட்கிறார்கள். நாட்டின் தற்காப்புப் படையை நிர்வகிக்கச் சர்க்கார் நிதியை எங்கேயிருந்து கொண்டு வருகிறார்களோ, அதே இடத்திலிருந்து இதற்கும் நிதி கொண்டு வர வேண்டியதுதான்" என்கிறார்.

நாட்டின் தற்காப்புக்கு மிகமிக அவசியமானது ராணுவம். அந்த ராணுவப்படையை நிர்வகிக்க நமது சர்க்கார் வருமானத்தில் சரிபாதிக்கு மேல் செலவழிக்கிறார்கள். இதிலிருந்தே ராணுவம் ஒரு நாட்டுக்கு எவ்வளவு முக்கியமானது என்பது விளங்கும். ராணுவத்துக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்று விளங்க வேண்டியது சர்வகலாசாலைகள் தாம் என்பதை மேற்கண்டவாறு அழுத்தம் திருத்தமாகக் கூறி யிருக்கிறார் திரு தேசமுக்.


சர்வகலாசாலைகள் என்னும்போது இன்றையக் குமாஸ்தாக்களைச் சிருஷ்டிக்கும் சர்வகலாசாலைப் படிப்பு முறையையோ, அல்லது உலகத்தோடு ஒட்டாத கல்வி கற்பிக்கும் சர்வகலாசாலைகளையோ அவர் குறிப்பிடவில்லை.

நம் நாட்டுச் சர்வ கலா சாலைகளிலும் மேனாட்டுச் சர்வ கலாசாலைகளிலும் உள்ள குற்றங்களை உணர்ந்தே பேசியிருக்கிறார்.

"இன்றைய உலகில் இரண்டு தத்துவங்கள் தொழிற்படுவதைப் பார்க்கிறேன். அவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதைப் பார்க்க வியப்பாக இருக்கிறது. ஒரு புறம் விஞ்ஞானமும் பொறி இயல் கலையும் அபாரமாக வளர்ந்திருக்கின்றன. அதே சமயம் யுத்தம் மூண்டுவிடுமோ என்ற பயத்திலேயே உலகம் ஓயாமல் அழுந்திக் கிடக்க வேண்டியிருக்கிறது. ஒரு மகாயுத்தம் நடந்து முடிந்தால் மற்றொரு மகாயுத்தம் முந்தையதை விடப் பயங்கரமாக மூண்டுவிடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. இதுதானா சர்வகலாசாலைப் படிப்பின் பயன்?

விஞ்ஞான வளர்ச்சியும், பொறிஇயல் கலை வளர்ச்சியும் சர்வகலாசாலைகளின் காரணமாகவே ஏற்பட்டுள்ளன என்று பெருமைப் படலாம். யுத்த பீதி இருப்பதற்குக் காரணம் உலக அரசியல் விஷயங்கள் சர்வ கலாசாலை நிபுணர்களின் கையில் இல்லாததுதான் என்று சொல்லலாம். எனினும் யுத்த பீதிக்குக் காரணம் ஓரளவு சர்வகலாசாலைகளையும் சாரும் என்று சொல்லத்தான் வேண்டி யிருக்கிறது.

நல்ல பெயர்!



சென்னை ராஜ்யத்தின் நிதி மந்திரி தாம் சமர்ப்பித்த பட்ஜெட்டின் பழைய வரிகளை உயர்த்தியதைத் தவிர, புது வரிகள் ஒன்றும் விதிக்கவில்லை!



அணு, ஜலஜ குண்டு சோதனைகளை நிறுத்த வேண்டும் என்ற யோசனைக்கும் பிரிட்டன் முட்டுக்கட்டை போட்டு வருகிறது!

இவ்வளவு விஞ்ஞானம் வளர்ந்த பிறகும் உலகில் சாந்தி ஏன் ஏற்படவில்லை என்று யோசிக்கும் போது, மூளை வளர்ச்சிக்கும் அறிவுவளர்ச்சிக்கும் ஒரு தொடர்பில்லாததே காரணம் என்று சொல்லவேண்டியிருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியோடு தார்மிக உணர்ச்சியையும் சர்வகலாசாலை வளர்க்க வேண்டும்!'' என்று கூறியிருக்கிறார்.

இப்படி ஆராய்ச்சி அறிவையும், தார்மிக உணர்ச்சியையும் இணைக்கும் பொறுப்பு சர்வகலாசாலைகளைச் சேர்ந்தது என்று திரு தேசமுக் கூறியிருப்பது குழம்பிய மனநிலையில் இருப்பவர்களுக்குப் பெரும் விளக்கம் அளிக்கும். இதையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நமது தெய்வத் தமிழ்ப் புலவர் கூறினார். 'அறிவுடையார் எல்லாமுடையார்' என்று தெய்வப் புலவர் கூறிய அந்த அறிவில் கல்வி கேள்விகளால் பெறக் கூடிய அறிவும் தார்மிக உணர்ச்சியினால் பெறும் அறிவும் அடங்கும். இத்தகைய அறிவுச் செல்வத்தைப் பெறக் கூடிய சர்வகலாசாலைகளைப் போற்ற ஒரு சர்க்கார் தனது நிதியில் பாதிக்கு மேல் செலவிட்டாலும் குற்றமில்லை அல்லவா?

ஸ்ரீ தேசமுக் கல்வி விஷயத்தை ராணுவச் செலவுக்குச் சமமாகக் கூறியிருக்கக் கூடாது என்று கருதுகிறோம். ராணுவச் செலவை விட முக்கியமானது என்றே கருதுகிறோம். பாரத சர்க்கார் தனது ராணுவச் செலவைக் குறைத்துக் கொண்டால் உலக அரங்கில் பாரதத்தின் கௌரவம் உயரும். பாகிஸ்தானைக் கண்டு நாம் நம் ராணுவச் செலவை உயர்த்திக் கொள்ளவில்லை என்ற எண்ணம் வளரும். அத்துடன், பாகிஸ்தானுக்கு ராணுவ உதவி அளிக்கும் அமெரிக்காவுக்கும் புது விழிப்பு ஏற்படும் என்றும், பாரதத்தின் தார்மிக உணர்ச்சி உலகத்துக்குப் புலப்படும் என்றும் கருதுகிறோம்.

* * *

சில மாதங்களுக்குமுன் ராஜாஜி அவர்கள் திருச்சியில் ஒரு கல்லூரியின், சர்வகலாசாலையின் நூற்றாண்டு விழாப் பிரசங்கம் புரிந்த போது, ஒரு கருத்தை வெளியிட்டார்.

'நாட்டில் படிப்பு வாசனையற்றவர்களும், பள்ளிக் கூடத்துக்குப் போகாதவர்களுமே சட்டசபைகளுக்கு அங்கத்தினர்களாக நிறுத்தப்பட்டிருக்கிறார்களே, இவர்களே நம்மை என்றென்றும் ஆண்டு கொண்டிருப்பார்களோ என்று ஐயப்பட வேண்டாம். சுதந்திரம் பெற்று ஒரு சில ஆண்டுகளே ஆகியிருக்கின்றன. அதனால் இன்றைய நிலை இப்படியிருக்கிறது. விரைவில் சர்வகலாசாலைக் கல்வி பெற்றவர்களே நாட்டில் தலைமை வகித்து அரசாங்கங்களை நடத்த வேண்டியிருக்கும்!' என்று எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

சர்வகலாசாலை நிதிக் கமிஷன் தலைவர் தேசமுக் அவர்களின் பிரசங்கமும் ராஜாஜியின் அறிவுரைகளையே வலியுறுத்துகிறது.

சர்வகலாசாலைகளுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கை ஒளி காண்கிறது!



இதோ படத்தில் மாலையுடன் நிற்பவர்கள் சென்ற மாதம் 29-ந் தேதி அன்று ஆகாய விமானத்தில் ஏறி அகில உலகையும், சுற்றிப் பார்க்கக் கிளம்பி யிருக்கிறார்கள். பணம் இருக்கிறது, பொழுது போகவில்லை என்பதற்காக அவர்கள் உலகைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பவில்லை. பின் எதற்காகக் கிளம்பியிருக்கிறார்கள்? உலகின் பல பாகங்களிலும் மோட்டார் தொழிலில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தி முறைகளைப் பற்றித் தெரிந்து கொண்டு வருவதற்காகத்தான்.

மதுரையில் 1912-ம் ஆண்டு திரு டி. வி. சுந்தரம் ஐயங்கார் ஆரம்பித்த மோட்டார் தொழில் இன்று ஆலமரம் போல் பல விழுதுகளை விட்டுத் தமிழகம் பூராவும் தழைத்திருப்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். திரு டி. வி. சுந்தரம் ஐயங்காரின் புதல்வர்கள் தந்தையைப் போலவே தொழில் திறமையும் நிர்வாக ஆற்றலும் பெற்று அவர் ஆரம்பித்த தொழிலையும் உப தொழில்களையும் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். டி. வி. எஸ். என்ற மூன்று எழுத்துக்களையும் தமிழ் மக்கள் மனத்தில் பதிய வைத்து விட்டார்கள். தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் தொழில்கள் இருந்தால் அதுமிகத் திறமையுடன் நடைபெற்று வருவதுடன் சோஷலிஸ முறைப்படியும் தொழிலையும் தொழிலாளர்களையும் நடத்த முடியும் என்பதற்கு உதாரணமாக விளங்கி வருகிறது டி. வி. எஸ். ஸ்தாபனம்.

படத்தில் மாலையுடன் இருப்பவர்களில் கம்பீரமாகக் கையிலே பூச் செண்டுடன் நிற்பவர் டி. வி. எஸ். தொழில் அதிபர்களில் ஒருவரான திரு டி. எஸ். சந்தானம். கையிலே பையும் கழுத்திலே மாலையுடன் காட்சி தருபவர் டி. வி. எஸ். ஸ்தாபனத்தில் மோட்டார் சாமான்கள் விற்பனை மானேஜராக மதுரையில் தொண்டாற்றும் திரு எம். ஆர். கண்ணன்.

உலகில் வளர்ந்து வரும் தொழில் முன்னேற்ற நுணுக்கங்களைத் தொழிலதிபர்களுடன், தொழிலாளர்களும் சேர்ந்து பார்த்துத் தெரிந்துகொண்டு தொழில்களை வளர்க்க வேண்டும் என்னும் உயர்ந்த கருத்துடையவர்கள் டி. வி. எஸ். தொழிலதிபர்கள். அதற்காக அடிக்கடி தங்கள் ஸ்தாபனத்தில் உள்ள தொழிலாளர்களை மேல்நாடுகளுக்கு அனுப்பி வைப்பதுடன் தாங்களும் சென்று பார்த்து வருவார்கள். இந்த ஆண்டு உலகச் சுற்றுப் பிரயாணத்தை டி. வி. எஸ். தொழிலதிபர் திரு டி. எஸ். சந்தானம் அவர்களும், மோட்டார் சாமான்கள் விற்பனை மானேஜர் திரு எம். ஆர். கண்ணனும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் இருவரும் இங்கிலாந்துக்குக் கிளம்பிய போது சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குச் சென்னை நகரில் உள்ள பல தொழில் அதிபர்களும் பிரமுகர்களும் ஏராளமான நண்பர்களும், உறவினர்களும், மதுரையிலிருந்து பல டி. வி. எஸ். சிப்பந்திகளும் வந்திருந்து வழி அனுப்பி வைத்தார்கள். மலர் மாலைகளைச் சூட்டி ஆசி கூறினார்கள். டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் நிர்வாகஸ்தர்களில் மூத்தவரான திரு டி. எஸ். ராஜம் அவர்கள் தமது சகோதரர் திரு டி. எஸ். சந்தானம் அவர்களைக் கட்டித் தழுவி உச்சி முகர்ந்து ஆசீர்வதித்த காட்சியைப் பார்த்த போது ராமபுத்திரரது நினைவுதான் வந்தது. திரு டி. எஸ். சந்தானம் அவர்கள் மேற்கொண்டிருக்கும் உலகச் சுற்றுப் பிரயாணத்தின் பயனாகத் தென் இந்தியாவில் மோட்டார் சாமான்கள் அத்தனையும் உற்பத்தி செய்யும் மோட்டார் தொழிற்சாலை உண்டாகித் தென்னாட்டின் பொருள் வளம் பெருகும் என்று எதிர்பார்க்கிறோம்.

பலவீனப்படுத்த வேண்டாம்!

ராஜாஜி

ஏந்தக் காலத்திலுமே பாரத சாம்ராஜ்யத்துக்கு ஒரு எதிர்ப்பு வேகம் இருந்து வந்திருக்கிறது. அதாவது பிரதேச ஆங்காரம்.

பல சுதந்திர ராஜ்யங்களாகப் பிரிந்து போகும் வேகம் எப்பொழுதுமே பாரத சரித்திரத்தில் ஒற்றுமைக்குத் தடையாக இருந்து வந்திருக்கிறது. இப்போதும் இந்தப் பிரதேச வேகம் விட்டபாடில்லை.

பாரதத்தின் வருங்கால சரித்திரம் என்னவென்பதை யோசிக்கும் போது, ஒற்றுமை வேகத்தைவிடப் பிரதேச வேகமே பலமானது என்பது ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தால் விளங்கும்.

ஒன்றுபட்டால்தான் பாரதத்தின் பெருமை ஓங்கி வளரும் என்பதை அனைவரும் அறிவார்கள். ஆயினும் நாட்டு மக்களிலுள்ள பேதாபேதங்களையும் பரஸ்பர விருப்பு வெறுப்புக்களையும் நம்பிக்கைக் குறைவையும் யோசித்துப் பார்த்தால் வெகு தூரத்திலுள்ள கேந்திர ராஜதானியிலிருந்து இந்த அகண்ட பாரத நாட்டின் நிர்வாகம் நடத்த இயலாது என்பது வெட்ட வெளிச்சமாகும். தில்லிக்கும் சென்னைக்கும் 1361 மைல். தில்லிக்கும் கல்கத்தாவுக்கும் 956 மைல். தில்லிக்கும் அஸ்ஸாமுவுக்குமுள்ள இடைவெளி சொல்லத் தேவையே இல்லை. அதிகாரத்தை பிரித்துக் கொடுத்துப் பிரதேச அரசாங்கங்களுக்குச் சுதந்திரம் தாராளமாகக் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்பது வெள்ளிடை மலை.

பிரதேச ராஜ்யங்களின் அதிகாரம் வர வரத் தேய்ந்துபோய் ஏகபோக கேந்திர ஆட்சி ஒருவிதம் (யூனிட்டரி சென்ட்ரல் கவர்ன்மெண்ட்). பிரதேச ஆட்சிகள் பலம் பெற்று அவைகள் ஒன்று கூடி சமஷ்டி கேந்திர சர்க்காருக்குக் குறிப்பிட்ட சில பொறுப்புகள் தருவது மற்றொரு வகை (பெடரல் யூனியன்).

வெகு தூரத்திலிருந்து நடத்தப்பட்டு நடைபெறும் நிர்வாகத்தில் பல குறைகளை மக்கள் காண்பார்கள். நம்முடைய பிரதேசத்தை நாமே நடத்தலாமே என்ற ஆங்கார வேகமும் இத்துடன் சேரும். இரண்டும் சேர்ந்து தனி ராஜ்ய மனோபாவத்தை வளர்க்கும்.

எதிர் காலத்தில் மானுஷ மனப்பான்மை நியதியின்படி என்ன நடக்கும் என்று முன்னதாகவே உணர்ந்து, அந்த முடிவை நல்ல வழியில் அடையப் பார்ப்பதே அரசியல் சாமர்த்தியமாகும்.

எவ்வளவு காலம் வரையில் தற்போதைய மத்திய ஆட்சியில் தலைசிறந்து விளங்கும் மகான்களால், பிரிவு மனப்பான்மையை இழுத்துப் பிடித்துக் காரியம் நடத்த இயலும்? அப்படிச் செய்தாலும் அவர்களுக்குப் பின், வருங் காலத்தில் அரசியல் பணியில் ஈடுபடுகிறவர்களுக்கு அந்த சக்தி இருக்கும் என்பது சந்தேகம். பெரிய பாண்டம் செய்து அது உடைந்து போனபின் கவலைப்படுவதைக் காட்டிலும் சிறு பாண்டங்களாகவே செய்து முடிப்பது நலம்.

தற்போது, பிரதேச ராஜ்யங்களின் அதிகாரங்களையெல்லாம் கேந்திர ஆட்சிக்கு உறிஞ்சிக் கொள்ளும் நடவடிக்கைகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன.

இது வருங்காலத்தில் நிலைத்து நிற்க முடியாத ஒரு ஏற்பாடாகும். எதிர்காலத்தில் நடக்கப் போவதை உணர்ந்து அதற்குத் தகுந்தவாறு இப்பொழுதிலிருந்து கட்டடம் நிர்மாணிப்பது புத்திசாலித்தனம்.

ஆகவே, பிரதேச ராஜ்யங்களின் அதிகாரங்களைக் குறைக்காமல் அவற்றின் பொறுப்பையும் சுதந்திர உணர்ச்சியையும் அதிகப்படுத்தி வர வேண்டும். சுதந்திரப் பொறுப்பை யுணர்ந்து நல்ல முறையில் பிரதேச ராஜ்யங்கள் நடைபெறுமாறு வழியும் முறைகளையும் தேடி அந்த நிலைக்குச் சாதகமான வகையில் கேந்திர அரசாட்சியை நிர்மாணித்துக் கொள்ள வேண்டும். அதாவது மத்திய ஆட்சியானது, பிரதேச ராஜ்யக் கூட்டாட்சியாக இருக்க வேண்டும்.

சில இன்றியமையாத விஷயங்களில் தான் மத்திய நிர்வாகம் நடைபெற வேண்டும். அவை ஒழிந்த மற்ற விஷயங்களில் பிரதேச ராஜ்யங்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து அந்தப் பொறுப்பை வகிக்கும் தகுதியைப் போற்றி வரவேண்டும்.

தற்போது இதற்கு நேர்மாறாக நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. "நீங்கள் கடன் எழுப்ப வேண்டாம். மத்திய அரசாங்கமே எல்லாருக்கும் வேண்டிய தொகைக்குக் கடன் வாங்கும்" என்று எல்லாரும் சேர்ந்து தீர்மானித்திருக்கிறார்கள்.

"சிறு தொகை சேமிப்பு வருமானம் தான் உங்களுக்கு" என்று மத்திய நிதி மந்திரியின் உத்தரவைப் பிரதேச மந்திரிகள் ஒப்புக் கொண்டு விட்டார்கள். வரிகள் திட்டத்திலும், வர வரப் பிரதேச உரிமைகள் குறைந்து கொண்டே வருகின்றன.

இனிமேல் பிரதேச அரசாங்கங்களுக்கும் அந்தப் பிரதேசத்திலுள்ள பெரிய முதலாளிகளுக்கும் எந்த விதத்திலும் சம்பந்தம் இராது. ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று போட்டுக் கொண்டு ஒவ்வொரு சிறு காரியத்துக்கும் கட்சிக்காரர்களும் மந்திரிகளும் மாதம் தவறாமல் விமானம் ஏறி தில்லிக்கு விண்ணப்பதாரர்களாகச் சென்று வருகிறார்கள். இன்னும் சிலநாள் கழிந்ததும் விற்பனை வரியும் சந்தோஷமாக மத்திய அரசாங்கத்துக்குக் கொடுத்து விடப்படும் என்று எதிர்பார்க்கலாம். நிலவரியும் மாறுதல் அடையும். எண்ணெய்க்கும் புகையிலைக்கும் மில் துணிக்கும் வரி போடுவது போல் எல்லாச் சாகுபடி பயிர்களுக்குமே மத்திய ஆட்சியே இனிமேல் வரி போட்டுக்கொண்டு பிரதேச நிர்வாகத்துக்காக 'பட்ஜெட்' போட்டு மான்யங்கள் தரும் காலமும் சீக்கிரம் வரும்.—அதாவது தற்போது நடைமுறையிலிருந்து வரும் போக்கு இப்படியே நடந்து கொண்டு போனால்.

இதன் விளைவை உணர்ந்த பிரதேச மந்திரிகள், எடுத்துச் சொல்லி விவகரிக்கக் கூச்சப்பட்டு, விட்டுக் கொடுத்து வருகிறார்கள். தாற்காலிகமாக அவர்களுக்கு இதில் சௌகரியங்களும் உண்டு. வரி போடுவதெல்லாம் கேந்திர அரசாங்கம் என்று மக்களிடையே சொல்லிச் சமாளித்துக் கொண்டு போகலாம் அல்லவா?

இது எதிர்காலத்தில் அனர்த்தத்தில் முடியும். 'நமக்கென்ன வந்தது, நம்முடைய காலத்தில் நாம் நிர்வாகம் சரியாக நடத்தி விட்டால் போதாதா?' என்று எண்ணுவது தவறான மனப்பான்மை. நாட்டின் அரசாங்கம் ஒரு பெரிய தோப்பைப் போலாகும். வளரும் மரங்களை வெட்டி, விறகுக்கு உபயோகித்து விட்டால் வரும் காலத்தவர்களின் கதி என்னவாகும்? எதிர் காலத்தை உத்தேசித்துத் திட்டங்கள் போடுகிறோம். வருங் காலத்தில் அரசாட்சி எப்படி யிருக்கப் போகிறது என்பதை உணர்ந்து திட்டம் போட வேண்டும். எல்லா வருவாயும் செல்வாக்கும் உறிஞ்சித் தில்லியில் சேர்த்துக் கொண்டு பிரதேச சர்க்காரை ஜில்லா போர்டைப் போல் ஆக்கி விடுவது நல்ல அரசியல் திட்டமாகாது.

நம்முடைய அரசியல் நிர்ணயச் சட்டத்தைக் கூர்ந்து ஆராய்ந்தால் இந்த உண்மையை அதை நிர்மாணித்தவர்கள் கண்டு உணர்ந்திருந்தார்கள் என்பது வெளியாகும். இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அடிப்படைத் தத்துவமானது கூட்டாட்சித் தத்துவம். ஏக போககேந்திர ஆட்சி தத்துவமல்ல. ராஜ்யங்களின் சுதந்திரத்தை இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் மறுக்கவில்லை. ஆனால் சமீபத்தில் அந்தக் கொள்கை செல்லரித்த ஓலையாகி வருகிறது.

ஆகாச வெடி

"தமிழ் நாட்டில் இன்னும் ஆறு புதிய சர்க்கரை ஆலைகள் துவக்குவதற்குச் சென்னை சர்க்கார் அனுமதி அளித்திருக்கிறது." — சென்னைத் தொழில் மந்திரி

மந்திரியின் அறிவிப்பு, சர்க்கரை விலை உயர்வு, சிக்கனம் காரணமாக இப்போது காப்பி டம்ளர்களில் ஏற்பட்டிருக்கும் கலக்கத்தைப் போக்கும் என்று கருதப்படுகிறது.

✶

"கொசு வலைகளை ஏற்றுமதி செய்ய இந்திய வர்த்தகர்களுக்குச் சர்க்கார் அனுமதி அளித்து விட்டது." —செய்தி

இந்தச் செய்தியைச் சென்னை மாம்பலம், குடந்தை முதலிய இடங்களில் உள்ள கொசுக்கள் வெகுவாக வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை !

★

"சர்க்கார் காரியாலயங்களில் தாண்டவமாடும் ஊழல்களைக் கண்டித்துக் கிழக்குப் பாகிஸ்தான் சர்க்காருக்கு 143 கார்டுகள் எழுதினேன். அதற்கு இன்னமும் பதில் வரவில்லை." — ஒரு பாகிஸ்தானி

இன்னும் ஒரு கார்டு எழுதினால், ஊழல்களுக்கு 144 போட்டதாகுமே!

✶


"அமெரிக்காவில் நடக்கும் விருந்துகளிலெல்லாம், இந்திய முந்திரிப் பருப்புகளுக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருகிறது." —இந்தியப் பொருளாதார இலாகா

இந் நாட்டில் நடக்கும் விருந்துகளில் இப்போதெல்லாம் முந்திரிப் பருப்புகளைத் தேடிப் பார்க்க வேண்டிய நிலைமைக்குக் காரணம் புரிகிறது!

★

"செஞ்சீனாவில் பஞ்சம் மிகுந்த தென் பகுதிகளில் தேசிய சீன விமானங்கள், உணவுப் பொட்டலங்களைப் போட்டு விட்டுத் திரும்பின." —செய்திக் குறிப்பு

தங்களுடைய உதவியை ஆகாய அளவுக்குச் செஞ்சீன மக்கள் புகழ வேண்டும் என்ற கருத்து போலும்.


மணம்கவர்
மணம்...
ரெமி
ஸ்னோ &
பவுடர்
இலங்கையில் கிடைக்குமிடம்:
AVRA Ltd., Colombo.

மாதர்குல திலகங்கள்



சமீபத்தில் பாரத மக்களை 'இன்புளுயன்ஸா' சுரம் நெடுகிலும் பிடித்தபோது லண்டனிலிருந்து ஒரு செய்தி வெளியாயிற்று. பிரிட்டனில் இந்திய தூதுவர் பதவி வகித்து வரும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்களுக்கும் 'இன்புளுயன்ஸா' சுரம் கண்டிருப்பதாக வெளியான செய்திதான் அது. பிரிட்டனுக்குள் மேற்படி சுரம் நுழையாமல் தடுக்க எவ்வளவோ முன்னேற்பாடுகள் செய்திருந்தார்கள். அப்படியிருந்தும் இந்தியத் தூதுவர் ஸ்ரீமதி விஜயலட்சுமிக்கு அந்த சுரம் கண்டது ஆச்சரியமில்லை. ஏனெனில் இந்திய மக்களைப் பாதிக்கும் எந்த விஷயமும் தங்களைப் பாதிப்பதாகக் கருதி வரும் உத்தமத் தலைவர்கள் பலர் இருந்து வருகிறார்கள். அவர்களில் ஸ்ரீமதி விஜயலட்சுமியும் ஒருவர். இந்திய மக்களை விட்டு அவர் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து வந்த போதிலும், ''இந்திய மக்களுக்குச் சுரம்'' என்ற செய்தி அவருக்கும் சுரத்தை உண்டாக்கியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

இந்திய மாதர்களிலேயே வேறு யாரும் வகிக்காத பெரிய பதவிகளை வகித்து வரும் ஸ்ரீமதி பண்டிட், 1900 ஆண்டு ஆகஸ்டு மாதம் 18-ந் தேதி பிறந்தார். நேருஜிக்கு அப்போது வயது ஒன்பது. ஸ்ரீமதி பண்டிட் பிறக்கும்போது அவரது தகப்பனார் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். சிறுவர் நேரு தமக்கு இளைய சகோதரன் ஒருவன் பிறக்கப்போகிறான் என்று எண்ணியிருந்தாராம். ஆனால் பிறந்தது பெண் குழந்தை என்று கேள்விப் பட்டதும் நேருவுக்கு ஆத்திரமே வந்து விட்டதாம்! அப்பேர்ப்பட்ட அருமைத் தங்கையின் பிற்கால வாழ்க்கை எவ்வளவு ஒப்புயர்வற்றதாக விளங்கி வருகிறது என்பதைப் பார்க்கலானோம். ஸ்ரீமதி பண்டிட், நேருஜியின் அலங்கார சகோதரியாக மட்டும் விளங்கி வராமல், தேசப் பணியில் அவருக்குப் பக்க பலமாக விளங்கி வருகிறார்.

ஸ்ரீமதி பண்டிட்டின் பூர்வப் பெயர் ''ஸ்வரூபா'' என்பதாகும். காஷ்மீர அந்தணக் குடும்ப வழக்கப்படி ஒரு பெண்ணுக்கு இரண்டு முறை பெயரிடுவது வழக்கம். குழந்தை பிறந்ததும் ஒரு முறை பெற்றோர் பெயரிடுவார்கள். பிறகு திருமணத்தின்போது மணமகன் வீட்டார் புதிதாகப் பெயரிடுவார்கள். இரண்டாம் முறை வைக்கும் பெயர்தான் நிரந்தரமாக விளங்கிவரும். இந்த வழக்கத்தை அநுசரித்து ஸ்ரீமதி பண்டிட் அவர்களின் விவாகத்தின் போது ''விஜயலட்சுமி'' என்று பெயரிட்டார்கள். ரஞ்சித் சீதாராம் பண்டிட் என்ற பிரபல வழக்கறிஞருக்கு விஜயலட்சுமி, வாழ்க்கைத் துணைவியானார். ஸ்ரீ சீதாராம் பண்டிட் சரித்திர ஆராய்ச்சிகளில அந்நாளில் பிரசித்தமாக விளங்கி வந்தார்.

இல்லற வாழ்க்கை நடத்தும் போதே, தேசப் பணியிலும் இறங்கினார் ஸ்ரீமதி பண்டிட். தேசபக்தர் மோதிலால் குடும்பத்தில் பிறந்த குழந்தையும் தேசியம் பாடுமன்றோ? காந்திஜி தலைமைவகித்து நடத்திய ஒவ்வொரு இயக்கத்திலும் ஸ்ரீமதி பண்டிட் பங்கெடுத்துக் கொள்ளத் தவறியதில்லை.

தேசியக் கைங்கரியங்களில் ஈடுபட்ட போதிலும், ஸ்ரீமதி பண்டிட் தமது சொந்த ஊர்ப் பணிகளை மறந்து விடவில்லை. அலகாபாத் நகராண்மைக் கழக உறுப்பினராக விளங்கி நகர மக்களுக்குப் பல துறைகளிலும் சேவை புரிந்து வந்திருக்கிறார். 1937-ல் அமைந்த மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சியில் ஐக்யமாகாண காங்கிரஸ் சர்க்காரில், ஸ்தல ஸ்தாபன இலாகா மந்திரிப் பதவி ஏற்றார். அகில இந்திய ஸ்திரீகள் சங்கத்துக்கு நீண்ட காலம் தலைவராக விளங்கி இந்திய மாதர் குல நல்வாழ்வுக்காகச்சலியாதுபாடுபட்டுவந்தார்.

உலக ஸ்தாபனமாக விளங்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கு, ஸ்ரீமதி பண்டிட் அவர்கள் 1952-ம் ஆண்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சான்பிரான்ஸிஸ்கோ நகரில் ஐ. நா. சபையின் முதலாவது கூட்டம் நடந்தபோது இந்தியா விடுதலை பெறவில்லை என்பது நினைவிருக்கலாம். இந்திய காங்கிரஸ் மகாசபையின் பிரதிநிதியாக ஸ்ரீமதி பண்டிட் அந்த முதலாவது கூட்டத்துக்குச் சென்று இந்திய மக்களின் சுதந்திரக் கோரிக்கையைத் தைரியமாக வெளியிட்டு, யுத்த வெறி கொண்ட நாடுகளின் உள்ளத்தில் நல்ல மன மாறுதலை உண்டாக்கினார்.

ரஷ்யாவிலும், அமெரிக்காவிலும் தூதர் பதவி வகித்து இரு வல்லரசுகளின் இதய நாடிகளையும் நன்குணர்ந்தவர் ஸ்ரீமதி பண்டிட். இப்போது இங்கிலாந்தில் இந்தியப் பிரதிநிதியாகப் பதவி வகித்து, இந்தியா-பிரிட்டன் நல்லுறவு விட்டுப் போகாமல் தடுக்கப் பாடுபட்டு வருகிறார். உலகம் முழுவதுமுள்ள ஸ்திரீகள் விஜயலட்சுமியைச் சமாதான லட்சுமியாகப் பாவித்துக் கொண்டாடும் வகையில், உலக சமாதானத்துக்காகப் பாடுபடும் தமது தமையனுக்குச் சர்வதேச அரங்கில் உதவிகள் புரிந்து வருகிறார்.



தங்கமலை ரகசியம்



காந்தன்

இந்தப் படத்தைப் பார்த்ததும் எனக்கு முன்பு எப்பொழுதோ படித்த ஒரு தமிழ் நாவல் நினைவுக்கு வந்தது. அந்த நாவலில் சம்பவங்களுக்கும் கதாபாத்திரங்களுக்கும் பஞ்சமே இருக்கவில்லை. சம்பவங்களெல்லாம் தனித் தனியாகப் படிக்கும் போது சுவாரஸ்யமாகவே இருந்தன. ஆனால் முக்கியமான கதைப் பகுதியோடு அவைகள் சிறிதும் ஒட்டவில்லை. ஹோட்டல் ரஸம் சாதம் மாதிரி தனித் தனியாக நின்றன. எந்தப் பாத்திரத்துக்கும் தனியாக அந்தஸ்து கொடுக்கப்படவில்லை. ஆதலால் ஆண் பாத்திரங்களெல்லாம் கதா நாயகர்களாகவும், பெண் பாத்திரங்களெல்லாம் கதாநாயகிகளாகவும் தோற்றமளிக்கலாயினர்.

அத்தகைய சங்கடமான நிலைமைதான் "தங்கமலை ரகசிய"த்தில் கடைசிவரையில் இருக்கிறது.

கதையின் ஆரம்பத்தில், கதாநாயகன், கதாநாயகி மாதிரி அழகாபுரிச் சக்கரவர்த்தி ஆதித்தனும், மங்களபுரி இளவரசி நந்தினியும் தோற்றம் அளிக்கின்றனர். இளவரசி நந்தினி மன்னர் மன்னனான ஆதித்தனைக் காதலிக்கிறாள். ஆனால் ஆதித்தனது மனம் அவள் தோழி குமுதாவையே நாடுகிறது. இதற்கு நந்தினியின் விபரீத விளையாட்டே உரமிடுகிறது. குமுதாவை இளவரசியாக வேஷமிட்டு விளையாடியதற்கு விபரீத பலன் கிடைக்கிறது. ஆதித்தன் குமுதாவையே மணம் புரிந்து கொள்கிறான். சக்கரவர்த்தினியாக வேண்டும் என்னும் அவளது ஆசையில் மண் விழவே, நந்தினி உடனே 'வில்லி'யாக மாறிக் குமுதாவை ஒழித்துவிடத் திட்டமிடுகிறாள். மெதுவாகச் சக்கரவர்த்தி ஆதித்தனின் அரண்மனைக்குள் புகுந்து அவன் ஆதரவில் இருந்து கொண்டு சக்கரவர்த்தியின் குழந்தை இளவரசன் விக்கிரமனைக் காட்டுக்கு அனுப்பி வைக்கிறாள். பிறகு மந்திரவாதி மகேந்திரனின் உதவியால் ஆதித்தனை முத்து மாலையாகவும், குமுதாவைப் பிச்சைக்காரக்கிழவியாகவும் மாற்றி விடுகிறாள். சதிகாரன்' மகேந்திரன் ஆதித்தனாக உருமாறிவிட இருவரும் ராஜ்ய பாரம் வகிக்கின்ற

னர். மகேந்திரனின் முதல் மனைவியின் மகள் அமுதாவை நந்தினியே வளர்க்கிறாள்.

கதை முடிந்து விட்டது என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. இன்னும் இடைவேளையே வரவில்லையே?

இந்தப் படத்தில், ஒவ்வு பெற்ற நட்சத்திரங்கள் மீண்டும் ஒளிர்கின்றனர். ஆனால் ஒளி என்னவோ மங்கித்தான் போயிருக்கிறது.

பழைய சினிமா நட்சத்திரமான எம். வி. ராஜம்மா குமுதாவாகத் தோன்றி, காதல் புரிந்து கல்யாணமும் செய்து கொள்கிறார். ஆதிகாலத்து நட்சத்திரமான டி. ஆர். ராஜகுமாரி வில்லி நந்தினியின் பாகத்தை ஏற்று, சக்கரவர்த்தியைக் காதலித்து, 'தம்மை மறந்து' நடிக்கிறார். காதல் கட்டங்களில் அவர் நடித்தபோது அவரது துணிச்சலைப் பாராட்டினேன்! வில்லியாக மாறினபோது உண்மையிலேயே வியந்து போனேன். அந்தத் தோற்றத்தில் ராஜகுமாரியைப் பார்த்த போது, எனக்கு எப்போதோ வறண்டுபோன நதியின் நினைவும், பாழடைந்த பங்களாவின் நினைவும்தான் வந்தன.

பழைய நடிகர்கள் தங்களுக்கு ஏற்ற பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். நட்சத்திரங்களின் வயது தங்கமலை ரகசியம் போலப் பாதுகாக்கப்படுவதால் நிகழும் விபரீதம் இவையெல்லாம்!

பலாப்பழத்தின் கெட்டியான தோலையும் சடையையும் அகற்றின பிறகு உள்ளே பலாச்சுளை தோன்றுவது போல், இப் படத்தின் ஆரம்பத்தில் பல காட்சிகளுக்குப் பிறகு, 'இடைவேளை' தீர்ந்ததும், சுவாரஸ்யமான காட்சிகள் வருகின்றன. கனத்தகாரமான வனாந்தரங்களும், மத்தகஜங்களும் தோன்றுகின்றன. ஒரு யானையின்மேல் சிவாஜி கணேசன் காட்டு மனிதன் கஜேந்திரனைக் காட்சியளிக்கிறார். கொம்பு ஊதி யானைக் கூட்டத்தை வரவழைப்பது, முதலையிடம் சிக்கிய யானையைத் தப்புவித்து முதலையோடு சண்டையிடுவது, காட்டு மனிதனாக நடிப்பது ஆகிய எல்லாக் கட்டங்களிலும் பிரசித்தி பெற்ற 'டார்ஜான்' படத் தொகுதிகளைத் தமிழில் பார்ப்பதுபோல் இருந்தது.

"தங்கமலை ரகசியத்"தில் குறிக்கோள் எதுவும் இல்லாமல், நவராத்திரிக் கொலுவில் உள்ளே பருக்கும் பலவிதமான பொம்மைகளை எடுத்து வைப்பதுபோல், திரைப் படத்தின் ருசி ஒன்றை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு, பலவிதமான காட்சிகளைப் புகுத்தியிருக்கிறார்கள். காட்சிகள் என்னவோ சுவாரஸ்யமாகத்தான் இருக்கின்றன. ஆனால் அவற்றின் பலன்தான் பூஜ்யம். ஏலக்காய், திராட்சைப் பழம், பால், குங்குமப் பூ, சர்க்கரை, முந்திரிப் பருப்பு இவைகளைத் தனித்தனியாகச் சுவைத்து விட்டு, பாயஸம் சாப்பிட்டதாக நினைத்துக் கொண்டு, இருப்பினும் முடியுமானால் "தங்கமலை ரகசிய"த்தையும் படமாக நினைத்து ரஸிக்கலாம்.

சிவாஜி கணேசன் மிகவும் திறமையாக நடித்திருக்கிறார். முற்றிலும் புதிய தோற்றத்தில், மெய்ப்பாடு தோன்ற நடித்துத் தாம் ஏற்றுக்கொண்ட பாத்திரத்துக்கு நல்லுருவம் கொடுக்கிறார். வயோதிகனாக நடிக்கும் போது அவரது நடிப்புத்திறமை முழுவதும் வெளிப்படுகிறது.

அமுதாவாக நடிக்கும் ஜமுனாதான் படத்தின் கதாநாயகி. எல்லாக் கட்டங்களிலும் அவர் நன்றாய் நடித்திருக்கிறார்.

சக்கரவர்த்தி ஆதித்தனாக நடிக்கும் எம்.என். நம்பியார் வழக்கமான திறமைகளைக் காட்டி நன்றாய் நடித்திருக்கிறார்.

சின்ன அண்ணாமலை, லட்சுமணன் இருவரும் "தங்கமலை ரகசிய"த்தின் கதையமைப்பின் பொறுப்பை ஏற்றிருக்கின்றனர்.

மந்திரம், மாயம், தந்திரம், ஜாலம் முதலியன வெல்லாம் நிறைய இப் படத்தில் இடம் பெற்றிருக்கின்றன. அவைகளை மிகவும் திறமையாகப் படமாக்கி யிருக்கின்றனர். ஆனால், பண்பு நிறைந்த, உணர்ச்சி மிகுந்த கதைகளைப் படம் பிடித்து நாட்டு மக்களுக்கு வழி காட்ட வேண்டிய தலைசிறந்த சாதனமாகிய சினிமா இப்படி அர்த்தமற்ற காட்சிகளுக்கு விரயமாகின்றதே என்பதை நினைத்து வருந்தாமல் இருக்க முடியவில்லை.

திரு ப. நீலகண்டன் இப்படத்துக்கு வசனம் அழகாக எழுதி யிருக்கிறார்.

கஜேந்திரனும் அமுதாவும் உல்லாஸ பவனி வரும் வர்ணக் காட்சிகள் பிரமாதமாயிருக்கின்றன. கண்ணுக்குக் குளிர்ச்சியாயும், மனக்கு ரம்மியமாயும் இருக்கின்றன.





அழகிற்கு
அழகிற்கும் கண் குளிர்ச்சிக்கும் உகந்தது
ஐடெக்ஸ் கண்மை
அரவிந்த் பிந்தி
குங்கும் சாந்து
(ஆறு கலர்களில்) உபயோகியுங்கள்
குறிப்பு: கடைகளில் வாங்கும்போது கண்மை, சாந்து என்று மட்டும் கேளாமல் ஐடெக்ஸ் கண்மை EYETEX, அரவிந்த் பிந்தி ARAVIND BINDI என்று கேட்டு இதில் காணும் மார்க்கைக் கவனித்து வாங்குங்கள்.
எங்கும் கிடைக்கும்
EYETEX
REGD
REGD. TRADE MARK
ஐடெக்ஸ்
கண்மை
தயாரிப்பவர்கள்:
அரவிந்த் லாபரட்டரீஸ், ஆற்காட் ரோட், மதராஸ் - 26
ஏஜண்டுகள்: ஜானகிராம் & கோ., 122, கோவில் வீதி, பாதுல்லா, சிலோன் ○ மஜேன்மணி விளான் புக் டிபோ, கோலாலம்பூர், மலேயா ○ ராஜன் ஸ்டோர்ஸ் சைனா பஜார், திருச்சி ○ வெங்கடேஷ் ஏஜன்ஸீஸ், 12-ஏ, தாஸ்பிரியா பார்க், மேற்கு கல்கத்தா-26 ○ கமலா ஸ்டோர்ஸ், மதுங்கா, பம்பாய்-19



போன பிறகு.. புது வீடு மகனுக்கு, புளியமரம் மைத்துனனுக்கு, பெட்டிப் பணம் மனைவிக்கு, பெயராக் கடன் தம்பிக்கு இப்படியெல்லாம் மரண சாசனம் எழுதி வைத்து, போனபிறகும் இங்கே பூசலுக்கு விதை போடும் புண்ணியவான்கள் உள்ள இந்த உலகத்தில், '' கவிஞனும் உலக வழக்கை ஒட்டி, 'உயில்' எழுதுவது உண்டு.

பர பர வென்று 'உயில்' எழுதத் தொடங்குகிறான் ஒரு கவிஞன். விட்டுச் செல்வதற்கு என்ன இருக்கப் போகிறது ஏழைப் புலவனுக்கு? அவன் உடம்பு இருக்கிறது. அதை, யாராவது நண்பர்கள், எங்கேயாவது வேண்டாத இடத்தில் புதைத்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை கவிஞனுக்கு வருகிறது. பிறகு வராதா? இருப்பது ஒரே சொத்து. அதையும் கொண்டு போய்ப் பதுக்கி விட்டால்? நண்பனை அழைக்கிறான் கவிஞன். அவனிடம் சொல்கிறான்: 'இங்கே வா தம்பி. தாரகை பனிச்சிடும் பரந்த வான வெளி இருக்கிறதே, அந்த மேலாப்பின் கீழ், குழி ஒன்று தோண்டு. அதில் என் உடம்பைக் கிடத்தி விட்டுப் போய் விடு. அங்கே, அந்தப் பரந்த வெளியிலே படுத்தால்தான் தூக்கம் வரும். மேலே நீலவானம் விரிந்து கிடந்தால்தான், இந்த உடம்புக்குச் சரிப்பட்டு வரும். என்ன யோசிக்கிறாய்? இவன் போகிறானே என்றா? அட பைத்தியமே, களிப்போடு வாழ்ந்தேன், இன்று களிப்போடு போகின்றேன். சலியாத மனத்தோடு இதோ இந்த உடம்பை மண்ணிலே போடுகின்றேன். நான் விரும்பிய இடம் அப்பா இது, இந்த மண். எத்தனை நாட்களாக இதைப் பெற ஆசைப்பட்டிருக்கிறேன், தெரியுமா?

ஆமாம், நீ நினைப்பது தெரியும், என்னைப் பற்றி ஏதாவது சமாதியின் மேலே எழுதி வைக்க வேண்டும் என்று எண்ணுகிறாய், இல்லையா? உலகம் என்னை மறந்து விடக் கூடாதல்லவா? என்ன எழுதப் போகிறாய்? முந்நூறு நாவல்கள், மூவாயிரம் கதைகள், முப்பதினாயிரம் கவிதைகள், எழுதிய மூவாப் பெரும் புலவன் என்றுதானே! அட, பைத்தியமே, அதெல்லாம் வேண்டாம். என் உண்மையான பெருமை தெரியுமா? இந்த மண்ணையும் இந்த வானையும் நான் ஆராக் காதலோடு, களிப்போடு பருகி வாழ்ந்தது. ஆகவேதான் என் உடம்பை இங்கே வானத்தின் கண் பார்வையில் இந்த மண்ணிலே கிடத்தச் சொல்கிறேன். என்னைப் பற்றி ஏதாவது எழுத வேண்டுமானால் இதை எழுது: 'இந்த இடத்தில் தூங்குகின்றவன் இங்கே வரவேண்டும் என்று நெடு நாளாகத் துடித்தவன். அலைகடலின் கொந்தளிப்பையெல்லாம் கடந்து மாலுமி கரை சேர்ந்து விட்டான். மலைச் சாரலில் வேட்டைக்குச் சென்ற வேடன் வீடு திரும்பி விட்டான்.'

பள பள என்னத் தாரகைகள்
படரும் நீல நெடுவான

வெளியின் கீழே குழி தோண்டு;
விட்டெனை நீ சென்றுவிடு

களிப்பில் அழுந்தி வாழ்ந்தேன் காண்
களித்த மனத்தோடு போகின்றேன்

விளியா நெஞ்சுடன் உடலிதனை
வீழ்த்துகின்றேன் தரையினிலே

எந்தன் சமாதி மேலிந்த
எழுத்தை எழுதிச் சென்றுவிடு:

வந்திட இங்கே நாளெல்லாம்
விழைந்தவன் இங்கே துயில்கின்றான்

சிந்தும் அலைக்கடல் வெளிகடந்து
சேர்ந்தான் இக்கரை மாலுமியும்;
விஞ்சும் கோட்டை விடுத்துத்தன்
வீட்டை அடைந்தான் வேடுவனும்.'

[கோட்டை: மலை.]

'உயில்கள்' மூலமாக, இறந்தவன் உயிரோடு இருப்பவர்களைக் கட்டுப்படுத்துவதைத்தான் சாதாரணமாகக் காணலாம். ஆனால் இந்தக் கவிதை உயில் ஒருவரையும் எவ்வகையிலும் கட்டுப்படுத்த வில்லை. 'எல்லையற்றுப் பரந்த வானவெளியின் கீழே என்னை விட்டுவிடு' என்றுதான் கவிஞன் கேட்கிறான். வாழ்நாள் முழுதும் அவன் பெற்று வளர்த்த அழகுணர்ச்சியும் நிறைவும், இந்தப் பாடலில் வடிவாகின்றன. இங்கே ஆணவம் எதுவுமில்லை, தளர்ச்சி இல்லை, சாகிறோமே என்ற துயரமில்லை, அச்சமில்லை. வாழ்வைப் போலவே அதன் முடிவான சாவையும் இயற்கையின் நியதியாகக் கவிஞன் வரவேற்கிறான். சாவை விடுதலையாகவும் எண்ணுகிறான். பாடலின் சுருதி விடுதலை நிறைவு.

இதே முறையில், 'ஒன்றும் வேண்டாம்' என்று பேசுகிற இன்னொரு கவிதைச் சாசனத்தைப் பார்க்கலாம். இது தன்னுடைய காதலனுக்கு ஒருத்தி சொல்வதாக அமைந்திருக்கிறது. அவள் சொல்கிறாள்:

'நான் இறந்த பிறகு, என்னை எண்ணி இரங்கற் பாடல்கள் எதுவும் நீ இசைக்க வேண்டாம். துயரத்துக்கு அறிகுறியாக சைப்ரஸ் மரத்தையும், மாறாத அன்பின் அடையாளமாக ரோஜா முதலிய மலர்ச் செடிகளையும் சமாதியில் நட்டு வளர்ப்பார்களே, அப்படியெல்லாம் நீ ஒன்றும் செய்ய வேண்டாம். வெட்ட வெளியிலே என்னை விட்டு விடு. பனியிலும் மழையிலும் நனைந்து, எழிலை வளர்க்கும் பச்சைப் பசும்புல் என்மேல் வளர்ந்தால் போதும். என்னை நினைப்பாயா, முடிந்தால் நினை; இல்லாவிட்டால், பாதகமில்லை, மறந்து விடு.'

இப்படிப் பேசுகின்றவள் சாவுக்குப் பின் வரும் தன் நிலையை எண்ணுகிறாள்: 'அங்கே கல்லறையின் நிரந்தரமான இருளில், நான் என்ன செய்யப் போகிறேன்? நீல நிழல்கள் படர்கின்றனவே, இங்கே இந்த உலகில், இவற்றை நான் காண முடியாது. மழை கலகலவென்று பெய்யுமே, அதையும் உணர முடியாது. சோலையில் தன்னுடைய துயரத்தைத் தொட்டுத் தொட்டு அன்றில்-பறவை பாட்டிசைக்குமே, அதையும் கேட்க முடியாது. காலமெல்லாம், ஒரே மங்கலாய், தொலையா நெடு இருளாய் நீளும். நான் அதன் கதியிலே ஆழக் கூடும். கணக்கில்லாத கனவுகள் கண்டு கொண்டே இருக்கக் கூடும். உன் நினைவா? நினைப்பேன், நினைப்பேன். அதுவும் செய்ய முடியவில்லை என்றால், என் கருத்து அழிந்து விட்டது என்றால், உன்னை மறந்து மண்ணோடு மண்ணாய் விடுவேன்.'

அன்பே, என்னை யான் இறந்தபின் எண்ணி நீ
இரங்கற் பாடல் இசைத்திட வேண்டிலேன்.
பின்னர் யான் துயில் மண்ணிலே நிழன்மரம்
பிச்சியும் வைத்து நீ வளர்க்க விரும்பிடேன்.
என்றும் பனியிலே மழையிலே நனைந்தெழில்
ஏறுபுல் எந்தன்மேல் ஏறிடிற்போதும். நீ
என்னை நினைக்க முடிந்தால் நினைந்திடு.
இல்லை என்றால் எனை முற்றும் மறந்திடு.
நீல நிழலிங்கு நீள்வது கண்டிடேன்,
நீள்வரும் மாமழை நிறைவும் உணர்ந்திடேன்:
சோலை நிலவிலே அன்றிலும் தன்துயர்
தொட்டுத் தொட்டிசை தொடுப்பது
கேட்டிடேன்.
காலம் நீண்டிடும் கழிவிலாக் கங்குலாய்
கனவில் ஆழ்ந்து அதன் கதியில்
அழுந்தலாம்.
காலமெல்லாம் உனை எண்ணினும் எண்ணலாம்
கருத்து இறந்தே உனை மறந்து
மண்ணாகலாம்.

இந்தப் பாடலில் அன்பின் வேகம் அற்புதமான அடக்கத்தின் மூலமாகத் தன்னை இனங் காட்டிக் கொள்கிறது. காலமெல்லாம் வளர்த்த அழகுணர்ச்சிக்கு, சவக்குழி இருளிலே இடம் இல்லையே என்ற ஏக்கம் இங்கே பேசுகிறது. காலமெல்லாம் வளர்த்த காதலுக்கும் கடைசியில் மறதிதான் முடிவோ என்ற சோகம் பாட்டின் இறுதியில் குரல் கொடுக்கிறது. அழகை உணரும் ஆற்றலையும், அன்பை வளர்க்கும் பெருமையையும், சாவின் கை அழித்துவிடுகிறதே என்ற வருத்தமும், தவிர்க்க முடியாத இந்த நிலைக்குத் தலை வணங்கும் அடக்கத்திலே பயிராகும் துயரமும் கனிவும், பாட்டை அருமையான மரண சாசனமாக, இல்லை, வாழ்வின் சாசனமாகச் செய்து விடுகின்றன.

இவ்விரு 'கவிதை உயில்'களும் ஆங்கில இலக்கியத்திலிருந்து வந்து உங்கள் உள்ளத்தில் இடம் பெற முயல்கின்றன. இடம் தரமாட்டார்கள் என்று யாரால் சொல்ல முடியும்?

ஈழ நாட்டுப் பிரயாணம் (26)

சில காலமாகத் தமிழ் நாட்டிலும், தமிழ்கூறும் நல்லுலகமெங்கிலும் தமிழ் அன்பும், தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் பொங்கிப் பெருகுவதைப் பார்க்கிறோம். "வாழிய செந்தமிழ்!" "வாழ்க தமிழ் மொழி!" என்னும் முழக்கங்களைத் தமிழ்கூறும்நல்லுலகமெங்கும் கேட்டு வருகிறோம். சென்ற முப்பது ஆண்டுகளாக எத்தனையோ எழுத்தாளர்களின் சக்தி வாய்ந்த எழுத்துக்கள் தமிழ் மக்களின் தமிழபிமானத்தைத் தூண்டிவிட்டு வளர்த்து வந்திருக்கின்றன. தமிழை வளர்ப்பதற்காகப் பல சங்கங்கள் தோன்றியிருக்கின்றன. மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இப்படியெல்லாம் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் தமிழ் உணர்ச்சி பரவுவதற்குப் பல தமிழறிஞர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். அப்படித் தம் வாழ்நாளெல்லாம் பாடுபட்டு வந்தவர்களில் பேராசிரியர் கல்கி அவர்கள் மிக முக்கியமானவர் என்பதைச் சென்ற முப்பது ஆண்டின் தமிழ் நாட்டு வரலாற்றைக் கூர்ந்து கவனித்த பேரறிஞர்கள் மறுக்க மாட்டார்கள்.

ஆதிசிவன் பெற்று, அகத்திய முனிவன் உவந்து பணி செய்த தமிழ்த் தாயை, மூன்று குலத் தமிழ் மன்னவர்கள் போற்றி வளர்த்த தமிழ் அன்னையை எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னால் மகாகவி பாரதியார் வணங்கி வாழ்த்தி வளர்த்தார்.

அந்தத் தமிழ்த் தாயின் வாயிலாகக் கவியரசர் புலம்பியதைக் கேளுங்கள்:

"என்றந்தப் பேதை உரைத்தான்!
இந்த வசை எனக்கெய்திடலாமோ!"

என்று மனம் நொந்து வருந்தினார். எதைக் குறித்துப் பாரதியார் இவ்விதம் வருந்தினார்? 'மேல்நாட்டுப் புதுக்கலைகளைத்தமிழில் சொல்ல முடியாது; சொல்லும் சக்தி தமிழுக்கு இல்லை" என்று யாரோ ஒரு பேதை உரைத்தது பாரதியார் காதில் விழுந்தது. உடனே அவருக்குக் கோபம் மூண்டது.

"கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!" என்று மனம் வெதும்பினார். இவ்வாறு மனம் வெதும்பிய பாரதியார் தமிழன்னைக்கு எவ்விதமெல்லாம் பாமாலை புனைந்து அணிந்திருக்கிறார் என்பது அனைவரும் அறிந்ததே.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே
— அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!"

என்று கவியரசர் பாடினார். இவ்வாறெல்லாம் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் சேவை புரிந்த கவியரசர் பாரதியாரை அவருடைய ஜீவிய காலத்தில் தமிழர்கள் தக்கபடி கவனிக்கவில்லை என்றும் மகாகவிக்கு உரிய மரியாதை செய்யவில்லை என்றும் அவச்சொல் ஏற்பட்டது. தமிழும் தமிழர்களும் தமிழகமும் செழிக்கப் பாடிய மகாகவியைத் தமிழ் மக்கள் புறக்கணித்து விட்டார்கள் என்ற அபகீர்த்தி ஏற்பட்டது. "பாரதியாரைப் பட்டினி போட்டுக் கொன்றார்கள்" என்று அவர் வாழ்ந்த காலத்துத் தமிழர்கள் மீது சிலர் பச்சையாகக் குற்றம் சாட்டினார்கள்.

அந்த அவச் சொல்லை நீக்கப் பேராசிரியர் கல்கி அவர்கள் அரும் பாடுபட்டார். அவர் பிறந்த எட்டயபுரத்திலே அவருக்கு ஒரு மணி மண்டபம் கட்டி எட்டயபுரத்தை ஒரு புனித யாத்திரை பூமியாக உயர்த்தினார். தமிழ் மக்கள் தங்கள் கவிக்குச் செய்திருக்கும் மரியாதையைப் பார்த்து உலகம் வியக்கும்படி செய்தார். பாரதியார் குடும்பத்தினருக்கு உதவி நிதி அளிக்க ஏற்பாடு செய்தார். 'செத்துப் போனவர்களுக்குத்தான் மணி மண்டபம் கட்டுவார்கள்' என்று சிலர் பாரதியின் ஞாபகார்த்தமாக எழுப்பிய புனிதமான பணியைக் கேலி செய்தார்கள். அந்தப் பழிக்கும் தமிழ் மக்கள் ஆளாகக் கூடாது என்று தீர்மானித்தார். கவிகளும் எழுத்தாளர்களும் அவர்கள் வாழ்நாளிலேயே வசதியுடன் இருக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடு பட்டார். நாமக்கல் கவிஞருக்கு நிதி திரட்டிக் கொடுத்தார். பேராசிரியர் வ.ரா. அவர்களுக்கு நிதி திரட்டி வழங்கினார்.

இந்தப் பணி என்னவோ பேராசிரியர் கல்கி அவர்கள் புதிதாகச் செய்தது என்று யாரும் எண்ணிவிட வேண்டாம்.



பழந் தமிழ் நாட்டு மக்கள் தமிழ்க் கவி ஞர்களையும் பெரியோர்களையும் போற்றுவதில் இணையற்றவர்களாயிருந்தார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அதிகமான் என்று ஒரு மன்னன் இருந்தான். அவனுக்கு நவ யௌவனத்துடனும் தேக ஆரோக்கியத்துடனும் வாழ வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. அதற்காகச் சித்த புருஷர் ஒருவரிடம் சென்று யோசனை கேட்டான். சித்தர் சொன்னார்:

"உன்னுடைய நாட்டின் எல்லைப்புறத்தில் ஒரு மலை இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு கருநெல்லி மரம் இருக்கிறது. அந்தக் கரு நெல்லி மரத்தில் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை ஒரு நெல்லிக் கனி உண்டாகும். பட்சிகள் முதலியவற்றால் அதற்குப் பல ஆபத்துகள் ஏற்படும். அவ்வாறு அதற்கு ஆபத்து நேராமல் பாதுகாத்து அதுவாகப் பழுத்து விழும் போது அதைத் தரையில் விழாமல் துணியால் ஏந்த வேண்டும். பிறகு அந்தக் கனியை ஆண்டவனுக்கு நிவேதனம் செய்து விட்டு அருந்தினால் உன்னுடைய விருப்பம் நிறைவேறும்."

அதிகமான் அவ்வாறே பன்னிரண்டு ஆண்டுகள் அந்தக் கருநெல்லி மரத்துக்குக் காவல் போட்டு, கனி பழுக்கும் சமயத்தில் தானே சென்று பூமியில் விழாமல் ஏந்தி எடுத்து வந்தான். அரண்மனைக்குக் கொண்டு வந்து ஆண்டவனுக்கு நிவேதனம் செய்து சாப்பிடப் போன சமயம் ஔவைப் பாட்டி அதிகமானின் அரண்மனைக்கு வந்தாள். "தொலை தூரம் வழி நடந்து வந்தேன். மிகக் களைப்பாயிருக்கிறது" என்றாள்.

இதைக் கேட்ட அதிகமான் "இதை அருந்துங்கள், களைப்பு தீரும்" என்று கூறித் தான் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் இருந்து பெற்ற, கிடைத்தற்கு அரிய நெல்லிக் கனியை ஔவையிடம் கொடுத்தான். கனியைச் சாப்பிட்ட ஔவையின் களைப்பு உடனே தீர்ந்தது.

"இது என்ன அதிசயமான கனி?" என்று கேட்டாள் ஔவை.

அதிகமான் அந்த நெல்லிக்கனியின் வரலாற்றைக் கூறி "நீங்கள் இந்தக் கனியை அருந்தியதால் தமிழ்நாடும் தமிழ் மக்களும் பல வழிகளில் நலம் அடையப் போகிறார்கள். உங்கள் கவிதையால் தமிழ் நாடு உயர்ந்து மகோன்னதமடையப் போகிறது. நான் இந்தக் கரு நெல்லிக் கனியை அருந்துவதினால் யாருக்கு என்ன பிரயோசனம்?" என்றான்.

"நீ அல்லவோ வள்ளல்" என்று அதிகமானைப் பாராட்டினாள் ஔவை.

இப்படி ஒரு கர்ண பரம்பரைக் கதை தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது. இப்படிப் புலவர்களைப் பாராட்டுவதுதான் தமிழ் மக்களின் பழைய பண்பாடு. இடையில் சில காலம், முக்கியமாக, சென்ற தலைமுறையில் தமிழகம் தன்னுடைய பண்பாட்டை இழந்து விட்டதோ என்று சந்தேகப்படும்படி இருந்தது. அப்படி இருந்த தமிழ் நாட்டை மீண்டும் பண்பாடுள்ள தமிழகமாக மாற்றுவதற்கு அரும்பாடுபட்டு அதில் மகத்தான வெற்றியைக் கண்டவர் பேராசிரியர் கல்கி அவர்கள்.



மகாகவி பாரதியார் கூறினாரே, 'கூறத் தகாதவன் கூறினான்' என்று. அப்படிக்கூறியவவின் தலை கவிழும்படி மேற்கில் வளரும் புதுக் கலைகளை யெல்லாம் அமுது ததும்பும் தமிழில் வேகமும் விறுவிறுப்பும் குறையாமல் எழுதிக் காண்பித்தவர் கல்கி அவர்கள்.

பேராசிரியர் கல்கி அவர்கள் அரசியலில் ஈடுபட ஆரம்பித்த காலத்தில் தமிழுக்கு ஒரு இழுக்கு இருந்து வந்தது. "அரசியல் விஷயங்களைத் தமிழ் மொழியில் எழுத முடியாது" என்று ஒரு குருட்டு நம்பிக்கை இருந்து வந்தது. அந்தக் குருட்டு நம்பிக்கையை அடியோடு தொலைத்தவர் பேராசிரியர் கல்கி அவர்கள். அவர்களுடைய முப்பதாண்டு தமிழ்த் தொண்டின் காரணமாக "அரசியலைப் பற்றித் தமிழில் எழுதுவது போல் வேறு எந்த மொழியிலும் எழுத முடியாது" என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் பஞ்சாங்கம் போல் இருந்து வந்தன. அப்படி இருந்து வந்த பத்திரிகைகளைக் கலை மணம் கமழும் பத்திரிகைகளாக உயர்த்திய பெருமையும்பேராசிரியர் கல்கி அவர்களைச் சேர்ந்ததுதான். பாரத நாட்டுப் பத்திரிகைகளுக்குள்ளே தமிழ்ப் பத்திரிகைகளுக்கு நிகராக வேறெந்த மொழிப் பத்திரிகையையும் கூற முடியாது என்று சொல்லும் அளவுக்குத் தமிழ்ப் பத்திரிகையின் தரத்தை உயர்த்தினார். பகலெல்லாம், தமிழும், தமிழ் மக்களும், தமிழ் நாடும் உய்யச் சிந்தித்தார்; சிந்தித்தவைகளை எழுதினார். இரவெல்லாம் அவைகளைப் பற்றியே கனவுகள் கண்டார். அவருடைய உழைப்பும், அவர் கண்ட கனவும் வீண் போகவில்லை என்பதை இப்பொழுது கண்டு வருகிறோம். அவர் வளர்த்து விட்டுப் போன உயர்ந்த பண்பு தமிழ் நாட்டில் மட்டுமில்லாது தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் ஓங்கி வளர்வதைக் காண்கிறோம்.



திரு ரா. மு. நாகலிங்கம்

அவ்வாறெல்லாம் பாடுபட்ட பேராசிரியரைத் தமிழ்ப் பெரு மக்கள் மறக்கவில்லை. தமிழ் மக்கள் நன்றி மறந்தவர்கள் இல்லை என்பதைச் சென்ற 1956ம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசியில் இலங்கை கண்டி நகரில் நடைபெற்ற கல்கி கலை மன்ற விழாவில் கண்டேன். அன்றையதினம் பேராசிரியர் கல்கி அவர்களைப் பற்றி அறிஞர்கள் பேசியபோது பொங்கிய தமிழ் வெள்ளம் இலங்கைத் தீவையே அடித்துக் கொண்டு போய் விடுமோ என்று கூடப் பயப்பட வேண்டியிருந்தது.

நமது நன்றி

கல்கி கலை மன்ற விழாவைப் பற்றிக் கூறுவதற்கு முன்னால் இந்த விழா நடப்பதற்கு மூலகாரணமா யிருந்தவர்களுக்குத் தமிழ் மக்கள் சார்பாகவும், தமிழ்க் கலை அன்பர்கள் சார்பாகவும் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நமது நன்றிக்கும் வந்தனத்துக்கும் உரிய அந்தப் பெரியவர்கள் யார்? — கேட்பானேன்?— சிங்களவர்கள்தான்! சிங்கள மந்திரிமார்கள் தான்! அவர்கள் தமிழின்மீது அவ்வளவு துவேஷம் பாராட்டாமல் இருந்திருந்தால், கொஞ்சம் மனத்தை விசாலப்படுத்திக் கொண்டு ஈழநாட்டில் தமிழ் மொழிக்கு உரிய ஸ்தானத்தைக் கொடுத்திருந்தால் கல்கி கலை மன்ற விழா நடைபெற்றிருக்குமா என்பது சந்தேகம்தான். இலங்கை சர்க்கார் தமிழ் மொழியின் மீது பகைமை பாராட்டி, "இலங்கை அரசியலில் ஆங்கிலத்துக்கு இடம் கொடுத்தாலும் கொடுப்போம்! தமிழ் மொழிக்கு இடம் தரமாட்டோம்!" என்று பிடிவாதம் பிடித்து வருவதனால்தான் கண்டி நகரில் கல்கி கலை மன்ற விழா கோலாகலமாக நடைபெற்றது. எனவே இலங்கை சிங்கள மந்திரிகளுக்கும், அவர்களுடைய தமிழ் மொழித் துவேஷத்துக்கும், வறட்டுப் பிடிவாதத்துக்கும் நமது மனமார்ந்த நன்றி!

*** *** ***

ஜன்னல் வழியாக ஏறி உள்ளே குதித்து இட நெருக்கடியை உண்டாக்குவதை அடிக்கடி ரயில் வண்டிகளில் பார்த்து வருகிறோம். சில சமயங்களில் சென்னை நகர பஸ்களிலும் பார்க்கிறோம். ஏன்? இலங்கையில் உள்பகுதிகளில் ஓடும் பஸ்களிலும் இந்தக் காட்சியைக் காணலாம். ஆனால் ஒரு மண்டபத்துக்குள்ளே நடக்கும் தமிழ்ப் பேச்சைக் கேட்பதற்கு மக்கள் ஜன்னல் வழியாக ஏறிக் குதித்து இட நெருக்கடியை உண்டாக்குவது என்பது அடிக்கடி பார்க்கக் கூடிய காட்சி அல்ல.

இந்த அதிசயக் காட்சியைக் கண்டியில் கல்கி கலை மன்ற விழா நடைபெற்ற மண்டபத்தில்தான் பார்க்க முடிந்தது. ஏற்கனவே மண்டபத்தில் மக்கள் நிறைந்து விட்டார்கள். விழாவுக்காக வந்திருந்த அறிஞர்கள், ஈழ கேசரி ஆசிரியர் திரு ராஜ அரியரத்தினம், திருமதி சரோஜனி ராமானுஜம், திருமதி ரூபராணி ஜோஸப், திரு கே. ராஜகோபால், கல்கி துணை ஆசிரியர் ஆகியவர்கள் மண்டபத்துக்கு வந்தபோது வெளியில் திறந்த வெளியில் நின்றுகொண் டிருந்தவர்கள் எல்லாம் திறந்திருந்த பலகணி வழியாகத் திமுதிமுவென்று உள்ளே வரத் தொடங்கினார்கள். கல்கி கலை மன்ற விழா நடைபெற்ற இரண்டு மணி நேரமும் அவர்கள் ஆர்வத்துடனும் ஆரவார கரகோஷத்துடனும் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

உண்மையில் கண்டி நகரவாசிகள் எவ்வளவு தூரம் பேராசிரியர் கல்கிமீது பக்தி கொண்டவர்கள், தமிழின்மீது எவ்வளவு மோகம்


பாண்ட்ஸ் கோல்டு க்ரீம்
உபயோகிக்கும் பெண்மணியை
—அவன் விரும்புகிறான்
என்பதை அவன்
மறைப்பதில்லை
முகத்தைக் கழுவியபின், எப்பொழுதும், அற்புத குணம் வாய்ந்த பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உபயோகியுங்கள். இது சருமத்தைப் பாதுகாக்கும் இயற்கை எண்ணெய்களின் நஷ்டத்திற்கு ஈடு கட்டி, உங்கள் சருமத்தைப் புதுமையுடனும் மாசற்றதாகவும் வைக்கும். பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் சருமத் துவாரங்களில் ஊடுருவிச் சென்று அழுக்கை அகற்றி, உங்கள் சருமத்தை முற்றிலும் சுத்தமாக வைக்கும்.
POND'S
cold
cream
இலவச புஸ்தகம்
அழகுபற்றிய குறிப்புகள் கொண்ட "Lovelier with Pond's" என்ற எமது புத்தகத்தை வரவழையுங்கள். பீ. ஓ. பாக்ஸ் நம்பர் 1612, பம்பாய் 1 என்ற விலாசத்திற்கு எழுதவும்
சீஸ்பரோ பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேட்டட்
(பொறுப்பு வரையறுக்கப்பட்டு யு. எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)


All keyed up!
ஒவ்வொரு மர்பி ரேடியோ செட்டும் உங்கள்
இல்லத்துக்கு மேலும் அதிக பெருமையை
அளிக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது.....
உங்களுக்கு இன்பமளித்துப் பல்லாண்டுகள்
சேவை செய்யும்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
மர்பி
இன்று எல்லோராலும் விரும்பப்படும் ரேடியோ!
SOUNDS GOOD!
LOOKS GOOD!
மாடல் 254
• 6 வால்வ் 4 பாண்ட் • AC & AC/DC (இரு மாடல்கள்)
• ரூ. 390/- உள்ளூர் வரிகள் தனி

கொண்டவர்கள் என்பது அப்போது நன்கு தெரிந்தது. மண்டபத்துக்கு உள்ளேயும், வெளியேயும் நெருக்கி அடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்த மக்கள் கூட்டம் பேராசிரியர் கல்கி அவர்களின் பெருமையை இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. மண்டபத்துக்கு வெளியிலும் ஒலிபெருக்கி வைத்திருந்தபடியால் வெளியில் நின்றும் ஆயிரக்கணக்கான மக்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எந்த விதமான முன் அறிவிப்பும் இல்லாமல் நடைபெற்ற கல்கி கலை மன்ற விழாவில் ஏராளமான மக்கள் கூடியிருந்ததுபோல் வேறு எந்த விழாவுக்கும் கூடியதில்லை என்று கண்டி நகர மக்களே கூறிக் கொண்டார்கள்.

மன்றத்தின் நோக்கம்

பேராசிரியர் கல்கி அவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் செய்த சேவைக்கு நன்றி தெரிவிப்பதற்காக அவர் நினைவைப் போற்றுவது, அவர் விட்டுப் போன தொண்டைத் தொடர்ந்து செய்வது, குறிப்பாக, இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பேராசிரியர் கல்கி அவர்கள் செய்திருக்கும் மறக்க முடியாத பணிக்கு ஞாபகார்த்தமாக அவர் பெயரால் மன்றம் நிறுவி அதன் மூலமாகத் தமிழுக்குத் தொண்டாற்றுவது ஆகியவைதான், கல்கி கலை மன்றத்தின் நோக்கங்கள். கல்கி கலை மன்ற விழாவில் பேசியவர்கள் எல்லாருமே இதை நன்கு வலியுறுத்திக் கூறினார்கள்.

பேராசிரியர் கல்கி அவர்களிடம் பெருமதிப்பும் பேரன்பும் கொண்ட ஈழகேசரி ஆசிரியர் திரு ராஜஅரியரத்தினம் விழாவுக்குத் தலைமை தாங்கியது மிகவும் பொருத்தமாயிருந்தது.

இந்த விழாவில் திரு ராஜ அரியரத்தினம் நிகழ்த்திய தலைமைப் பிரசங்கம் திரு கல்கி அவர்களின் வசன நடையைப் போலவே அற்புதமாய் அமைந்திருந்தது.

பேராசிரியர் கல்கி அவர்கள் தமிழுக்குச் செய்த சேவையைப் பற்றித் திரு ராஜ அரியரத்தினம் கூறியதைக் கேளுங்கள் :

" தமிழ் அன்னையைப் பிணைத்திருந்த விலங்குகளை வெட்டித் தமிழன்னையை அரியாசனத்தில் ஏற்றி வைத்தவர் பேராசிரியர் கல்கி. கல்கி அவர்கள் தமிழ் எழுத ஆரம்பிக்கவில்லை என்றால் தமிழ் எந்த நிலையை அடைந்திருக்குமோ அதை இப்பொழுது கூற முடியாது. அவர்கள் எழுத்திலே துள்ளிய ஹாஸ்யத்தைப் போல் வேறு யாருடைய எழுத்திலும் காண முடியவில்லை. அவர் எழுதும் போது எதுகையும் மோனையும் போட்டி போட்டுக் கொண்டு வந்து சேவை செய்தன. வார்த்தைகளோ 'நான் முந்தி நீ முந்தி' என்று அவருக்கு முன்னால் வந்து கைகட்டி நின்றன. தமிழ்கூறும் நல்லுலகில் வாழும் தமிழ்மக்களை எல்லாம் தட்டி எழுப்பித் தமிழ் அன்னைக்குத் தொண்டாற்றும்படி செய்தவர். என்னைப் போன்ற எண்ணற்ற இளைஞர்களைத் தமிழுக்குச் சேவை செய்யும்படி செய்தவர்" என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார். திரு ராஜ அரியரத்தினத்தின் தலைமையுரை அப்படியே பேராசிரியர் கல்கி அவர்களைச் சபையில் கொண்டு வந்து நிறுத்தி விட்டது.



ஏச்விச் லெபாரடரி டைரக்டர் டாக்டர் என். பாலசுந்தரத்தின் புதல்வி பிரேமாவுக்கும் ரங்கூன் அட்வகேட் ஸ்ரீ எஸ். கே. நாராயண அய்யரின் குமாரர் வெங்கடசுப்ரமணியனுக்கும் திருமணம் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. முகூர்த்தத்துக்கும், மாலையில் நடந்த வரவேற்பு வைபவத்துக்கும் பல பிரமுகர்கள் விஜயம் செய்து சிறப்பித்தனர்.

வாழ்க மணமக்கள் !

பேராசிரியர் கல்கியின் கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் தம்முடைய ஜாலக் கண்ணாடியின் மூலமாகச் சபையோருக்குக் காட்டினார் திருமதி ரூபராணி ஜோஸப்.

அவர் தமிழ் மீதும் தமிழ்ப் பத்திரிகைகள் மீதும் ஒரேயடியாக மோகம் கொள்ளும்படி செய்தது பேராசிரியர் கல்கி அவர்களின் தமிழ் எழுத்துத்தானாம். பல்லாயிரக்கணக்கான மக்களும் அறிஞர்களும் கூடியிருக்கும் சபையில் மேடையேறி உற்சாகமாகப் பேசும்படி செய்ததுகூட ஆசிரியர் கல்கி அவர்களின் எழுத்துத்தான் என்று கூறி அவருடைய கதைகளைப் பற்றியும் கட்டுரைகளைப் பற்றியும் உற்சாகமாகப் பாராட்டிக் கூறினார். கள்வனின் காதலியில் வரும் முத்தையனையும் கல்யாணியையும் பற்றிக் கூறும்போது சபையோர், கண்ணீர் விட்டு விட்டனர். பார்த்திபன் கனவில் வரும் பொன்னனையும் வள்ளியையும் பற்றிக் கூறும்போதோ 'கலகல'வென்று சபை சிரித்து மகிழ்ந்தது. இத்துடன் அவர் நின்று விடவில்லை. சிவகாமியைப் பற்றிப் பேசியபோது அவர் சிவகாமியாகவே மாறி விட்டார். அவர் சிவகாமியைப் பற்றிப் பேசினாரா? இல்லை அவளைப் போலவே நடனமாடினாரா? என்பதை விளக்க முடியாது. திருமதி ரூபராணி ஜோஸப் என்னவோ ஆடாமல் அசையாமல் ஒலிபெருக்கியின் முன்னால் நின்று கொண்டுதான் பேசினார். ஆனால் சபையோர்தான் அவருடைய பேச்சில் சிவகாமியின் நடனத்தையும், வீணை பவானியின் வீணாகானத்தையும், பார்த்திபனின் வீரத்தையும், மருடபதியின் தியாகத்தையும் கண்டு வியந்தவண்ணம் இருந்தனர்.

திரு கோ. ராஜகோபால் அவர்கள் பேராசிரியர் கல்கி அவர்களை முற்றிலும் வேறு கோணத்தில் பார்த்தார். தாம் கண்டதைச் சபையோருக்குப் புரியும்படி விளக்கினார். கல்கியவர்கள் ராஜாஜியின் அரசியலில் ஊறி, ரஸிகமணியின் இலக்கியத்தில் மூழ்கிப் பண்

பட்ட விதத்தைப் பாவத்துடன் விளக்கினார். கல்கி அவர்கள் அரசியலைப் பத்திரிகைகளில் படித்துவிட்டு எழுதவில்லை. தாமே அரசியலில் ஈடுபட்டுப் பல முறை சிறை சென்று அனுபவ பூர்வமாக எழுதினார் என்று கூறி, குழந்தைகளுக்குப் பால் வழங்குவதுபோல மண்டபத்தில் கூடியிருந்த மக்களுக்கு இலக்கியப் பாலை வழங்கி மகிழ்ந்தார்.

திருமதி சரோஜினி ராமானுஜம் அவர்கள் பேராசிரியர் கல்கி அவர்கள் பெண் குலத்துக்குச் செய்த பெரும் சேவையைப் பற்றிக் குறிப்பிட்டார். தமிழ்ப் பெண்மணிகள் தமிழ்ப் பண்புடன் வாழ்வதற்காக முப்பது ஆண்டுகளாக அவர் எழுதிய எழுத்தைப் பற்றியும் பேச்சைப் பற்றியும் எடுத்து விளக்கினார். சங்கீதத்தை எழுதிக் காட்டிய தமிழ்ப் பெரியார் அவர் என்று பாராட்டினார்.

இந்தக் கல்கி கலை மன்றத்தை ஆரம்பித்து நடத்திவரும் தமிழ் அன்பர் திரு. ரா. மு. நாகலிங்கம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். கல்கி கலை மன்றத்துக்கு வந்தவர்களை அவர் மரியாதை செய்து அழைத்துப் போய் உட்காரவைத்த பண்பைப் பாராட்டுவதா? ஏதோ நெருங்கிய நண்பர்கள் வீட்டுத் திருமணத்துக்கு வருவதுபோல் கண்டி நகரத் தமிழ் மக்களைக் கல்கி கலை மன்ற விழாவுக்கு வரும்படி செய்திருந்தாரே அந்த அன்பைப்பாராட்டுவதா? வந்திருந்தவர்கள் குஷியாக இருக்கும்படி அருமையான பிரசங்கங்கள் ஏற்பாடு செய்திருந்ததைப் பாராட்டுவதா? எதைப் பாராட்டுவது என்று புரியவில்லை. ஆனாலும் திரு நாகலிங்கம் அவர்களின் உயர்ந்த தமிழ் அன்பைப் பாராட்டியே தீர வேண்டும். அவரைப் போன்ற இளைஞர்களின் உற்சாகம் நிறைந்த தொண்டால்தான் இன்றைய தினம் ஈழத்தில் தமிழ் உணர்ச்சி மேலோங்கி இருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

கல்கி கலைமன்ற விழாவின் மூலமாகக் கண்டி நகரில்—ஏன்? ஈழநாட்டிலே தமிழ்த் தாய் அடைந்திருக்கும் மகத்தான வெற்றியை எண்ணிப் பெருமிதம் கொள்ளவேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டிலும் தமிழ் கூறும் நல்லுலகிலும் தமிழ் மொழி உணர்ச்சி தழைத்து வளர்வது மட்டும் போதாது; தமிழ் மொழி உயர்ந்து ஓங்கவும் வேண்டும். தமிழ் தழைப்பதற்குரிய முயற்சிகளோடு தமிழை உயர்த்துவதற்குரிய முறைகளையும் தமிழ் மக்கள் தெரிந்து கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தமிழ் மொழி வளர்ச்சியில் ஒன்றுபட்டு ஒருமுகமாக வேலை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் தாம் ஈடுபட்டிருக்கும் உயர்ந்த பணியை நன்கு புரிந்து கொண்டு பாடுபட வேண்டும்.

இதற்குத் துணை புரிவதற்கு முதலில் ஆங்காங்கு கல்கி கலை மன்றத்தைப் போன்ற தமிழ் வளர்க்கும் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் தொண்டாற்ற வேண்டும். எனவே, கல்கி கலை மன்றத்தையும், அந்தக் கழகத்தை நடத்தி வரும் தமிழ் அன்பர்களையும் மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.

*** *** ***

அமுதினும் இனிய தமிழின் சுவையிலும் அதை வளர்த்த பேராசிரியரின் பெருமையிலும் திளைத்த நேயர்களை இப்பொழுது கலை வெள்ளத்தில் மூழ்க அழைத்துச் செல்லப் போகிறேன். பாரத நாட்டிலும், அதையொட்டிய ஈழத் தீவிலும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சித்திரக் கலை ஓங்கி வளர்ந்து அதன் சிகரத்தை எட்டிப் பிடித்திருக்கிறது என்பதற்கு அஜந்தா குகைச் சித்திரங்களும் சிக்கிரியா சித்திரங்களும் அத்தாட்சியாக இருக்கின்றன. இந்த அற்புதச் சித்திரங்களைப் பார்த்துச் சித்திர உலகம் மூக்கின் மேல் விரல் வைத்து வியந்து போகிறது. சிக்கிரியா குன்றில் உள்ள சித்திரச் செல்வங்களை நாளைய தினம் நாம் பார்க்கலாம். சிக்கிரியா குன்றின்மீது ஏறுவது சற்றுச் சிரமம்தான். ஆனாலும் அந்தச் சிரமத்தைப் பாராமல் ஏறினால் கற்பனைக்கு எட்டாத காவிய உலகத்துக்குச் சென்று பெருவகை எய்தலாம். (தொடரும்)

முகூர்த்தத்துக்கு முன்னாலே!






கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ்

9

நம்முடைய மடமையை என்னவென்று சொல்வது! கொஞ்ச நேரம் பக்தி செலுத்தி விட்டு, போதும் என்று திருப்தியடைந்து விடுகிறோம். பெரிய வெள்ளமாக வருகிறது பகவானுடைய கருணை. நம்முடைய அறியாமையால் அதை நாம் அணை கட்டித் தடுத்துவிடுகிறோம். இந்த அணைத் தடையை உடைத்தெறிந்தோமானால் ஆண்டவனுடைய கருணையானது பிரவாகமாகப் பெருகும். கருணைப் பிரவாகத்துக்கு வழி அடைக்கிறோம். இனி அப்படிச் செய்யாமல் அருள் வெள்ளத்தில் குடைந்து குளிப்போமாக. துறவிகளாகிய நாம் இனி தூங்கலாகாது. முன்சென்று அவன் அருளைப் பெறாவிட்டால் நாம் கெட்டுப் போவோம். ஏறும் மலையிலிருந்து கீழே விழுந்து அழிந்து போவோம்.



உள்ளமானது காற்றில் அடிபட்டுத் தள்ளாடும் கப்பலைப் போல் அலைபடும்போது உள்ளத்தில் தூங்கும் ஆண்டவனை எழுப்புவோமாக. எல்லாப் புயலையும் அடக்கும் வல்லமை அவனுக்கு உண்டு. நம்முடைய சித்தத்தில் உறங்கும் ஆண்டவனை எழுப்பினோமானால் மரக்கலம் கஷ்டமின்றிச் செல்லும்.

உள்ளத்தை ஆண்டவனுக்கு விடு செய்து தந்துவிட வேண்டும். இதயத்தில் வேறு ஏதுமில்லாமல் காலியாக்கினால்தான் ஆண்டவன் அதைத் தன் கோயிலாக்கிக் கொண்டு குடியிருப்பான். அவனன்றி வேறு விஷயம் இதயத்தில் இருந்தால் அவன் அந்த 'ஒட்டுக்குடி'க்கு ஒப்ப மாட்டான். முழு இதயத்தையும் துப்புரவாகத் தனக்குத் தரவேண்டும் என்று அவன் விரும்புகிறான். நம் இதயத்தை முற்றிலும் அவனுக்கே விட்டுவிட்டால்தான் நான் சொல்லும் **சதா தரிசன முறையைக்** கையாள முடியும். தெய்வ தரிசனத்துக்குச் சாராத விஷயங்கள் உள்ளத்தில் இருக்கலாகாது.

பகவானைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தும் முறையை நான் எல்லாருக்கும் உபதேசித்து வருகிறேன். இதைப் போன்ற சுக வாழ்க்கை வேறு கிடையாது. அதில் உண்டாகும் மகிழ்ச்சிக்கு ஈடு வேறு ஏதுமில்லை. ஆனால் இதை நான் உபதேசிப்பது மகிழ்ச்சிக்காக அல்ல. பயனை எதிர்பாராமல் பகவானிடம் அன்பு செலுத்த வேண்டும். அதைத்தான் அவன் விரும்புவது. அதுதான் நம்முடைய கடமை.

சாந்நித்திய உபாசனத்தை வாழ்க்கை முறையாகவே செய்து கொள்ள வேண்டும். இதுவே என்னுடைய உபதேசம். இதைச் செய்தால் வேறு எந்த உபதேசமும் மக்களுக்கு வேண்டியதில்லை. துறவிகளுக்கும் சாதாரண மக்களுக்கும் இது பொருந்தும். இதுவே எளிய முறையுமாகும்.



ராஜாஜி







Cow & Gate
Milk-Food

நாட்டு வைத்தியம்

22. குருவின் பதில்!



தன்னிலை கெட்டு, நன்னிலை மாறி, ஆரோக்கியமற்ற நிலையை வாயு [காற்று], தண்ணீர், தேசம், காலம் என்னும் பாவங்கள் பெறும் பொழுது, உயிர் வாழ்வதற்கே இவை இன்றியமையாதவையான தால், சகல ஜீவராசிகளும் குறிப் பிட்ட காலத்தில் ஒரேவிதமான வியாதியால் பிடிக்கப்பட்டுத் துன் பத்தை யடைகின்றன. இவ்வாறு மனித கோடிகளெல்லோரையும் பாதிக்கும் வியாதிகளுக்குத் தான் ஜனக பதோத்வம்ஸ ரோகங்கள் என்று பெயர். அம்மை, கொள்ளை நோய் — விஷ ஜுரங்கள்—சமீப காலத்தில் ஏற்பட்ட இன்புளு யன்ஸா என்னும் பிராதிச்யாயிக ஜுரம் ஆகியவை ஜனபதோத்வம்ஸ ரோகத் துக்கு உதாரணங்களாகும்.

இந் நான்கு பாவங்களும் நன்னிலை கெட்டு ஆரோக்கியமற்ற நிலையை யடைந்திட, அதன் காரணமா யுண்டா கும் 'ஜனபதோத்வம்ஸ ரோகங்களை'ச் சிகிச்சிப்பதிலும் அதிக சிரமமிராது; உரிய காலத்தில் கிரஹிக்கப்பட்ட, நன்கு தெரிந்தெடுக்கப்பட்ட, நன்முறையில் பதப்படுத்தி வைக்கப்பட்ட பரிபூரண வீர்யமுள்ள ஔஷதிகள் கைவச மிருந் தால் போதும் என்பது குருநாதர் சொன்னது.

மேற்சொன்ன வாயு முதலான பாவங் கள் ஆரோக்கியமில்லாத நிலையை அடைவதற்குக் காரணமென்னவென் பது சிஷ்யனின் கேள்வி.

''அக்னிவேச! இந்த வாயு முதலான பாவங்கள் ஆரோக்கியமில்லாத நிலையை யடைவதற்கு மூலகாரணம் அதர்மம். இதற்குத் துணைக் காரணமாயுள்ளது இன்றோ முன்னுளோ செய்த தீவினை யாகும். இக்காரணங்களின் விளைவுதான் மேற்சொன்ன நான்கு பாவங்களின் நன்னிலை மாற்றம். இது தப்பு என்று தெரிந்தும் நாம் பிழைத்திடும் சந்தர்ப் பத்தைத் தொடர்ந்து இவ்விளைவு ஏற் படுகிறது'' என்றார் குருநாதர்.

பிறகு சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு மேலும் தொடர்ந்து சொல்ல லானார் குருநாதரான பகவான் புனர் வஸு ஆத்ரேயன்.

''இந்நாள் செய்த அதர்மத்தின்விளைவு இன்றே கிடைக்கலாம். அதெப்படி யென்றால்.......தேசத்தில் - நகரங்களில் வாழும் ஜனசமூகத்தில் பிரதானமான வர்கள் (தலைவர்கள்) தர்மத்தைப் புறக் கணித்து ஜனங்களை அதர்மத்தில் ஆழ்த் திட நேரும் பொழுது, அத்தலைவர்களை நெருங்கிப் பிழைத்தும், அவர்களை அண்டியும் பிழைக்கும் காலத்துக் கேற்ற கோலத்தை ஏற்று வயிறு வளர்த்திடும் அவல நிலையிலுள்ள நகர மாந்தர் அந்த அதர்மத்தை மேன் மேலும் அதிகப்படுத்துகின்றனர்.

''இவ்வாறு அதிகரித்திடும் அதர்மம் காலக்கிரமத்தில் தர்மமென்பதை அடி யோடு இல்லாதபடி அழுத்தி விடும். இவ்வாறு தர்மத்தை இழந்த இம் மக்களைத் தேவதைகளும் கைவிட்டு விடுவர். இப்படித் தர்மத்தை இழந்து மிகவும் ஏற்றமுற்ற அதர்மத்தைப் பெற்ற, தேவதைகளாலும் கைவிடப் பட்ட மக்களுக்குப் பருவங்களின் சீர் கேடும் சதியும் ஏற்படுகின்றன. அதனால் உற்ற காலத்தில் மழை பெய்வதில்லை. அல்லது மழையே இல்லாமலாவதுபோய் விடுகிறது. அல்லது அகாலவிருஷ்டி அதி விருஷ்டி என்பவையாவது ஏற்படுகிறது. வீசும் காற்று நன்முறையில் அமைவ தில்லை. பூமியே வியாபத்துக்குள்ளாகி றது. நீர்நிலைகள் - பூமியின் கீழுள்ள ஊற்றிலுங்கூட-உலர்ந்து வறண்டு விடு கின்றன. ஔஷதிகள் தமது இயற்கையான குணவீரியங்களை இழந்து விபரீத குண வீரியங்களைப் பெறுகின்றன. இவையோ மக்கள் யாவருக்கும் இன்றியமை யாதவை. இவற்றை ஏற்கும் மக்களோ பெருவாரியாக முன்சொன்ன ரோகங் களுக்கு இலக்காகி விடுகின்றனர்'' என் றார் குருநாதர். மறுபடியும் சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு மேலும் தொடர்ந்து சொன்னார்.

''சஸ்திரப் பிரயோகங்களின் வாயி லாகவும் பெருவாரியான மக்கள் துன் புறவும், மாண்டு போகவும் நேரிடும். அதற்கும்கூட அதர்மமேதான் காரணம்.

"மிகவும் மிகரமுற்ற லோப, குரோத மோக மனத்தினரானவர், துர்ப்பலரை அவமதித்து (அல்லது மதிக்காமல்) தமக்கும், தம்மைச் சேர்ந்தவருக்கும், பிறருக்கும் நாசத்தை விளைவிக்கும் வகையில் சஸ்திரங்களைப் பிரயோகித்து ஒருவரை யொருவர் கொன்று வெல்ல முனைந்து நாசமடைகின்றனர். இதரரை யாவது நாசமுறச் செய்கின்றனர்; இதரர் சஸ்திரங்களுக்கு இலக்காகித் தாமே நாசத்தை யடையவும் செய்கின்றனர்.

"ரக்ஷோகணங்களின் பேயாட்டத்தாலும், தேவகணங்களின் சாபத்தாலும் ஜனபதோத்வம்ஸ ரோகங்கள் உண்டாவதுண்டு. அவற்றுக்கும் மூலகாரணம் அதர்மந்தான்.

"ஆதிகாலத்தில்.... ஜனங்கள் தர்ம சிந்தையுடன் இருந்தனர். நோயின்றித் திடகாத்திரராய் நீடூழி வாழ்ந்தனர். பிறகு ஒவ்வொரு யுகத்திலும் மக்களின் நேர்மை படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து இன்றைய அவலநிலை ஏற்படலாயிற்று" என்று விரிவான விளக்கங்களைச் சொன்னார் குருநாதர். கடைசியாக, "பிறந்தவற்றுக்கெல்லாம் உள்ள ஆயுட்காலம் தெய்வத்தின் அருளோடு மனிதனின் அறிவின் நேர்மையையும் தழுவி நிச்சயிக்கத் தக்கதாகும்" என்று கூறி முடித்தார்.

இவ்வாறு அதர்மத்தின் விளைவாக விட்டுவிட நான்கு பாவங்கள் கெடவும், அதன் விளைவாய் வரும் ஜனபதோத்வம்ஸ வியாதிகளை அந்தந்த வியாதிக்கும் விளக்கப்பட்ட சிகிச்சைக் கிரமப்படி சிகிச்சிப்பது நாம் செய்யக் கூடியது; முன் சொன்ன வகையில் கிரகிக்கப்பட்ட ஔஷதிகள் கைவசமிருப்பின் இந்த வியாதிகளைக் குணப்படுத்துவதிலும் கஷ்டம் கணிசமாகக் குறையும். இதெல்லாம் வியாதியைப் போக்கும் உபாயங்களாகும். ஆனால் இதற்குக் காரணம் ஒன்றுண்டே? அக்காரணத்துக்கும் எதிரான உபாயங்களையும் கையாள வேண்டும் அல்லவா? வியாதியையும் போக்கவேண்டும், அதன் காரணத்தையும் நீக்க வேண்டுமே! இந்த இரண்டாவது திட்டத்தைப் பூர்த்தி செய்ய என்ன வேண்டும் என்பதையும் விளக்குகிறார் குருநாதர்.

"ஜனபதோத்வம்ஸ ரோகமொன்று ஏற்பட்டுப் பெருவாரியான மக்களைத் தாக்கிடுங்கால் - யாருக்கு இந்த நோய் எப்போது காணுமோ-கண்டவரில் மீள்பவர் யாரோ? மாள்பவர் யாரோ? என்று பயங்கர நிலைமை வந்தபொழுது— சத்யம், உண்மை திரிகரணத்திலும் உண்மை வழுவாமை; மன்னுயிர்பால் கனிவு, இரக்கம், தயை; தானங்கள் வழங்கிடல்; ஹோமங்கள் வளர்த்து ஹவிஸ்களைப் பலியாகக் கொடுத்தல்; தேவதார்ச்சனம்; (முன்னொரு கட்டுரையில் விளக்கிய) ஸத்விருத்தத்தைக் கடைப்பிடித்தொழுகுதல்; சமம் தமம் என்ற பண்புகளைச் சீலித்தல்; மந்திரங்களை ஜபித்து ரக்ஷைகளைப் பெறல்: ஜன (பதம்) சமூகம் யாவற்றுக்கும் இதமானதையே செய்தல்; நல்லோரைப் பணிதல்; தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நல்லோருடன் நீங்காத தொடர்பு பெற்றுப் பிரம்மச்சர்ய விரதத்தைக் கடைப்பிடித்தல்; தர்ம சாஸ்திரங்களில் பயிற்சி பெறல்; நல்லோர் பெரியோர் ஒப்பும் விதத்தில் களிப்பும் கேளியுமாக மனக் கவலையைப் போக்குதல்; ஜிதாத்மாக்களான மஹரிஷிகளுடன் பழகுதல் என்பவற்றை எல்லாம் நாம் ஏற்று அனுஷ்டித்து வருவது அவசியம். இதுதான் அந்த ரோகங்கள் உண்டாகும் காலத்தில் அவற்றின் காரணத்துக்கு எதிராகச் செய்ய வேண்டிய திட்டமாகும்" என்றார் குருநாதர்.


இப்படி யெல்லாம் சரகஸம்ஹிதையில் விமானஸ்தானம் மூன்றாவது அத்தியாயத்தில் விளக்கியுள்ளவற்றைப் படித்துக் கொண்டே வந்தேன். அப்போது எனக்கு ஒன்று மனத்தில் தோன்றியது. அட! இதெல்லாம் இன்றையநிலைமைக்கு நேருக்கு நேர் சரியாக இருக்கிறதே! ஏதோ காரணத்தால் சிலர் அதர்மத்தைச் செய்யத் தயங்காமல் துணிந்து விடுகிறார்கள். அப்போது "மாமா! வேண்டாம். இது உலகத்துக்கு நீங்கள் செய்யும் அநீதி! மருமகனே வேண்டாம். இதனால் உலகத்துக்கும் உனக்குங்கூட நாசமே ஏற்படும்" என்று நற்புத்தியைச் சொல்லும் நல்லார் பெரியோரையும் அவமதிக்கும் இவ்வுலகை என்னென்பது? என்று தோன்றியது. (தொடரும்)


அருள் வாக்கு

ஒரு கலெக்டர் இருக்கிறார். அவருக்கு ஒருவர் வக்கீலை வைத்து மனு எழுதுகிறார். ஒரு குடியானவன் யாராவது ஒருவரிடம் எழுதி கலெக்டரிடம் நேரில் கொடுக்கிறான். அவனுக்கு ஓரெழுத்துகூடத் தெரியாது. 'எப்படியாவது நல்லது பண்ண வேண்டும்' என்று மனுவைக் கொடுக்கிறான். கலெக்டர் பார்த்தார். 'பாவம்! ஒன்றும் தெரியாது. நம்பிக்கை மாத்திரம் இருக்கிறது' என்று எண்ணி நல்லது பண்ணுவார்.

அதைப் போன்றதுதான் மந்திரமும். 'என்ன ஸார்! அர்த்தம் தெரியவில்லை. அதைப் பண்ணி என்ன பிரயோசனம்?' என்று சொல்வது தப்பு.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்


அட! நோயாளியைக் காணோமே!
பாரிஸ் மிட்டாய் வாங்க அவன் போயிருக்கிறான்
Parry's
இதில் அதிசயம் ஒன்றும் இல்லை! பாரிஸ் மிட்டாய்கள் மிகவும் ருசியானவை, சுத்தமானவை, ஆசையுடன் விரும்பப் படுபவை...
இன்றே சில பாரிஸ் மிட்டாய்களை வீட்டுக்கு வாங்கிச் செல்லுங்கள்.
குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவை மகிழ்ச்சி அளிக்கும்.
PRS 61


மாலவல்லியின்
தியாகம்
இரண்டாம் பாகம்
கி.ரா.கோபாலன்



மாலவல்லியின் தியாகம்

முன் கதை

சீரும் சிறப்புமாக இருந்த சோழ நாடு, சீர்கெட்டுத் தாழ்வுற்றிருந்த காலத்தில் காஞ்சியிலிருந்து பல்லவப் பேரரசும், மதுரையிலிருந்து பாண்டியப் பேரரசும் ஆதிக்க வெறியில் போராட்டத்தை மேற்கொண்டதனால் இடையிலிருந்த சோழநாடு பலவித இன்னல்களுக்கு உள்ளாகிறது. ஒருபுறம் அரசியல் குழப்பமும் இன்னொருபுறம் மதக் குழப்பமுமாயிருக்கும் நிலையில், மறுபடியும் சோழ சாம்ராஜ்யம் நிறுவுவதற்காகச் சில வீர வாலிபர்கள் தீவிர முயற்சியில் ஈடுபடுகின்றனர். அத்தகைய புரட்சிகரமான வாலிபர்களில் ஒருவன்தான் நாஸ்திகவாதியாகிய பூதுகன். காவிரிப் பூம்பட்டினத்துக் கடை வீதியிலே வேடிக்கை பார்த்துக் கொண்டு வருகிறான். அச்சமயம் ஒரு கடையில் வாலிபனொருவன் தன் காதலிக்கு முத்து மாலை வாங்கித் தரத் தயங்குகிறான். அவனுக்கு உலகியல் இன்பங்களைப் பற்றி உபதேசிக்க முற்பட்ட பூதுகன் அவனால் தாக்கப்படுகிறான். அவனுக்குச் சில எச்சரிக்கைகள் செய்து விட்டு, பூதுகன் கடற்கரையை நோக்கிச் செல்கிறான். பெருமழை பிடித்துக் கொள்கிறது.

கடற்கரையை அடுத்த சம்பாதி வன புத்த விஹாரத்தில் ஒதுங்குகிறான் பூதுகன். அப்பொழுது ஆராதனை வேளை. எல்லோரையும் போல் ஒரு இளம் பிக்ஷுணி புத்தர் பிரானுக்கு மலரிட்டு வணங்கும் போது ஒரு பிக்ஷு அவளைத் தடுக்கிறார். தலைமை பிக்ஷு அவருக்குச் சமாதானம் கூறி அப் பெண்ணை மலர் சமர்ப்பிக்கச் செய்கிறார். பூதுகன் யாவற்றையும் கவனிக்கிறான். பிரார்த்தனை முடிந்ததும் எல்லோரும் கலைந்து விடுகின்றனர். பூதுகனுக்குத் தெரிந்தவரான கலங்கமாலரையர் என்னும் பிக்ஷு மட்டும் தனியே இருக்கிறார். பூதுகன் அவரிடம் சென்று பேச்சு கொடுத்துக் கொண்டே விஹாரத்தைவிட்டு வெளியே வருகிறான். இருவரும் வெளியே வந்து கொஞ்ச தூரம் நடந்ததும், பிரார்த்தனை சமயத்தில் தடுக்கப்பட்ட இளம் பிக்ஷுணி எங்கோ போவது அவர்கள் கண்களில் படுகிறது. அவளைத் தடுக்க முற்பட்ட பிக்ஷுவும் அவளைத் தொடர்ந்து செல்கிறார். பூதுகன் அவர்கள் இருவரையும் தொடரலானான். அந்த இளம் பிக்ஷுணி வெகு தூரம் நடந்து பட்டினப் பாக்கத்தில் நாட்டியக் கணிகையர்கள் வசிக்கும் வீதிக்குச் சென்று ஒரு வீட்டில் நுழைகிறாள். பூதுகன் வியப்போடு தானும் அந்த வீட்டில் நுழைய, உள்ளே ஒரு அழகிய பெண் நடனமாடுவதையும், அந்த இளம் பிக்ஷுணி வீணையுடன் நடனத்துக்கு ஏற்பப் பாடுவதையும் பார்க்கிறான். நடன மங்கையாகிய வைகைமாலை அவனைக் கண்டதும் நடனத்தை நிறுத்தி விட்டு அவனிடம் தனித்து வருகிறாள். பூதுகன் அந்த இளம் பிக்ஷுணியைப் பற்றி விசாரிக்கிறான். மாலவல்லி என்னும் அந்தப் பெண்ணைப் பற்றி வைகை மாலை விவரிக்கிறாள். மாலவல்லி விடைபெற்றுச் செல்கிறாள். மாலவல்லியைத் தொடர்ந்து வந்த பிக்ஷுவைப் பற்றி விவரிக்கிறான் பூதுகன். மாலவல்லிக்கு பிக்ஷுவினால் ஆபத்து ஏற்படாமல் காப்பாற்றும்படி கோருகிறாள் வைகைமாலை. பூதுகன் வைகைமாலையின் விருப்பப்படி கடற்கரைக்குப் போகிறான். அப்பொழுது கடற்கரையில், நிலவொளியில் மாலவல்லியும் ஒரு இளைஞனும் தங்களை மறந்து பேசிக்கொண்டிருப்பதை வியப்புடன் பார்க்கிறான்.

அச்சமயம் திடீரென்று கலங்கமாலரையர் அங்கு வந்து அவனைத் தாக்குகிறார். பூதுகன் அவரைப் புரட்டித் தள்ளித் தூக்கி எறிகிறான். மாலவல்லியின் காதலனை வீரவிடங்கனும் இச்சமயம் போரில் இறங்கிப் பூதுகனைத்

தாக்குகிறான். பூதுகன் கலங்கமாலரையரின் சூழ்ச்சிகளைச் சொல்லவே, வீரவிடங்கன் அவனோடு சமாதானமாகி, பிக்ஷுவுக்குப் புத்தி சொல்லி அனுப்புகிறான்.

மறுநாள் காலை பூதுகன் வைகைமாலையைச் சந்தித்து முதல் இரவு நடந்தவற்றை வைகைமாலையிடம் விவரிக்கிறான்.

பௌத்த விஹாரத்துக்குப் புதிதாக வந்திருந்த பிக்ஷு ரவிதாசர் மர்மமாகக் கொலையுண்டு கிடந்தார் என்னும் செய்தி பூதுகனைத் திகைப்பில் ஆழ்த்துகிறது. இந்த மர்மக் கொலையில் மாலவல்லியும் அவன் காதலன் வீரவிடங்கனும் சம்பந்தப்பட்டிருக்கலாமோ என்று ஐயங் கொள்கிறான். இந்தச் சதியில் உண்மையாகச் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் பூதுகன் வைகைமாலையிடம் விடைபெற்றுக் கொண்டு நெடும் பிரயாணத்தை மேற்கொள்கிறான். அப்பிரயாணத்தின் இடையில், காஞ்சிபுரம் போய், அங்கு பல்லவ ராஜ சபை நடன மங்கையான தேனார்மொழியாளைச் சந்திக்கிறான். பல்லவ அரசனின் ஒன்றுவிட்ட சகோதரனான செம்மவர்மனைச் சந்தித்ததும், அவன் தன் காரிய சாதகங்களுக்குப் பயன்படுவானா என்று முயற்சி செய்கிறான். தேனார் மொழியாள் பூதுகனது அழகிய தோற்றத்தில் ஈடுபட்டுத் தன் வசம் இழக்கிறாள். பூதுகன் அவளிடமிருந்து தப்பி வெளியேறுகிறான்.

தேனார்மொழியாள் இல்லத்திலிருந்து புறப்பட்டுப் பூதுகன் காலநங்கை என்னும் பிக்ஷுணியைப் புக்கப் பள்ளியில் சந்தித்து விட்டுத் திரும்பி வருகையில், திடீரென்று தோன்றிய பிக்ஷு கலங்கமாலரையரால் கடுமையாகத் தாக்கப்பட்டு விழுந்து விடுகிறான்.

* * *

சோழநாட்டின் பழம்பெரும் நகரமான பழையாறையைச் சேர்ந்த நந்திபுர விண்ணகரம் பூர்விகச் சோழர் குல மன்னர் பரம்பரையில் வந்த இடங்காக்கப் பிறந்தாரின் ஆதிக்கத்தில் இருந்தது. இடங்காக்கப் பிறந்தாரின் குமாரி திருபுவனி கொள்ளைக் கூட்டத்தாரின் கொடுமைக்கு ஆளாகிப் பல ஆண்டுகள் பிரிந்திருந்து மீண்டும் பெற்றோரிடம் வந்து சேருகிறாள். பிரிந்த மகளைக் காண்பதில் அளவுகடந்த மகிழ்ச்சியிருந்தாலும் அவள் பிக்ஷுணிக் கோலத்தில் இருந்தது இடங்காக்கப்பிறந்தாரைத் தீராத் துயரத்துக்கு உள்ளாக்கியது. இச்சமயம், தஞ்சை அமைச்சர் புலிப்பள்ளி கொண்டார் தம் மகன் கோனாட்டுக்கூழூர்க்குத் திருபுவனியை மணம் முடிக்க விரும்புகிறார். திருபுவனிக்குத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்பது பழையாறை அரசகுமாரி அருந்திகைப் பிராட்டியின் வாயிலாகத் தெரிய வருகிறது.

* * *


சோமேச்சுவரத்தைச் சேர்ந்த சோதிடரான சந்தகர் மருவூர்ப் பாக்கத்துக் கடைவீதியில் வீரவிடங்கனைச் சந்தித்து அவனிடம் நட்புக் கொள்கிறார். பிறகு பூதுகனைக் காண இருவரும் காஞ்சிபுரத்துக்குச் செல்லுகின்றனர். வழியில், அரிஷ்டநேமி என்னும் ஜைன முனிவரின் ஆதரவில் இருந்து வந்த சுகேசி என்னும் வாலிபப் பெண்ணைக் கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்து மீட்கின்றனர். அரிஷ்டநேமி வீரவிடங்கனின் பொறுப்பில் தம் வளர்ப்பு மகள் சுகேசியை ஒப்புவிக்க விரும்புகிறார்.

வீரவிடங்கனும் சந்தகரும் ஜைன முனிவரிடம் விடைபெற்றுக்கொண்டு காஞ்சிக்குச் செல்கின்றனர். காஞ்சியில் சந்தகரை விருந்தினர் விடுதியில் விட்டுவிட்டு, வீரவிடங்கன் அரண்மனைக்குப் போகிறான். பிறகு தேனார்மொழியாளைச் சந்தித்த சந்தகர், பூதுகன் சிறைப்பட்டிருக்கும் விவரத்தை அறிகிறார்.

முதல் அத்தியாயம்

வீரர் குலத்துதித்த ஜோதி

கொடும்பாளூர் அரசன் பூதி விக்கிரம கேசரி கொடும்பை நகரைச் சுற்றி அமைத்திருந்த கோட்டை எல்லோருக்கும் பிரமிப்பை ஏற்படுத்தக் கூடியதாகத்தான் இருந்தது. விளையாட்டுப் போல் நகரைச் சுற்றிலும் அதிசயிக்கத் தக்க கோட்டையையும் பிரும்மாண்டமான அகழிகளையும் சிருஷ்டித்து விட்டான் அந்த மகா வீரன். உண்மையாகவே விக்கிரம கேசரி சிருஷ்டித்திருந்த அக் கோட்டை பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்குமே சிறிது அச்சத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. விக்கிரமகேசரி இப்படி ஒரு கோட்டையை எழுப்பக் காரணம் என்ன? ஏதோ முன்னேற்பாடாகத்தான் அந்த வீரன் தன் நகரைச் சுற்றிலும் கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறான் என்று எல்லோருக்கும் சந்தேகம் ஏற்பட்டது. விக்கிரம கேசரி பல்லவ மன்னனுக்கு அடங்கிய சிற்றரசன் தான். இருப்பினும் அவன் தன் நகரைச் சுற்றிலும் பாதுகாப்புக்காக ஒரு கோட்டை கட்டிக் கொள்வதைத் தடுக்க முடியுமா?




கொடும்பாளூர் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு அடங்கியதுதான். நெடு நாட்களாகக் கொடும்பாளூர் அரச பரம்பரையினருக்கும் பல்லவ மன்னர்களுக்கும் நெருங்கிய நட்பு இருந்து வந்தது. சாம்ராஜ்யத்தைப் பெருக்க வேண்டும் என்றிருந்த பல்லவர்களுக்குப் பெரு வீரர்களான இருக்கு வேளார்களின் நட்பு மிக்க இன்றியமையாததாகவே எப்பொழுதும் இருந்தது. இந்த நட்பைத் துறந்து விடாமல் இருக்கவும் அவர்கள் விரும்பினர். பல்லவ மன்னர்கள் மற்றச் சிற்றரசர்களை நடத்துவது போலல்லாமல் கொடும்பை மன்னர்களுக்குச் சில சலுகைகளும் கொடுத்து வந்தார்கள். கொடும்பாளூர் மன்னர் பல்லவ மன்னருக்கு அடங்கியவராகவும், நெருங்கிய நட்பினராகவும் இருந்ததில் அவர்களுக்கு ஜன்ம வைரிகளாகத் திகழ்ந்த பாண்டியர்களுக்கு மிகவும் இடையூறாகவும், பொறாமையாகவும் தான் இருந்தது.

பல்லவ மன்னருக்குக் கீழ்ப்படிந்து பழையாறை, நாகை, திருப்புறம்பயம் முதலிய சிறு பகுதிகளை ஆண்டு வந்த சோழ வம்சத்தினருக்கு இன்னும் அதிகச் சலுகைகள் அளிக்க வேண்டுமென்பது தான் கொடும்பாளூர் அரச வம்சத்தினரின் விருப்பம். ஆனால் பல்லவர்கோன் அவர்களுக்கு அதிகச் சலுகைகள் அளிக்க விரும்பவில்லை. தஞ்சையை ஆண்ட மாறன் முத்தரையர் தம் ஆட்சிக்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தில் பல்லவ மன்னன் சோழ வம்சத்தினர்களுக்கு அதிகச் சலுகைகள் கொடுக்காத வண்ணம் சூழ்ச்சிகள் செய்து தடுத்துக் கொண்டிருந்தார். முத்தரையரின் உபதேசங்களுக்குச் செவி கொடுத்த பல்லவ மன்னனும் பிரசித்தி பெற்ற வீரர் பரம்பரையான சோழ வம்சத்தினருக்குச் சலுகை காட்டினால் தன்னுடைய சாம்ராஜ்யத்துக்கு ஏதேனும் கெடுதல் நேரிடுமோ என்று அஞ்சி அவர்களை ஒடுக்கி வைக்கவே முயற்சி செய்தான். இதனால் கொடும்பாளூரார்களுக்கும் பல்லவர்களுக்கும் உள்ள நெடுநாளைய நட்பு மாறிச் சிறிது அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. அவர்கள் நட்புறவில் வெளிக்குத் தோன்றாத கசப்பு உணர்ச்சியும் பெருகி வந்தது. அதோடு விக்கிரமகேசரி, கொடும்பாளூரில் எழுப்பியிருந்த பெருங் கோட்டை பல்லவ மன்னனுக்குச் சிறிது சந்தேகத்தையும் புகைச்சலையும் ஏற்படுத்தி இருந்தன. தங்களுக்கு அனுகூலமாகத் தெய்வாதீனமாக இத்தகைய நிலை ஏற்பட்டதைப் பாண்டிய மன்னன் பயன்படுத்திக் கொள்ளத்தானே விரும்புவான்?

மகா வீரனான பூதி விக்கிரம கேசரி திடீரென்று இறந்து விட்டான். அவன் இறந்தது பல்லவ மன்னனுக்குச் சிறிது மன ஆறுதலை ஏற்படுத்தியது. விக்கிரம கேசரிக்குப் பின் அவன் மகன் ஆதித்த இருக்குவேளான் ஆட்சிபீடம் ஏறினான். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? 'என் தகப்பன் பத்தடிதான் தாண்டுவான். நான் பதினாறு அடி தாண்டுவேன்' என்று சொன்னான் அந்த இளஞ் சிங்கம். ஆதித்தனுக்கு உற்ற துணையாக நின்ற அவன் தம்பி பராந்தகன் அண்ணனைவிட அரை அடி அதிகமாகத் தாண்டுவான் போல் இருந்தது. அமைதி ஏற்படுத்திக் கொண்டிருந்த பல்லவ மன்னனின் மனம் மறுபடியும் குழம்பத் தொடங்கியது. ஆதித்தன் ஆட்சி செய்யத் தொடங்கியதும் அவன் பல்லவ மன்னனுக்கு அடங்கியவன் என்று பெயரளவிலேயே இருந்தானே தவிர அவன் தன் இச்சையாகவே தான் நடந்து வந்தான். இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள்ள நினைத்த பாண்டியமன்னன், கொடும்பாளூரார்களுக்கும், சோழ வம்சத்தினருக்கும் ஆதரவாகவே பேசி வந்தான். சம்சயமும் பீதியும் அடைந்திருந்த பல்லவர்கோன் கொடும்பாளூராரின் நட்பை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் நம்பிக்கையை இழந்து அவர்களை அடியோடு ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்றுதான் நினைத்தான்.

மிகுந்த பராக்கிரமசாலியான ஆதித்தனும் அவன் தம்பி பராந்தகனும் நினைத்ததை முடிப்பதிலேயே கருத்துடையவர்கள். தங்கள் அரசையும், உயிரையும் திரணமாக மதித்து லட்சிய சித்திக்காகப் பாடுபடும் திட நம்பிக்கை உள்ளவர்கள். அவர்களுடைய தாய் பழையாறை நகரை ஆண்ட சோழ மன்னன் குமராங்குசனின் சகோதரி-வீரத் தாயின் ரத்தத்தில் உதித்தவர்களின் நெஞ்சம் எப்படிப்பட்டதாக இருக்கும்? தீரம் மிக்க சோழ பரம்பரையில் உதித்த அவர்கள் தாய் சாகும் தறுவாயில் தன் புதல்வர்களை அருகில் அழைத்து, ''நீங்கள்தான் மறுபடியும் சோழவள நாட்டைச் சோழர்களுடையதாக்கி வைக்க வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டாள். அவர்கள் தங்கள் தாய்க்கு அளித்த வாக்குறுதியை எப்படி மறக்க முடியும்? தங்கள் அரசை இழப்பதாயினும் மறுபடியும் கரிகாலனின் பரம்பரை இந்நாட்டை ஒரு குடையின் கீழ் ஆட்சி செலுத்த வேண்டும் என்பதையே விரும்பினர்.

சுற்றிலும் சூழ்ந்த பெரும் கோட்டைக்குள் அடங்கிய அழகிய கொடும்பை


ரொட்டி
மிகவும் சிறந்ததாய்
அமைய உதவுவது
"சூரியன் மார்க்"
மைதா
RISING SUN BRAND
சூரியன் மார்க்
மைதா, சூஜி, ஆட்டா
நவீன நியூமாட்டிக் ஸிஸ்டத்தில் தயாரிக்கப்படுபவை
தயாரிப்பவர்கள் :
செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிட்.
மதராஸ்
மானேஜிங் ஏஜண்டுகள்.
சௌந்தரராஜன் & கம்பெனி லிமிடெட்,
221, கோவிந்தப்ப நாயக்கன் தெரு—மதராஸ்-1.
தபால்பெட்டி: 1558
தந்தி: MATHOORAN
போன்: 3707

மாநகரின் அரச மாளிகையை ஒட்டினாற் போல் உள்ள ஒரு அழகான சோலை. காலை வேளை. அச் சோலையிலே உள்ள சிறு மைதானத்தில் இரு வாலிபர்கள் வாட்போர் செய்து கொண்டிருந்தனர். ஆம்! அவ்விரு வாலிபர்களும் விளையாட்டாகவே வாட்போர் செய்து பழகிக் கொண்டிருந்தாலும் உண்மையாக உத்வேகத்துடனும் ஆக்கிரத்துடனும் போர் செய்வது போல்தான் இருந்தது. அவர்களுடைய போராட்டத்தைக் கண்டு வியந்து கொண்டிருந்தனர் இரு இள மங்கையர். அவ்விரு மங்கையரும் ஒவ்வொரு கட்சியில் நின்று அவ்வீர வாலிபர்கள் ஒருவரை ஒருவர் சாமர்த்தியமாகவும், தந்திரமாகவும் தாக்கும் நேரத்திலெல்லாம் கைதட்டுவதும் சந்தோஷ ஆரவாரம் செய்வதுமாக அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர். அவ்விரு வாலிபர்களில் ஒருவனுக்குச் சுமார் இருபத்து ஐந்து வயது இருக்கலாம். மற்றவனுக்கு இருபது வயதுதான் இருக்கும். அவர்கள் உடை உருவம் இவைகளிலிருந்து அவ்விருவரும் அரச குமாரர்களாய்த்தான் இருக்க வேண்டுமென்று தெளிவாக விளங்கியது. அவ்வாலிபர்களை உற்சாகப்படுத்திய யௌவன மங்கையர்களும் அரசகுமாரிகள் என்பது அவர்கள் அணிந்திருந்த ஆடை அலங்காரங்களிலிருந்தே தெளிவாகத் தெரிந்தது.

அப்பெண்களில் ஒருத்தி பதினெட்டு வயது மதிக்கத் தக்கவளாயும் ஒருத்தி பதினாறு வயது மதிக்கத்தக்கவளாயும் இருந்தாள். அவ்விரு வீர வாலிபர்களுக்கும் இப்படிப்பட்ட அழகும் வயதும் நிறைந்த பெண்கள்தான் காதலிகளாக இருக்கப் பொருத்தமானவர்கள் என்று கற்பனை செய்து பார்க்க வேண்டிய இடமே இல்லாதபடி அவ்வளவு இணையாக விளங்கினர். இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால் வயதில் மூத்தவளாக இருந்த பெண் வயதில் சிறியவனாக இருந்த வாலிபனையும், வயதில் சிறியவளாக இருந்த பெண் மற்றவனைவிட வயதில் மூத்தவனாய் இருந்த வாலிபனையும் ஆதரித்து நின்றதுதான். இவ்வளவு தூரம் அவர்களைப் பற்றிச் சொல்லிய பிறகு அவர்கள் யாரென்று குறிப்பிடாமல் இருக்க முடியுமா?

அவ்விருவரில் வயதில் மூத்தவனாக இருந்தவன் கொடும்பாளூர் மன்னன் ஆதித்தனின் தம்பி **பராந்தகன்**. வயதில் சிறியவனாகத் தோன்றிய மற்றவன் பழையாறை நகர் மன்னன் குமராங்குச சோழனின் மகன் **விஜயன்**. அந்த மங்கையர்களில் மூத்தவளாக இருப்பவள்தான் பழையாறை நகரையாளும் உரிமை

அருள் வாக்கு

நான் இங்கே பூஜைக்கு வருகிறேன். அப்பொழுது இங்கே குப்பை நிறைய இருந்தால் மனத்துக்கு வருத்தமாக இருக்கும். குப்பையை எடுத்து விட வேண்டும். நம்முடைய ஹிருதயம் பரமேசுவரனுடைய ஸ்தானம். அதில் குப்பை நிறைய இருக்கிறது. ஹிருதயத்திலுள்ள குப்பையைப் போக்க வேண்டும். அப்பொழுதுதான் ஈசுவர ஸ்வரூபம் தெரியும்.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்

யுள்ளவனான விஜயனின் சகோதரி **அருந்திகைப் பிராட்டி**. வயதில் சிறியவளாகத் தோன்றிய மற்றவள் கொடும்பாளூர் மன்னன் ஆதித்தனுக்கும், பராந்தகனுக்கும் சகோதரியாக விளங்கும் **அனுபமா**. அருந்திகை தன் சகோதரன் விஜயனின் சார்பாக நின்று அவனை உற்சாக மூட்டியதிலும் அனுபமா தன் சகோதரன் பராந்தகன் சார்பாக நின்று அவனை உற்சாகப்படுத்தியதிலும் வியப்பு என்ன இருக்கிறது?

விளையாட்டாகச் செய்யும் வாட்போராயினும் மிகவும் உத்வேகமாகத்தான் இருந்தது. சண்டையின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க அவ்விரு பெண்களின் உற்சாகமும் அதிகமாகியது. வாளோடு வாள் மோதும் சத்தத்தோடு பெண்களின் கலகலவென்ற சிரிப்பொலியும் இடையிடையே கலந்து இன்பத்தை எழுப்பியது. விஜயன் வயதில் சிறியவனாயிருந்தாலும் மிக லாகவமாகவும், தந்திரமாகவும் வாளைச் சுழற்றிப் பெரியவனாகிய பராந்தகனுக்கு எதிராகச் சளைக்காமல் போர் புரிவது சிறிது பயங்கரமானதாகவும் அதிசயிக்கத் தக்கதாகவும் தான் இருந்தது. அந்த வயதிலேயே அவன் தனியொருவனாக நின்று கடல் போல் எழும்பி வரும் பெரும் படையையும் கதிகலங்கச் செய்யும் திறமை பெற்றவனாகி விட்டான் என்பதைத்தான் அவன் விளையாட்டாகச் செய்யும் போராட்டமே எடுத்துக் காட்டியது. அவர்கள் பாய்ந்து பாய்ந்து வாளைச் சுழற்றித் தீவிரமாகச் சண்டை செய்யும் போது பராந்தகனின் வாள் முனை விஜயனின் இடது தோளில் பட்டு இரத்தம் கசிந்தது. இதைக் கண்ட பராந்தகன் வாளைச் சுழற்றுவதை நிறுத்தினான்.

பராந்தகன் சட்டென்று போராட்டத்தை நிறுத்திக்கொண்டதும் விஜயன், "ஏன் அதற்குள் நிறுத்திக் கொண்டாய்? களைப்பாக இருக்கிறதா?" என்றான்.



அருந்திகைப் பாராட்டி படபட வென்று கைகொட்டி நகைத்தாள். அனுபமாவின் முகம் கறுத்து நாணம் குடிகொண்டது.

''எனக்குக் களைப்பு இல்லை. உன் இடது தோளைக் கவனி. காயம்பட்டு ரத்தம் வருகிறது''என்றான் பராந்தகன்.

விஜயன் அலட்சியமாகத் தன் இடது தோளில் கசிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு, ''என் இடது தோளில் காயம்பட்டதற்காக நீ ஏன் போராடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்?'' என்று கேட்டான்.

இந்தச் சமயத்தில் அருந்திகை முன்னிலும் பலமாகக் கைதட்டிச் சிரித்தாள். இதைக் கண்டு பராந்தகனுக்குக் கூட அவ்வளவு வெட்கமும் ரோசமும் ஏற்படவில்லை. அனுபமாவுக்குத்தான் வெட்கமும் ரோசமும் பிரமாதமாகப் புகைந்து கொண்டு வந்தன.

''இது விளையாட்டாகப் புரியும் போர் தானே? இதில் காயம் ஏற்பட்டால்..?''


''விளையாட்டாகச் செய்யும் போர் தானே என்றுதான் நானும் என் தோளில் காயம்பட்டதைப் பொறுத்துக் கொண்டு சண்டை செய்தேன். இல்லாவிட்டால் எனக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்காதா?'' என்றான் விஜயன்.

''உங்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டிருந்தால் என்ன செய்திருப்பீர்களோ?'' என்று கேட்டாள் அனுபமா.

விஜயன்சிரித்துக்கொண்டே,''எனக்கு இடது தோளில் காயம்பட்டிருப்பது போல் உன்னுடைய சகோதரனுக்கு இடது தோளில் காயம் பட்டிருக்காது. இடது தோளே அறுந்து போய்க் கீழே விழுந்திருக்கும்'' என்றான்.

விஜயனின் வார்த்தையை அங்கீகரிப்பவள் போல் அருந்திகை, ''அப்படிச் சொல்லு'' என்றாள் உற்சாகத்தோடு.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் பேசும் இவர்களுடைய சம்பாஷணைகளை விளையாட்டாகவே கருதிப் பெருமையோடும் பூரிப்போடும் கேட்டுக் கொண்டிருந்த பராந்தகன் விஜயனின் முதுகில் தட்டினான். ''விஜயா! நீ சரியான வீரனுக்குரிய முறையில் தான் நடந்து கொள்கிறாய்—விளையாட்டாகச் சண்டையிட்டோமாயினும் இதில் நீ வெற்றி பெற்று நான் தோல்வியடைந்திருந்தேனாயினும் இப்பொழுது ஏற்பட்ட சந்தோஷத்தைவிடப் பன்மடங்கு சந்தோஷமடைந் திருப்பேன். எங்களை எல்லாம்விட நீ சிறந்த வீரனாகத் திகழ வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆவல். இந்தக் கொடும்பாளூர் கோட்டை பொடிப் பொடியாகித் தரை மட்டமானாலும் பாதகமில்லை. மறுபடியும் இந்நாட்டில் சோழ வம்சத்தினரின் பெருமை உயர்ந்தால் எங்கள் மனம் ஆறுதல் அடையும். எங்கள் தாய் தந்தையர்களின் ஆத்மாவும் சாந்தியடையும். இதை நீ நினைவில் வைத்துக் கொள். எதிரியின் வாள் பட்டு மேனியில் எத்தனை புண்கள் ஏற்பட்டாலும் அவைகளை யெல்லாம் சுத்த வீரனின் பெரு



மையை எடுத்துக் காட்டும் வீரச் சின்னங்களாகவே கருத வேண்டும். ஆனால் முதுகில் மாத்திரம் காயத்தை ஏற்று இந்த இரு பரம்பரையினருக்கும் இழுக்கைத் தேடித் தந்துவிடாதே'' என்றான்.

இதைக்கேட்ட அருந்திகைப் பிராட்டி சிரித்துக் கொண்டே, ''எங்கள் விஜயனுக்கு வீரத்தைப் பற்றியும் குலப் பெருமைகளைப் பற்றியும் உபதேசிக்கிறீர்களா? எல்லாக் குழந்தைகளும் பிறக்கும்போது 'குவா' என்றுதான் அழும். ஆனால் எங்கள் விஜயன் பிறந்த போது அழுத அழுகை 'வாள் எங்கே—வாள் எங்கே' என்று கேட்பதுபோலிருந்தது. அதோடு மட்டுமா? குழந்தைப் பருவத்திலிருந்தே அவனுக்கு விளையாட்டுக் கருவியாக இருந்தவைகளெல்லாம் வாளும் ஈட்டியும் தான்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அங்கே யாரோ இருவர் வருவது கண்டு அவர்கள் பார்வை திரும்பியது.

அப்பொழுது ஆதித்தன் வேறொரு மனிதரோடு வந்து கொண்டிருந்தான். ஆதித்தனோடு வந்த மற்றொரு மனிதர் அவர்களுக்கு அதுவரையில் அறிமுகமில்லாத மனிதராகவே காணப்பட்டார். அவருக்கு அறுபது வயதுக்கு மேலிருக்கலாம். மிகக் கம்பீரமான உருவம். பிரகாசமான கண்கள். நரைத்த மீசை, அவர் அணிந்து கொண்டிருந்த ஆடை அணிகளிலிருந்து அந்த மனிதர் ஓர் பேரரசின் மந்திரிப் பிரதானிகளில் ஒருவராகத்தான் இருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆதித்தனோடு வேறொரு மனிதர் வருவதைக் கண்ட அருந்திகையும் அனுபமாவும் பெண்களுக்குரிய நாணத்தோடு சிறிது மறைவிடம் பார்த்துச் செல்ல நினைத்தனர். ஆதித்தன் அவர்களைக் கையமர்த்தி நிறுத்தி, ''அருந்திகை எங்கே போகிறாய்? கொஞ்சம் நில். உங்களையெல்லாம் இவருக்கு அறிமுகப் படுத்தலாம் என்று தானே இங்கு அழைத்து வந்தேன்?'' என்று கூறினான்.

ஆதித்தனின் வார்த்தையைக் கேட்டதும் அருந்திகைப் பிராட்டி சிறிது நாணத்தோடு நின்றாள். அனுபமா அவளுடைய தோளைத் தொட்ட வண்ணம் பின்னால் நின்றாள்.

''இவர் பாண்டிய மன்னரின் அமைச்சர் அருண்மொழியார். நமது அரண்மனை விருந்தினராக வந்திருக்கிறார்'' என்று கூறிப் பராந்தகனைக் காட்டி, ''இவன் என் தம்பி-பராந்தகன். இதோ இவன் பழையாறைச் சோழ மன்னரும் என்னுடைய மாமனுமாகிய குமராங்குஜ சோழரின் புதல்வன் - விஜயாலயன். வயதில் மூத்தவளாக இருக்கும் இந்தப் பெண் அருந்திகை - விஜயனின் சகோதரி. சிறியவள் என் தங்கை-அனுபமா...'' என்றான்.

அருண்மொழியார் தம் நரைத்த மீசையைத் தடவிக் கொண்டே, ''மிக்க மகிழ்ச்சி-சோழ வம்சம் மிகப் பிரசித்தமானது. அவர்கள் வாழ்வுற்றாலும் தாழ்வுற்றாலும் அழியாத பெருமை

யுடையவர்கள்-பாண்டிய மன்னர் கூட இன்று அக்குலத்தினர் அடைந்துள்ள நிலைகுறித்து அடிக்கடி கூறி வருத்தப் படுவார். இந்தக் குழந்தை விஜயனைப் பார்த்தால் அவனுடைய மூதாதையர் கள் செய்த விந்தைகள்தான் நினைவுக்கு வருகின்றன. இவனைப் பார்க்கும்போதே இவனும் தன் முன்னோர்கள் போல் சிறந்த வீரனாகத்தான் விளங்குவான் என்று தோன்றுகிறது. இன்னும் உறையி லிருந்து எடுத்த வாளை உறையிலிடாமல் துடியாய் நிற்கிறானே..." என்றார்.

"சிலருடைய வாளுக்குத்தான் உறை யில் கிடந்து உறங்குவதில் மோகம். எங்கள் விஜயனின் வாள் அப்படிப்பட்ட தல்ல. தன்னுடைய லட்சியத்தை நிறை வேற்றிக் கொண்ட பின்தான் அது உறைக்குள் போகும் போலிருக்கிறது" என்றான் பராந்தகன்.

"அப்படியா..? சில அரச குமாரர்கள் போல் உறையுள் இருந்தால்தான் அழகு என்று நினைக்காமல்...வீரர்கள் மரபில் தோன்றிய குழந்தையல்லவா?" என்றார் அருண்மொழியார்.

ஆதித்தன் சிரித்துக் கொண்டே, "தஞ்சை மன்னர் முத்தரையரின் குமாரன் இளந்திரையன் சில நாட்கள் இங்கு வந்திருந்தான். உறையிலிடப் பட் டிருந்த கத்தியை அவன் வெளியே எடுத்தே நான் பார்க்கவில்லை. ஒரு நாள் விளையாட்டாக 'வாள் போர் செய் வோம் வா' என்று அழைத்தேன். பாவம்! அவன் விளையாட்டாகக் கூடப் போர் செய்ய மனமில்லாதவனாய் என் வார்த்தையைத் தட்டிக் கழிக்கப் பார்த் தான். நான் பிடிவாதமாகச் சொல்லவே போர் செய்ய மனமில்லாதவனாய் உறை யிலிருந்த வாளை எடுக்க முயற்சித்தான். துரதிருஷ்ட வசமாக உறையிலிருந்த வாள் எடுக்க வரவில்லை" என்று சொல்லி விட்டுச் சிரித்தான்.

"உறையிலிருந்த வாள் எடுக்க வர வில்லையா? காரணம்?" என்றார் அருண் மொழியார் ஆச்சரியத்தோடு.

"காரணம் என்ன? வாளில் அவ்வளவு துரு ஏறிப் போய் அது உறையோடு பிடித்துக் கொண்டிருந்தது."

இதைக் கேட்டதும் அருந்திகையும் அனுபமாவும் கூடச் சிறிது வெட்கத்தை யும் விட்டுச் சிரித்தனர். அருண்மொழி யாரும் 'கலகல' வென்று சிரித்து விட்டு, "வெட்கக்கேடு-அப்புறம்...?" என்றார்.

"இப்படிப்பட்ட உன்னத வீரனுக்கு என் தங்கை அனுபமாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று அளவற்ற ஆசை" என்று கூறி இலே சாக நகைத்தான் ஆதித்தன்.

"தஞ்சை மன்னரின் மகனல்லவா? ஆசை எல்லாம் துணிச்சலாகத்தான் இருக்கும்" என்றான் பராந்தகன்.

"நீங்கள் அவனுக்கு உங்கள் சகோதரி யைக் கொடுப்பதாக உத்தேசம் உண்டா?" என்றார் அருண்மொழியார்.

"அடிக்கடி வாளை உறையிலிருந்து எடுக்கப் பழகிக் கொண்டுவா. அப்புறம் யோசிப்போம் என்று சொல்லி இருக் கிறேன்" என்றான் ஆதித்தன்.

"இப்பொழுது அவன் அடிக்கடி உறை யிலிருந்து வாளை உருவி உருவிப் பார்த் துக் கொண்டு வருகிறான் என்று கேள்வி" என்றான் பராந்தகன்.

"வீரன்தான். கல்யாணத்தைப் பற்றி யோசிக்க வேண்டியதுதான்" என்றார் அருண்மொழியார்.

"யோசிக்க வேண்டியதுதான். ஆனால் விஜயனைப் பற்றியும் யோசிக்க வேண்டி இருக்கிறதே" என்றான் ஆதித்தன்.

"விஜயனும் அனுபமாவும் நம்முடைய யோசனை எதையுமே லட்சியம் செய்வ தில்லை" என்றான் பராந்தகன்.

"நம்முடைய யோசனையைக் கேட்கா மல் அவர்கள் கல்யாணம் செய்துகொண் டால் தஞ்சை இளவரசன் இளந்திரைய னின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியதுதான்!"

"அவர்கள் எப்பொழுதுமே எனக்கு விரோதிகள்தானே?" என்றான் விஜயன்.

அருண்மொழியார் சிரித்துக் கொண்டே, "சோழர் குலத்து இளைஞன் ஒருவனுக்குத் தன் குமாரத்தியைக் கல் யாணம் செய்து கொடுக்க வேண்டு மென்று பாண்டிய மன்னருக்கு ஆசை. அப்படி இல்லாவிட்டால் தம் குமாரன் வரகுணருக்காவது சோழர் குல மங்கை ஒருத்தியை விவாகம் செய்து வைத்து விட வேண்டுமென்று விருப்பம். எங்கள் மன்னரின் அபிப்பிராயத்துக்குத் தகுந்த மருமகனும் மருமகளுமாக இருக்கத் தக்கவர்கள் விஜயனும், அருந்திகைப் பிராட்டியும்தான் என்று நினைத்தேன். ஆனால் என் எண்ணம் ஈடேறாது போலி ருக்கிறது" என்று கூறினார்.

"ஆமாம்! சோழ வம்சத்தில் உதித்த பெண்களிடமும் ஆண்களிடமும் கொடும் பாளூரார்களுக்கு முதல் பாத்தியதை இருக்கும் வரையில் வேறு ஒருவரும் அதைப் பற்றி நினைக்க முடியாதுதான்" என்றான் ஆதித்தன்.

இந்தச் சமயத்தில் அரண்மனைச் சேவ கன் வந்து வணங்கி நின்று, அரண்மனை யில் தஞ்சை அரசர் முத்தரையரின் அமைச்சர் புலிப்பள்ளி கொண்டார் வந்து காத்துக்கொண் டிருப்பதாகச் சொன்னான். (தொடரும்)



தளதளக்கும் ஈனோ வயிற்றுக் கோளாறுகளிலிருந்து எட்டே விநாடிகளில் நிவாரணமளிக்கிறது!

அஜீர்ணம், நெஞ்செரிச்சல், அல்லது வாயுப் பொருமல் இவைகளில் எதையும் ஈனோ நிவர்த்திக்கிறது!

ஒரு கிளாஸ் தளதளக்கும் ஈனோ ப்ரூட் ஸால்ட் சாப்பிட்டால் எட்டே விநாடிகளில் வயிற்றுக் கோளாறுகள் சீரா கின்றன. மிதமாக பேதி ஏற்படவிரும்பினால் வெறும் வயிற்றில் சிறிது பெரிய 'டோஸ்' ஈனோ அருந்தினால் போதும். எப்பொழுதும் உங்கள் வீட்டில் ஒரு பாட்டில் ஈனோ வைத்திருங்கள்.



இப்பொழுது மோசடியைத் தடுக்கும் புதிய பாட்டிலில் விற்கப்படுகிறது

(2 சைஸ்களில் கிடைக்கும்)

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்'

அமித அமிலங்களை அடக்கும் தளதளக்கும் பானம்

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்

குரூப் லாபரட்டரீஸ (இந்தியா) பிரைவேட் லிட்.

"ரொம்பச் சுவாதீனமாக என் மடியிலே வந்து படுத்து விட்டதே!" என்று சொல்லிச் சிரித்தாள் ஊர்மிளா, பூனைக்குட்டியின் முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டே.

"உன்னிடம் என்ன? எல்லாரிடமும் அதற்குச் சுவாதீனம் தான். இந்த வீட்டிலே பூனையும் பூனைக்குட்டியும் அடிக்கிற கொட்டத்துக்கு அளவே கிடையாது. சனியனை எடுத்துத் தள்ளிவிடு! புடைவையை யெல்லாம் கசக்கித் தொலைக்கப் போகிறது!" என்று வெறுப்புடன் கூறினாள் பங்கஜம்.

மௌனமாக அவர்கள் பேச்சை ரஸித்துக் கொண்டு ரேழி நிலையருகில் நின்ற ஊர்மிளாவின் கணவர், 'ஊர்மிளா! நேரமாகிவிட்டது! பேச்சுக்குப் பூனைக்குட்டி வேறு கிடைத்து விட்டதா? நீ எழுந்திருந்தாற் போலத்தான்!" என்று கேலி செய்தார்.

"ரகு பள்ளிக்கூடம் விட்டு வர இன்னும் நேரமாகும் இல்லையா? அவனுக்கு என்னை ஞாபகம் இருக்கிறதோ?"

"நன்றாக ஞாபகம் இருக்கே அவனுக்கு! பொழுது சாய்ந்ததும் தான் வருவான். இருந்துவிட்டுப் போயேன்?"

"இல்லை பங்கஜம். இன்னும் அவர் சிநேகிதர் ஒருவர் வீட்டுக்கு வேறே போக வேணும். அப்போ நான் புறப்படட்டுமா?... இது என்னை விடாது போலிருக்கே அம்மா. நான் எடுத்துக் கொண்டு போய் விடட்டுமா?"

பங்கஜத்துக்கென்னவோ இந்தப் பூனையையும் அதன் குட்டியையும் கண்டாலே பிடிப்பதில்லை. சனியன்கள்! ஏதோ அயர்ந்து மறந்து பால் பாத்திரத்தை அலமாரியில் வைக்காமல் கீழே வைத்து விட்டு நகர்ந்தால் கூடப் போச்சு பால், அப்புறம் தபால்தான்!

"தாராளமாக எடுத்துக்கொண்டு போ!" — விளையாட்டுக்காக ஊர்மிளா கேட்பதாகத்தான் பங்கஜம் நினைத்தாள். ஆனால் அவள் பூனைக்குட்டியை மார்போடணைத்த வண்ணம் வெளியே புறப்பட்ட போதுதான் 'விளையாட்டில்லை, நிஜமே!' என்று அவளுக்குப் புரிந்தது.

"வந்தபோது இரண்டு பேராக வந்தோம். இப்போது மூன்று பேராகத் திரும்புகிறோமா?" என்று சொல்லிக்கொண்டே சிநேகிதியின் கணவர் முன்னே நடந்தார். பச்சைக் குழந்தையைத் தூக்கி யெடுத்துக் கொண்டு போவது போலப் பூனைக்குட்டியைமிகுந்தபரிவோடுஅணைத்து





ஒரே இனம்

பீஷ்மன்

எடுத்துக்கொண்டு அவர் பின்னே நடந்தாள் ஊர்மிளா.

அவர்கள் தெருமுனை திரும்பும்வரை வாசலிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பங்கஜம் உள்ளே வந்தாள்.

சமையலறையிலிருந்து வெளியே வந்த பூனை அவளுக்குக் குறுக்கே விழுந்தடித்துக் கொண்டு வேகமாக ஓடியது.

''என்ன அவசரம் தட்டுக் கெட்டுப் போகிறதோ, தெரியவில்லை! போ! போ! உன் குட்டியை ஊர்மிளா தூக்கிக் கொண்டு போய் விட்டாள்'' என்று மனத்துக்குள் கறுவினாள் அவள்.

அப்புறம் அவள் சமையலறையில் வேலை செய்யும் போதும் குறுக்கும் நெடுக்குமாய் 'மியாங் ,.மியாங்' என்று குரல் கொடுத்துக் கொண்டு அது வளைய வளைய வந்தது.

''குட்டியைத் தேடுகிறாயா? தேடு, தேடு!'' என்று அதைப் பார்த்துக் கூறினாள் அவள். அவள் பேச்சைப் புரிந்து கொள்ளத் தெரியாத பூனை அவளைப் பரிதாபமாகப் பார்த்தது. அதன் வேதனை அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. அவள் கணவருக்கும் அவர்கள் மகன் ரகுபதிக்கும் பூனையிடமும் அதன் குட்டியிடமும் உயிர்தான். அவள் அவர்களுக்கு நேர் எதிர். அவற்றால் விளையும் தொல்லைகள் அவர்களை விட அவளைத்தானே அதிகமாகப் பாதித்தன!


காரியாலயம் விட்டு வந்ததும் பூனைக் குட்டியை மடிமீது தூக்கி வைத்துக் கொண்டு சற்று நேரம் கொஞ்சிய பிறகுதான் அவள் கணவர் காப்பி குடிக்க வருவார். ரகுபதியைப் பற்றியோ கேட்கவே வேண்டியதில்லை. வீட்டிலிருக்கும் நேரமெல்லாம் அவனுக்குத் தோழர்கள் பூனையும் குட்டியும்தான். அவர்களைப் பொறுத்த வரை அது ஒரு நல்ல பொழுதுபோக்கு!

ஆனால் அவளுக்கோ?

சாதாரணமாகச் செய்ய வேண்டிய வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கே அவளால் முடிவதில்லை. அத்தனை 'பூஞ்சை' உடம்பு அவளுக்கு. இந்தப் பூனைக் குடும்பம் வேறு அவளது வேலைப் பளுவை அதிகரித்தபோது அவளுக்கு எரிச்சல் வராமல் என்ன செய்யும்?

ஒரு நாள் காலை படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே அவளுக்குத் தலைவலி. எப்படியோ தலையைப் பிடித்துக் கொண்டு எழுந்திருந்து காரியம் செய்தாள் அவள்.

பாலை வாங்கி வைத்து விட்டு அடுப்பிலே கொதித்துக் கொண்டிருந்த சோற்றை வடித்து இறக்குவதற்காக உள்ளே போனாள். அவள் திரும்பிவந்து பார்க்கும்போது பூனைக் குட்டி பால் பாத்திரத்தைக் கீழே கவிழ்த்திருந்தது. அன்று அவளுக்கு வந்த கோபத்துக்கு அளவேயில்லை.



"சனியன், பிடை! இந்த வீட்டிலே நிம்மதியாக ஒரு காரியம் செய்ய முடிகிற தில்லை!" என்று இரைந்தாள் அவள்.

அவள் கூச்சலைக் கேட்டு உள்ளே வந்த அவள் கணவர் அவளைப் பார்த்துச் சிரித்தார்.

"எதைச் செய்தாலும் அப்படியப்படியே அங்கங்கே போட்டு விட்டுப் போகக்கூடாது. தெரியுமோ இல்லையோ?"

"எல்லாம் தெரிந்துதான் இருக்கிறது!"

இப்படி இந்தப் பூனைக் குடும்பத்தால் விளைந்த சிறு சிறு தொல்லைகள் அனந்தம்.

இனிமேல் இந்தத் தொல்லை இருக்காது. குட்டியைத் தேடும் முயற்சியில் இந்தப் பூனையும் எங்கேயாவது ஒழிந்து விட்டால் நல்லதுதான்.

'நாளாவது போவதாவது!' என்பது போல வீட்டிலே அங்கும் இங்குமாய் அன்று முழுக்க அலைந்து திரிந்தது அது.

பகல் பொழுது ஓய்ந்து விட்டது.

வெய்யில் மங்கி வெளியே மந்தாரம் கவிந்திருந்தது. காற்று சிலுசிலுவென்று வீசிக் கொண்டிருந்தது.

'மழை வரும் போல இருக்கே!' என்று நினைத்துக் கொண்டே மொட்டை மாடியில் உலர்த்தியிருந்த துணிகளை யெடுத்து வந்து மடித்து வைத்தாள் பங்கஜம்.

சுவர்க் கடிகாரத்தில் மணி ஐந்து அடித்தது.

'ஏன் இன்னும் ரகு வரவில்லை? குடை கூடக் கொண்டு போகவில்லையே?'

கொல்லைக் கதவைத் தாழ் போட்டு விட்டு வாசலுக்கு வந்தாள். அவளையே உறுத்துப் பார்த்துக் கொண்டு பூனை குறுக்கே ஓடியது.

'ஏதாவது சூடு போட்டாவது இதையும் விரட்ட வேண்டியதுதான். நல்ல காரியம் நடக்கிறதாக இருந்தால்கூட, இது குறுக்கே விழுந்து மறிக்கும் போலிருக்கிறதே!' என்று மனத்துக்குள் சபித்துக்கொண்டே வாசலுக்கு வந்து நின்றாள்.

மழை மப்பில் தெரு இருண்டு கிடந்தது.

சிறு சிறு தூற்றல் விழுந்து கொண் டிருந்தது.

வாசலுக்கு வந்து நின்று ஆகாயத்தைப் பார்த்தாள் பங்கஜம். வானை அடைத்துக் கருமேகம் படர்ந்திருந்தது. வாசற்படியில் ஏறிநின்று வீட்டினுள்ளே பார்த்தாள் அவள். இருட்டு அதற்குள்ளாகவே அடர்ந்து நிறைந் திருந்தது.

உள்ளே போய் விளக்கை ஏற்றி வைத்தாள்.

"பங்கஜம்!"

மழையில் நனைந்த உடையுடன் அவள் கணவர் வந்து நின்றார்.

"மழை வருமென்று தெரிந்து சீக்கிரமாகத் தான் புறப்பட்டேன். அப்படியும் பாதி வழி வருவதற்குள்ளேயே மழை பிடித்துக் கொண்டு விட்டது. ரகு வந்து சேர்ந்துவிட் டான் இல்லையா?"—பேசிக் கொண்டே சட்டையைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டினார் அவள் கணவர்.

"ரகு இன்னும் வரக் காணோமே!"

"வரவில்லையா....! பள்ளிக்கூடம் அப் பொழுதே விட்டிருக்குமே! மழை வேறு பல மாக அடிக்கிறது! சரி! சரி. குடையை எடு. நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்!"

அவர் மறுபடியும் சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டார்.

''காப்பியைக் குடித்து விட்டுப் போங்களேன்!'' என்றாள் பங்கஜம்.

''எல்லாம் வந்து குடித்துக் கொள்கிறேன்!'' குடையைப் பிரித்து விரித்து, மழையில் அவர் வெளியே போய் விட்டார்.

வாடைக் காற்றுடன் ஏதோ பயமும் கலந்து வந்து அவள் உடம்பை நடுங்க வைத்தது.

வாசற் கதவைச் சாத்திவிட்டு வந்து விளக்கின் எதிரிலே உட்கார்ந்தாள். எண்ணங்கள் தாறுமாறாய்த் தறி கெட்டு ஓடின.

வெளியே காற்று 'உஸ்...உஸ்...'என்று ஊளையிட்டது.

வீட்டின் எந்த மூலையிலிருந்தோ பூனையின் மெல்லிய குரல் ஒலித்தது. அந்த ஒலியிலே இழைந்த வேதனை இப்போது அவளுக்குப் புரிந்து விட்டது.

அப்படியே வெகுநேரம் உட்கார்ந்திருந்தாள் அவள். மழை இன்னும் அடங்கிய பாட்டைக் காணோம்.

அவள் வயிற்றில் பசி கிளர்ந்து கொண்டிருந்தது. ஆபீஸிலிருந்து வந்தவர் காப்பி கூடக் குடிக்காமல் போய் விட்டாரே! நான் மட்டும் சாப்பிடுவதா?

ரகு ஏன் இன்னும் வரவில்லை?

அவன் என்ன ஆகியிருப்பான்?

அவளுக்கு ஏனோ பயமாக இருந்தது.

''பகவானே! ரகு பத்திரமாக வந்து சேர வேண்டுமே!''

''மியாவ்...மி...யா...வ்!''

திரும்பிப் பார்த்தாள். சற்றுத் தள்ளி அவளையும் விளக்கையும் மாறி மாறிப் பார்த்துக் கண்களை உருட்டிய வண்ணம் பூனை உட்கார்ந்திருந்தது.

''என் குட்டியை வெகு தாராளமாக ஊர்மிளாவிடம் கொடுத்து விட்டாயே! இப்பொழுது உன் மகன் பள்ளிக்கூடம் விட்டு வரவில்லையென்றவுடன் உன் மனம் என்ன வேதனைப் படுகிறது பார்த்தாயா?'' என்று தன்னைப் பார்த்து அது கேட்பதாக நினைத்துக் கொண்டாள் அவள்.

இருக்கை கொள்ளவில்லை.

எழுந்து வாசற்புறம் போய்க் கதவைத் திறந்தாள். ஈரக்காற்று ஊசியாக வந்து உடலைத் துளைத்தது. மழை பலமாகத்தான் பெய்து கொண்டிருந்தது.

வீட்டு வாசலில் நின்ற மின்சார விளக்கின் ஒளியில் கனமான மழைக் கம்பிகள் வானையும் மண்ணையும் இணைப்பதை அவள் பார்த்தாள்.

அவர் புறப்பட்டுப் போயும் இவ்வளவுநேரம் ஆகிவிட்டதே! ஏன்?

திடீரென்று தெரு விளக்குகள் அணைந்து போய் விட்டன.

அவள் நெஞ்சிலே ஏதோ சுர்ர் என்றது.

ஏதேனும் விபரீதம் நேர்ந்திருக்குமோ!

''தெய்வமே!...தெய்வமே!''—அவளுக்கு வேறொன்றும் சொல்லத் தோன்றவில்லை.

நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது. பங்கஜம் வீட்டிலே உள்ளுக்கும் வாசலுக்கும் நடந்து நடந்து களைத்துப் போய் விட்டாள். நிமிஷம் வளர வளர வேதனையும் பயமும் வளர்ந்தன.

ரகுவையும் காணோம்! தேடப்போன அவள் கணவரையும் காணோம்!

முடிவில், பதினொரு மணி சுமாருக்குச் சபாபதி தனியாளாய் வந்து சேர்ந்தார்.

''ரகுவைப் பார்க்கவில்லையா...?'' கேட்கும் போதே பங்கஜத்துக்குக் குரல் கம்மி விட்டது.

''மத்தியானம் மூன்று மணிக்கே அவன் பள்ளிக்கூடத்தை விட்டுப் போய்விட்டானும்! ஒரு சிநேகிதப் பையன் வீடு பாக்கியில்லை. பார்த்து விட்டேன்! எங்கே போனானோ?''

அவள் அழத் தொடங்கி விட்டாள்.

''இன்றைக்குப் புயல் வேறு வருகிறதாம்! அதுதான் மழையும் காற்றும் இப்படி அடிக்கின்றன. எங்கே போய்த் தேடுவது...?'' அவர் அயர்ந்து போய் உட்கார்ந்து விட்டார்.

''போலீஸிலே சொன்னீர்களா?''

''சொன்னால் மட்டும்? இந்த மழையிலே யார் எங்கே போய்த் தேடுகிறது?''

குத்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வெளியே புயல் கிளம்பியிருந்தது. கூ...கூ என்று காற்று விண்ணைக் குடைந்தது. மழை 'ஹோ' வென்ற இரைச்சலுடன் பொழிந்தது.

வெளியிலும் உள்ளேயும் வீசிய புயலில் கலங்கிப் போய்ச் சபாபதியும் பங்கஜமும் உட்கார்ந்திருந்தனர்.

இரவு யுகமாக நீண்டது.

பசி, தாகத்தையும் தூக்கத்தையும் மறந்து போய் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

விடிந்தது. இருள் வெளிறியது. ஒளி பிறக்கவில்லை. மழை நின்றபாடாயில்லை. புயல் மட்டும் ஓய்ந்திருந்தது.

உட்கார்ந்தவாறே பங்கஜம் தூங்கிப் போயிருந்தாள். சபாபதி எழுந்து வந்து வெளியே பார்த்தார்.

எதிர்ச்சாரியில் நாலு வீடுகளுக்கப்பாலிருந்த குடிசையின் கூரையைக் காணவில்லை. இலைகளும் தழைகளும் தாங்கித் தெருவிலே வெள்ளமாய் மழை நீர் ஓடியது.

உள்ளே வந்து பங்கஜத்தை எழுப்பினார். அவர் கை படுமுன்னே அவள் விழித்துக் கொண்டாள். ''ரகு வந்து விட்டானா...?''

''விடிந்து விட்டது, பங்கஜம்! நான் போய்ப் போலீஸிலே சொல்லி விட்டு வரேன்!''

''உ...ம்!''

அவர் குடையை எடுத்துக் கொண்டு வெளிக் கிளம்பி விட்டார்.

விடிந்ததும் விடியாததும் ஒன்று போலத் தான் இருந்தன பங்கஜத்துக்கு.

இன்னும் எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கை நிறுத்திவிட்டு வந்து சுவரிலே சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள். எழுந்து போய், பல் தேய்க்க வேண்டும் என்ற உணர்வு கூட அவளுக்கு ஏற்படவில்லை.

குட்டியைப் பறி கொடுத்த பூனை சமையலறையில் குரல் கொடுத்தது. அப்பூனை இட்ட சாபம் தான் ரகுவைப் பிரித்து விட்டதோ?

'ரகுவைக்கொண்டு சேர்த்துவிடு, கடவுளே! நாளைக்கே ஊர்மிளாவுக்கு எழுதிப் பூனைக் குட்டியைப் பூனையிடம் சேர்த்து விடுகிறேன்.'

போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருந்த சபாபதி வீடு திரும்பி விட்டார். பங்கஜம் எழுந்து சென்று பல் துலக்கிவிட்டு வந்து அடுப்பை மூட்டினாள்.

அவள் காப்பி கொணர்ந்து கொடுத்த போது சபாபதி வேண்டாமென்று சொல்லவில்லை. ஏதோ வேதனைச் சிந்தனையுடன் அதை வாங்கிக் குடித்து வைத்தார்.

பங்கஜம் காப்பி குடிக்கவில்லை. அவளுக்கு எதுவுமே வேண்டியிருக்கவில்லை. யந்திரம் போல, அவரை முன்விட்டு ஏதோ காரியங்களைச் செய்தாள்.

மணி ஒன்றடித்தது. மழை நீரை இருபுறமும் வாரியடித்துக் கொண்டு வாசலிலே ஒரு கார் வந்து நின்றது.

சபாபதி எழுந்து வாசலுக்கு வந்தார்; பங்கஜமும் உள்ளிருந்து ஓடி வந்தாள்.

காரிலிருந்து ஊர்மிளாவின் கணவர் இறங்கினார். அவருக்குப் பின்னால்...

''ரகு...!'' பங்கஜம் இரைந்தே விட்டாள்.

பூனைக்குட்டியை அணைத்தபடியே கீழே இறங்கிய ரகுவை மௌனமாகப் பார்த்தார் சபாபதி.

''மன்னிக்கணும், மிஸ்டர் சபாபதி!'' என்று உள்ளே புகும்போதே தொடங்கினார் ஊர்மிளாவின் கணவர்.

சபாபதிக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஊர்மிளாவின் கணவர் தொடர்ந்தார்:

''நேற்று உங்கள் வீட்டுக்கு வந்துவிட்டுப் போனேனமா? ஊர் போய்ப் பஸ்ஸிலிருந்து இறங்குகிறேம், பின்னால் இவனும் அதே 'பஸ்'ஸிலிருந்து இறங்குகிறான். 'எங்கே'டா இப்படி?' என்று கேட்டேன். இவன் சிநேகிதப் பையனும்—யாரோ பாலுவாமே! அந்தப் பையனுக்கு அக்கா வீடு எங்கள் ஊரிலேதான் இருக்கிறதாம். அங்கே ஏதோ விசேஷமாம். பள்ளிக்கூடம் விட்டதும் பாலு கூப்பிட்டானென்று அவனோடு இவனும் புறப்பட்டு விட்டானும். அந்தப் பையன் கொஞ்சம் பசையுள்ள இடத்துப் பையன் கையிலே காசு இருந்திருக்கிறது. இரண்டு பேரும் பேசாமல் கிளம்பியிருக்கிறாங்க! எப்படி?... 'வீட்டிலே சொல்லி விட்டு வந்தாயா'டா?' என்றேன். பயல் மலங்க மலங்க விழித்தான். என்ன செய்ய? மழை வேறு பிடித்து விட்டது. உங்களுக்கு ஒரு தந்தி கொடுத்துவிட்டு மறுநாள் காலை பஸ்ஸில் இவனைக் கொண்டு வந்து விடலாமென்று நினைத்துத் தந்தி கொடுத்தேன். இரவு அடித்த புயலில் 'தந்தி உங்களுக்குக் கிடைத்திருக்க முடியாது!' என்று தோன்றியது. பஸ் இன்று கிடையாது. 'ஒரு காரை அமர்த்திக் கொண்டு போய் விடுங்கள். பங்கஜம் வீணே கவலைப் பட்டுக் கொண்டிருப்பாள்' என்று ஊர்மிளா சொன்னாள். புறப்பட்டு விட்டேன். புறப்படும் போது பயல் பூனைக் குட்டியையும் தூக்கிக் கொண்டு வந்துவிட்டான். நீங்கள் ரொம்பவும் வேதனைப் பட்டிருப்பீர்கள், இல்லையா?''

சபாபதிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

''பூனைக் குட்டி எங்கேடா?'' என்று கேட்டார் வந்தவர், பங்கஜத்தின் அணைப்பில் ஒண்டிக் கொண்டிருந்த ரகுவைப் பார்த்து.

''அதோ!'' என்று அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் பூனை தன் குட்டியை நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

தான் அடைந்த வேதனையை அந்தப் பூனையும் அனுபவித்திருக்கும் என்பதைப் பங்கஜம் உணர்ந்து கொண்டாள்.


ஜூலை
வெளியீடு
சிட்டாடல்
மல்லிகா
ஆர். கணேஷ் * பத்மினி * டி. எஸ். பாலையா
தங்கவேலு * எம். என். ராஜம்
பேபி ராஜகுமாரி நடித்தது
சிட்டாடல்
புரொட்யூஸர் & டைரக்டர் :
ஜோசப் தளியத் (Jr.)



தமிழ் எழுத்தாளர் சங்கம் ஐந்தாவது மகாநாடு

● சென்னையில் ஜூன் 22, 23 தேதிகளில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் சங்க மகாநாட்டுக் காட்சிகள்: 1. இந்த ஆண்டு எழுத்தாளர் சங்கத்தின் கேடயம் வழங்கப்பட்ட இரு பெரும் புலவர்களான திருசம்பந்த முதலியார், திருசோமசுந்தர பாரதியார் ஆகிய இருவரையும் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறது. 2. செங்கோட்டை ஸ்ரீ சோதரிகள் கோமதியும், சுப்புலட்சுமியும் பிரார்த்தனைக் கீதம் பாட மகாநாடு ஆரம்பமாயிற்று. 3. மகாநாட்டை ஒட்டி வைக்கப்பட்டிருந்த தமிழ் புத்தகக் கண்காட்சி. 4. முன்னாள் நீதிபதி கணம் வரதாச்சாரியார் மகாநாட்



டைத் துவக்கி வைக்கிறார். 5. நாடகப் பேராசிரியருக்குக் கேடயம் வழங்கப்படுகிறது. 6. அமெரிக்கச் செய்தி ஸ்தாபன அதிகாரி திரு விக்கின் பாராட்டுரை கூறுகிறார். 7. நாடகப் பேராசிரியர் நன்றி கூறுகிறார். 8 திரு சோமசுந்தரப் பாரதியார் பாராட்டுக்குப் பதிலுரைக்கிறார். அப்பொழுது கூடியிருந்த கூட்டத்தில் ஒரு பகுதி 9. சிறுகதை விவாத அரங்கத் தலைவர் திரு கி. வா. ஜகந்நாதன் சிறுகதையின் இன்றைய நிலையைப் பற்றிப் பேசுகிறார். 10 திரு தேவன் படத்தைத் திருமதி பொ. கி. திறந்து வைக்கிறார். 11 மகாநாட்டில் பேசிய திரு ஏ. சிதம்பரநாதசெட்டியார். 12 சிறுகதை விவாத அரங்கத்தைத் துவக்கி வைத்த திரு அகிலன். 13 மகாநாட்டில் பாராட்டப் பெற்ற எழுத்தாளர்கள் 14 மறுநாள் மாலையில் மயிலையில், தெலுங்குப் பேராசிரியர்கள் பாராட்டு விழாவுக்குத் தலைமை வகித்த திரு யு. கிருஷ்ணராவ் தலைமையுரை நிகழ்த்துகிறார். 15. சிறுகதையைப் பற்றிப் பேசிய திருமதி வசுமதி ராமசாமி.

போட்டோ: விசன்


அன்பு எங்கே?

மலர்களின் மலர்ச்சியும், பறவை இனங்களின் எழுச்சியும் சேர்ந்து ரம்மிய மாக்கும் விடியற்கால நேரம்.

வைகறையின் இருள் திரையைக் கிழித்துக்கொண்டு முன்னேறியது ரயில். ராகவனின் இருதயத்தைக கீறிக் கொண்டு போந்தது பெருமூச்சு.

''மஞ்சு..மஞ்சு..'' என்று அருகிலிருந்த மனைவியைத் தட்டி எழுப்பினார். ''சீக்கிரம் எழுந்திரு, மஞ்சு! அடுத்தது நம் ஊர்தான்'' என்ற அவரது குரலைக் கேட்டதும் கண்ணிமைகளைத் தொத்திக் கொண்டு நின்ற தூக்கத்தை விரட்டி விட்டு எழுந்தாள் மஞ்சுளா.

அவளது இதழ்களின் ஓரத்தே இலேசான சிரிப்பின் இழை யோடியது. 'ஊர் வந்து விட்டதா? இன்



னும் சிறிது நேரத்தில் அவள் தன் வீட்டுக்குப் போகப் போகிறாளா? போனதும் சுகுணா, கலா, ரவி, ஜிகு நால்வரும் ஆர்வத்தோடு ஓடி வந்து, ஆவலோடு அவளைக் கட்டிக் கொண்டு ''அம்மா'' என்று அழைக்கப் போகிறார்களா?' அவர்கள் முகம் அவள் அகக் கண்களில் எழும்ப, உள்ளக் குரலின் பிரலாபம் நெஞ்சை நிறைத்தது.

எத்தனை நாட்களாகிவிட்டன, அவர்களை விட்டு அவள் பிரிந்து - இல்லை, குரூரமான விதியின் கொடுமையால் பிரிக்கப்பட்டு?

காலம் ஓடியது. விடிந்தது. இருட்டியது. ஒளியும் இருளுமாகச் சேர்ந்து எட்டு ஆண்டுகளை விழுங்கி விட்டனவே. இப்போதுதான் அவளுக்கு விடிந்ததா? மறைந்துபோன பழைய நினைவுகள் மின்னலைப் போல் ஒளிர்ந்து, திரண்டு வரலாயின அவளது இதய வானிலே.

வாசலிலே வண்டியோசை கேட்டதும், வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் சுகுணா. ''பாட்டி! அம்மா வந்து விட்டாள் போலிருக்கிறதே!''

''பின்னே என்ன குறைச்சல் எனக்கு? வந்து விட்டாளல்லவா மகராசி? மூக்கொழுக, நாக்கொழுக உங்களை என் காலிலே கட்டி விட்டுப் போனாள். இப்போது எல்லோரும் வளர்ந்து தங்கள் வேலையைத் தாங்களே பார்த்துக் கொள்ளும் சமயத்தில் வந்து விட்டாளாக்கும், தன் உரிமையை நிலை நாட்ட.'' கடுகடுப்பும், சிடுசிடுப்பும் தாண்டவமாடின மங்களத்தின் பேச்சில்.

சுகுணா வாயைத் திறக்க வில்லை. விவரம் அறிந்தவள், எட்டு ஆண்டுக

ளாகப் பாட்டியின் கோப தாபங்களுக்கு ஈடு கொடுத்துப் பழக்கப்பட்டவள்.

அந்தப் பொறுமை கலா, ரவி, ஜிகுவுக்கு வந்து விடுமா, என்ன?

"அம்மாவாவது, வருவதாவது? அம்மாதான் இறந்து போய் விட்டாள் என்று சொன்னீர்களே, பாட்டி?"



"பெரியவர்களான நீங்களே பொய் சொல்லலாமா?"

"பின், நாங்கள் சொல்லும்போது மட்டும் நீங்கள் பெரிதாய்க் கண்டிக்க வந்து விடுகிறீர்களே!"

இவ்வாறு, தலைக்கு ஒரு கேள்வி போட்டு மடக்கியதும், மங்களத்தின் கண்களில் கனல் பறந்தது.

"என்ன, பெரிய தப்பைக் கண்டு விட்டீர்கள் இப்போது? பைத்தியம் பிடித்துப் பாயைப் பிராண்டிக் கொண்டிருந்தாள் உங்கள் அம்மா இவ்வளவு நாள். இப்போதுதான் குணமாகி விட்டதென்று அவளைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். பைத்தியம் பிடித்தவள் இருந்தும், இல்லாததும் ஒன்றுதானே என்று அப்படிச் சொன்னேன். அதனால் என்ன குடிமுழுகி விட்டதாம்....?" மூசு மூசுவென்று இரைந்தபடியே அவள் இவ்வாறு பேசினாள்.

"பைத்தியமா அம்மாவுக்கு..?"

குழந்தைகளின் ஆவலும் ஆசையும் சப்பென்று அடங்கிப் போய் விட்டன. மகிழ்ச்சியால் விரிந்திருந்த முகங்கள் ஏக்கத்தாலும், ஏமாற்றத்தாலும் சுருங்கின.

தங்களைச் சமாளித்துக் கொள்ளக்கூட நேரமில்லை அவர்களுக்கு. வேகமாக உள்ளே வந்தாள் மஞ்சுளா.

இதயத்தில் அடைபட்டுக் கிடந்த தாய்மை உணர்ச்சியின் ஆவல் கிளர்ந்தெழ 'அடி என் கண்களா!' என்று இரு கைகளையும் அகல விரித்தபடியே அவர்களை நோக்கிப் பாய்ந்தோடி வந்த அவளைக் கண்டதும், சுகுணா உள்பட யாவரும் மிரண்ட பார்வையோடு பின்னுக்கே சென்றனர்.

இந்தச் செய்கை 'சுளீர்' என்று அவள் உள்ளத்தைப் போய்த் தாக்கியது. பல தரப்பட்ட உணர்ச்சிகளால், நெஞ்சம் நிறைந்து, கண்களில் நீர் குளம் கட்டி விட்டது.

"மஞ்சு! என்ன இது? வரும் போதே?....எட்டு ஆண்டுகளின் இடைவெளியை ஒரே நொடியில் கடந்துவிட முடியுமா? அசடு. எல்லாம் போகப் போகச் சரியாகி விடும், பார்!" உரிமையோடு ராகவன் கடிந்து கொண்டதும் அவளுடைய நெஞ்சம் சமாதானம் அடைந்து விட்டது.

தூர இருந்தபடியே, தான் பெற்ற செல்வங்களின் இளவனப்பைக் கண்களால் அளந்தாள். "ஆறு மாதக் குழந்தையாய் அவள் விட்டுச் சென்ற ஜிகுவா இவன்? ரவி எவ்வளவு உயர்ந்து விட்டான்? கௌனே போட்டுக் கொள்ளாமல் முரண்டு பிடிக்கும் கலாவா இந்தப் பட்டுத் தாவணி அணிந்துள்ள சிறுமி? பாவாடை கூடச் சரியாகக் கட்டிக் கொள்ளத் தெரியாத சுகுணாவா



இந்த 'ஷிபான்' புடவையை இத்தனை அழகாகக் கொஞ்சமும் மடிப்புக்கலையா மல் உடுத்திக் கொண்டிருக்கிறாள்?

நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் புல்லரித்தது.

"என்னடி அம்மா, அப்படியே சிலை யாக நின்று விட்டாய்? பழைய பிரமை இன்னும் தெளியவில்லையா? உள்ளே போய்க் குளித்து, கும்பிட்டு, சாப்பிட்டு உன் வேலையைக் கவனிப்பதுதானே? இதுவும் என்ன பைத்தியக்கார ஆஸ் பத்திரி என்ற நினைப்போ, எல்லாம் பக் கத்திலே வந்து ஒருத்தர் செய்வதற்கு?" என்ற மங்களத்தின் கொடூரத்தைச் சிந்திய சொல்லம்புகள் மரத்துவிட்ட அவளுடைய அவயவங்களுக்கு உணர் வூட்டி, அவளை அவ்விடத்திலிருந்து உள்ளே விரட்டி யடித்தன.

மஞ்சுவுக்கும் ஓர் உண்மை தெளி வாகியது. 'இந்த எட்டு ஆண்டுகளிலும் மங்களத்தின் மனப்பான்மை மட்டும் தினையளவும் மாறவில்லை. அன்று போல் இன்றும் கொடுமையின் உருவாகத்தான் இருக்கிறாள். அன்று அவள் மூத்த பெண் ணின் பத்தாவது பிரசவத்துக்கு ஒத் தாசைக்குத் தன்னை அனுப்பவே தானே கைக் குழந்தைக்காரியான தன் உட லும், உள்ளமும் ஒருங்கே புண்படுத்தப் பட்டு, இறுதியில் மூளையே கலங்கிப் போகும் நிலைக்கு வர நேரிட்டது?'

மறந்துபோன பழைய நினைவுகள் நீர்க் குமிழிகள் போல வெடித்துச் சிதறின, மஞ்சுவின் இதயத்திலிருந்து.

இனி எதற்குச் சென்று போனதை நினைக்க வேண்டும்? விட்ட இடத்தி லிருந்து கதையைத் தொடர்ந்து படிப் பது போல, விட்ட இடத்திலிருந்து வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

மணவாழ்க்கையின் இன்ப நுகர்ச் சிகள், பெண்மையின் லட்சிய சித்தி யான தாய்மைப் பேறு, மங்களம் பொங்கும் இல்லற வாழ்வு...இவ்வளவும் முன்னைப் போல் அவள் மீண்டும் அடை யப் போகிறாள் அல்லவா?

அகத்திலே பிறந்த உற்சாகம் முகத் திலும் பிரதிபலிக்க, குளித்து வேற்றுடை அணிந்து கொண்டு சமையலறையி னுள்ளே நுழைந்தாள் மஞ்சுளா.

நீண்ட நாள் பழக்கம் விட்டுப் போகுமா? அவள் கைகளும் கால்களும் பரபரத்தன, அதைச் செய்வோமா இதைச் செய்வோமா என்று.

குரோதமும், வெறுப்பும் உமிழும் பார்வையை அவள் மேல் அள்ளி வீசினான் மங்களம்.

"நீ பேசாமல் சாப்பிட்டுவிட்டுப் போய்ச் சேர். வேறு எதிலும் தலையிட வேண்டாம்" என்று கட்டளையிட்டாள்.

'சமையலறை ஆட்சியைவிட மனம் வரவில்லைபோலிருக்கிறது மாமியாருக்கு. அவர் போக்குப்படிதான் விட்டுப் பிடிப் போமே கொஞ்ச நாட்கள்' என்று இலேசாக மனத்துக்குள் சிரித்தபடியே அரை நொடியில் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கூடத்துக்கு வந்து சேர்ந்தாள் மஞ்சுளா.

"இங்கே வாம்மா கலா. நான் உனக் குப் பொட்டு வைத்து விடுகிறேன்."

"வேண்டியதில்லை. இந்த நட்சத் திரம் மாதிரி பொட்டெல்லாம் வைக்கத் தெரியாது உங்களுக்கு."

பட்டென்று வந்தது பதில்.

மஞ்சுவின் ரோஜா இதழ்களில் இள நகை வெடித்துச் சிதறியது—"அப் படியா? இந்தக் காலத்துக் குழந்தைகள் தான் எவ்வளவு முன்னேறி விட்டார் கள்? எதற்கும் பிறர் கையை எதிர் பார்ப்பதில்லை அவர்கள்."

சுகுணாவைத் தவிர மற்றவர்கள் பள் ளிக்குச்சென்றுவிட்டனர். ஆர்வத்தோடு அவளை அணைத்துக் கொண்டாள் மஞ்சு. அடக்கி வைத்திருந்த அன்பு பீறிட்டுக் கொண்டு வந்து அலைமோத அளவளாவி னாள் ஆசை மகளுடன். "என்ன சுகு! வந்ததிலிருந்து பேசவேயில்லையே நீ? அவர்கள்தான் குழந்தைகள். உனக்கு அப்போது எட்டு வயதிருக்குமே. உனக் குக் கூடவா தெரியவில்லை என்னை? வெட்கமா? அம்மாவிடம் கூடவா வெட்கம் உனக்கு?"

பதிலேதும் பேசவில்லை சுகுணா. மெல்ல அவளது அணைப்பிலிருந்து தன்னை விடு வித்துக் கொண்டு, விசுக்கென்று அப்பால் போய் விட்டாள்!

விக்கித்துப் போனாள் மஞ்சுளா. ஏமாற்றத்தின் எல்லையில் உள்ளம் தவித் தது; துடித்தது. "எட்டு ஆண்டுகளின் இடைவெளியில் என் குழந்தைகளுக்கு நான் அன்னியளாகி விட்டேனா?" வாட் டமும், சோகமும் அவள் முகத்தில் குமிழியிட்டுக் கொப்பளித்தன.

ஒருவிதமாக அன்றையப் பகல் பொழுது கழிய இரவு வந்தது.

கையில் வெற்றிலைத் தட்டும், பால் செம்புமாக மாடியிலுள்ள தங்கள் அறையை அடைந்த மஞ்சுளாவுக்கு புதுமணப் பெண்ணைப் போல் உடல் சிலிர்த்தது. உள்ளம் கிளுகிளுத்தது. அவருக்குத்தான் எவ்வளவு ஆவல் இருக் கும், அவளைத் தனிமையில் சந்திக்க? அவளாவது, தன்னை மறந்த அபோமய மான நிலையிலிருந்தாள் இது நாள்வரை யில். ஆனால் அவரோ....பாவம்.....





புதுமை பெறுக!
இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்! நாள்முழுதும்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோ ரம்மிய மணம் கொண்டது.
CHARMIS Talc
சார்மிஸ்
டால்கம் பவுடர்
உன்னத, மனோரம்மிய மணத்துடன்.



இருட்டு ரங்களில்
உங்களு கோர்
வழிகாட
ESTRELA
BRIGHT LIGHT
LONG LIFE
எஸ்ட்ரேலா
பாட்டரீஸ
எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.
பம்பாய் — கல்கத்தா — டில்லி — கான்பூர் — மதராஸ் — நாகபூர்

காகிதத்தின்
மீது
இன்பத்திற்கு





சுலபமாக எழுதுவது சிலசமயம் பெரிய பிரச்னை ஆகிவிடுகிறது. தகுந்த மனநிலையும் உயர்தரக் காகிதமும் மட்டுமன்றி, இவ் விரண்டுக்கும் பொருத்தமான பேனாவும் உங்களுக்கு அவசியம். ப்ளேடோ பேனாக்கள் சுகமாக, நேர்த்தியாக எழுதுவதற்கென தயாரிக்கப்பட்டவை. அவற்றின் நிப்கள் நுண்ணியவை. உழைப் பவை. வேலைநிமித்தமாகவோ பொழுதுபோக்காகவோ நீங்கள் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளும்போதும் ஒழுக்கில்லை. காகிதத்தைக் கிழிப்பதில்லை.

plato

எனில் காகிதத்தின்மீது இன்பம்!

விலை ரூ. 4 முதல் ரூ. 18 வரை

ஒரு மாத்ரே உற்பத்தி PLATO

வியாபார விபரங்களுக்கு மேற்கண்ட எங்கள்
பூரண விநியோகஸ்தர்களுக்கு எழுதவும் :

பெஸ்ட் பௌண்டன்பென் டிபோ,
79, தேவ்கரன் மான்ஷன்,
பிரின்ஸெஸ் தெரு, பம்பாய் 2.

shilpi-mp-468 Tamil:

புருவம் கேள்வியாக வளைய, கடைக் கண்ணில் கேலிப் பார்வை சிந்த அறையினுள்ளே காலடி யெடுத்து வைத்த மஞ்சுளா திடுக்கிட்டாள். அங்கே ராகவன் இல்லை! கீழே அவர் ஜமக்காளத்தை உதறும் சத்தம் தெளிவாக அவள் காதுகளில் விழுந்தது.

உள்ளம் துணுக்குற, கண்களில் கண்ணீர் வேலி கட்டச் சில வினாடிகள் சிலையாய்ச் சமைந்து போனாள் அவள்.

அன்பைக் கொட்ட ஏங்கும் அவளது மனத்தின் துடிப்பை யாருமே அறியவில்லையா? அவள் பெற்ற குழந்தைகளுக்குத்தான் அவள் அன்னியளாகிவிட்டாள் என்றால், கைப்பிடித்த கணவனுக்கும் கூடவா.....? ஏன்..? ஏமாற்றம் இருளாக வந்து, அவள் நெஞ்சத்தைக் கவ்வியது.

அடுக்கடுக்காக அவள் மனத்திலிருந்து எழுந்த கேள்விகளுக்கு விடையே போல் கீழே மங்களம் கூறிக் கொண்டிருந்தாள் ராகவனிடம்.

''என்னவோ அப்பா. உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன். அவளைச் சாதாரணமாக நம்மைப் போல் பாவிக்க முடியுமா? டாக்டர்கள் சொன்னாலாயிற்றா? எப்படி மாறுமோ அவள் குணம்? யார் கண்டது? அதனால்தான், அவளை வேலை எதுவும் செய்ய விடவில்லை. குழந்தைகளையும் எச்சரித்து விட்டேன் நான். உனக்குத்தான் சொல்கிறேன்......''

மேலே எதுவும் கேட்கப் பிடிக்கவில்லை மஞ்சுவுக்கு. தீவிரமான வேதனையால் தலை சுற்றியது. சிறிது காலம் மூளை கலங்கிக் கிடந்ததால், இனி அவள் வாழ்வில் மலர்ச்சிக்கு இடமில்லை என்றா பொருள்? அதோ கோடிவீட்டுக் கனகம், காச நோயால் பீடிக்கப்பட்டு, வருடக் கணக்காய் ஸானடோரியத்தில் தங்கிச் சிகிச்சை பெற்று, பிறகு வீட்டுக்கு வந்தாளே, அவளைத் தள்ளியா விட்டனர் அவள் வீட்டார்? அடுத்த தெரு அபிராமி, புற்றுநோய் என்று ஆஸ்பத்திரியிலே கிடந்தாளே மாதக்கணக்கில். பிறகு வீடு திரும்பியவள் நாலைந்து குழந்தைகளுக்குத் தாயாகக்கூட அல்லவா ஆனாள்?

அந்தக் கொடிய நோய்களையெல்லாம் விடவா கொடியது இந்த மூளைக் கலக்கம்? அதிலும், அவள் பூரண குணமடைந்து விட்டாள் என்று ஒன்றுக்கு மேற்பட்ட டாக்டர்கள் அறுதியிட்டு வேறு கூறியிருக்கிறார்களே! இன்னும் இவர்களுக்கு என்ன சந்தேகம்?

அறையின் கும்மிருட்டும், பயங்கர அமைதியும், வறண்ட சூழ்நிலையும் சேர்ந்து பல கோடி எண்ணங்களை அலைபாயச் செய்ய, அவள் எப்பொழுது கண்ணயர்ந்தாளோ அவளுக்கே தெரியாது.

* * *

மறுநாளிலிருந்தே சோதனைக் காலம் ஆரம்பமாகி விட்டது மஞ்சுவுக்கு. மாமியாரின் துவேஷம் நிறைந்த அலட்சியம் அவளுக்குப் பழக்கமானதுகூட. கணவர் குழந்தைகளின் தோரணையிலும் பேச்சிலும்கூட, தெளிவானதொரு மாற்றம் தெரியலாயிற்று.

வீட்டோடு மட்டுமா? வெளியூரிலிருந்து அவளது ஓரகத்திமாரும், நாத்திமாரும் வந்தனர். அக்கம்பக்கத்தினர் வந்தனர். காட்சிசாலையிலுள்ள நூதன பிராணியைக் காண்பவரைப் போல, அவளைக் கண் கொட்டாமல் வியப்புடன் பார்த்து விட்டுச் சென்றனர்.

அவளைக் கேலி செய்தனர். தன் நினைவு இல்லாமல் அவள் முன் செய்த ரசாபாசமான செயல்களை யெல்லாம் அம்பலத்துக்கு இழுத்தனர்.

அவமானம் தாங்க முடியாத மஞ்சுவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. காயம்பட்ட மிருகம் தன் குகையில் மறைந்து கிடப்பதைப் போல, அவளும் இந்தப் போலிப் பரிவையும், பரிகாசப் பேச்சுக்களையும் தவிர்ப்பதற்காகத் தன் அறையினுள்ளே முடங்கிப் போய்க் கிடந்தாள்.

அப்படியும் வம்பும், வழக்கும் அவளைத் தேடித்தான் வந்தன.

அவள் அறையின் உள்ளே முடங்கிக் கிடப்பது தெரியாமலோ, அல்லது தெரிந்துதான் அவள் காதிலும் படட்டுமே என்ற அலட்சியத்துடனோ, அவ

ளது நாத்திமாரும், ஓரகத்திமாரும் அவளைப் பற்றியே வம்பளந்தனர்.

''பாவம் சுகுணா! அழாமல் வேறு என்ன செய்வாள்? இப்படிப்பட்ட தாயார் இறந்து போயிருப்பதே மேல் அல்லவா? அப்போது யாரும் ஏதும் தூண்டித் துருவிக் கேட்க மாட்டார்கள். இப்போதோ, 'பைத்தியத்தின் பெண்ணா?' என்று பெண் கொள்ளவே மறுக்கிறார்கள். அநேகமாக முடிந்து போயிருந்த அந்தச் சிங்கபுரம் வரன் இப்போது மஞ்சுவின் வருகையினால்தானே முறிந்து போய் விட்டது?''

''ஜிகுவும், ரகுவும் பள்ளிக்குப் போக மாட்டேன் என்கிறார்கள். மற்றக் குழந்தைகள் உங்கம்மாவுக்குப் பைத்தியமா என்று விசாரித்து அவர்களை வேடிக்கை செய்கிறார்களாம்.''

''அவர்களாவது குழந்தைகள். ராகவன் அண்ணாவைப் பார்த்தாயா? அவன் முகத்தைக் கண் கொண்டு பார்க்கவே முடியவில்லையே!''

''உண்மைதான். காணாதபோது மனத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். இப்போது கண் எதிரேயே கண்டும் காணாதவராய் நடந்து கொள்ள வேண்டுமென்றால்.....''

''அதிலும், இப்போது எப்படித்தான் இருக்கிறாள் பார்த்தாயா, அவள் மோகினி போல?...''

''விடிய விடிய முப்பத்தைந்து வயது கூட ஆகவில்லையே. அதிலும் நல்ல பராமரிப்பு வேறு. உ...ம், எது இருந்து என்ன? வெறும் எட்டிக்கனி. யாருக்கும் ஏதும் பயனில்லை அவளால். சோற்றுக்குக் கேடாய், பூமிக்குப் பாரமாய் என்ன வாழ்க்கையோ?''

அவர்கள் பேச்சு மஞ்சுளாவுக்கு எரிச்சலைத் தந்தது. நெஞ்சை உறுத்தியது. ஆனாலும், அவை அவ்வளவும் உண்மை. மறுக்க முடியாத உண்மைதானே?

அவள் தன் கணவர், குழந்தைகளோடு ஒரே வீட்டில்தான் இருந்தாள். இருந்தாலும், அவளுக்கும், அவர்களுக்கும் இடையில் தான் எவ்வளவு தூரம்?

வாழ்க்கைக்கு அன்பினாலே வரும் அற்புதமும், அழகும், ஆனந்தமும் வேறு எதனாலும் வருவதில்லை என்பார்கள். ஆனால் அவளது கனிந்த இருதயத்திலே வெள்ளமாகப் பொங்கித் திரண்ட அன்பின் பிரதிபலிப்பை அவள் யாரிடமும் காணவில்லையே!

அன்பின் அழிவைவிடத் துயரம் தரக் கூடியது வேறு எது?

மற்றவர் வாழ்க்கைக்கு ஒருவர் முட்டுக் கட்டையாக இருந்தால், அவர் வழியிலிருந்து விலகுவதுதான் நல்லது. அத்தகைய சுயநலத் தியாகம்தானே உண்மை அன்பின் அடையாளமாகும்?

மனம் சலித்து, உடல் ஓய்ந்து, உள்ளம் உளுத்துப்போன மஞ்சுவின் மனம் உறுதி பெற்றது. ஒரு புதிய யோசனையின் அழுத்தம் அதில் விழுந்தது!

அதற்கடுத்த நாள். பிறந்து வளர்ந்து வாழ்க்கையில் அடிபட்டு மணந்து மக்களைப் பெற்று வாழ்ந்தவள் மூச்சு ஒடுங்கிக் கிடந்தாள்!

''என் மருமகளைப் போல் உண்டோ உலகில்'' என்று மாய்ந்து போனாள் மங்களம். அவள் மூச்சுக் காற்றும் மேலே படாமல் விலகிச் சென்ற ராகவன், சில்லிட்டுப் போன அவள் முகத்தின் மேல் முகம் வைத்துப் புலம்பினார். அன்று அவளது அன்பு அணைப்பிலிருந்து விலகிய சுகுணா இன்று ''அம்மா! அம்மா!'' என்று அலறி அவள்மேல் விழுந்து புரண்டாள்.

ஆனால், தனது கடைசி மூச்சுத் துடிப்பு உள்ளவரையில் 'அன்பு எங்கே?' என்று அலறி அலைபாய்ந்த மஞ்சுவின் ஆத்மாவுக்கு இதனாலெல்லாம் சிறிதளவாவது சாந்தி கிட்டுமா?

பொம்மைக் குழந்தை

அழகனார்



○❊○

சின்னக்குடம் நன்றெடுத்துச்
 சிறிதளவே தண்ணிமொண்டு
அன்புடனே நான் உனக்கு
 அழகுபெற நீராட்டி

கண்ணைத்தான் பறிக்குமந்தக்
 கண்ணாடிக் கிண்ணத்திலே
உண்ணத்தான் நான்உனக்கு
 உணவெடுத்துக் கொண்டுவந்தேன்.

அன்னமுடன் சர்க்கரையை
 அளவோடு கலந்துடந்தன்
சின்னஞ்சிறு வாய்தனிலே
 செங்கரும்பே நான்வைத்தேன்.

ஒருசிறிதும் உண்ணாமல்
 'உம்'மென்று இருந்துவிட்டாய்;
பெருங்கவலை நான்கொண்டு
 படுத்துவிட்டேன் உண்ணாமல்.


அன்போடு என்னிடத்தில்
 ஒரு சொல்லும் சொல்லவில்லை;
என்னத்தை நான் உனக்கு
 இடராகச் செய்து விட்டேன் ?

○❊○



அரசகுமாரி ஆயிஷா 1

கதை: கௌசிகன்
படம்... பாபு



ஆயிரத் தோரு இரவுகளிலே சொல்லப்பட்ட அராபிக்கதைகளிலே வரும் புகழ் பெற்ற 'பாக்தாத்' நகரத்தை மகிமை பொருந்திய 'ஷாலிமார்' என்பவர் ஆண்டு வந்தார். அரண்மனைப் பணியாட்களில் காசிமும் ஒருவன்...

ஒருநாள் 'காசிம்' தூங்கிக் கண் விழித்தபோது விடிந்து வெகு நேரமாகி விட்டதை அறிந்து பரபரப்புடனும் பயத்துடனும் அரண்மனையை நோக்கி ஓடுகிறான் ....





அரண்மனையிலே அன்றாடம் கவனிக்க வேண்டிய அலுவல்கள் அவனுக்கு அனேகமுண்டு. அன்று நேரங் கழித்து வந்ததால் சித்திரவேலைப்பாடமைந்த ஒரு ஜாடியை வேகமாகத் துடைக்கலானான்.

யாரோ வரும் காலடி ஓசை கேட்டுத் திரும்பிய காசிம் திரை விலகுவதைக் கண்டு திடுக்கிட்டான். ஆஸ்தான மந்திரவாதி 'மங்கு' இங்குமங்கும் பார்த்தபடி ஹாலுக்குள் நுழைந்தான்...





'மங்கு' மகா பொல்லாதவன். பாக்தாத் நகர மக்கள் அவனைக் கண்டு நடுங்குவர். அப்படிப்பட்ட 'மங்கு' அந்த ஹாலில் தான் மட்டும் இருப்பதாக எண்ணினான். காசிம் மறைந்திருப்பதை அவன் கவனிக்கவில்லை.

'மங்கு'வின் செய்கைகளைப் பார்த்தபடி 'காசிம்' நடுங்கி ஒடுங்கி உட்கார்ந்திருக்கும் போது மங்கு ஏதோ சில மந்திரங்களை உச்சரித்தான். அவ்வளவுதான். அடுத்த வினாடி....




தரையிலிருந்து அருவியைப் போலக் 'குபுகுபு' வென்று புகை கொப்பளித்துப் பஞ்சு போலப் பரவி விரிந்து நின்றது. அதன் நடுவே அழகே உருவான ஒரு பெண்ணின் உருவமும் தெரிந்தது.



மந்திரவாதி மங்கு, நீண்ட கழுத்தும் பளபளக்கும் பச்சை நிறமுமுடைய ஒரு விசித்திரக் கண்ணாடி சீசாவைத் தன் அங்கியிலிருந்து எடுத்தான். அதை அவன் பார்த்த பார்வை பயங்கரமாக இருந்தது.



அந்த வெண் பஞ்சு போன்ற புகைப் படலம் மெள்ள மெள்ளச் சுழன்று சுழன்று அருகிருந்த மங்குவின் கையிலுள்ள அந்த விசித்திரமான கண்ணாடிப் புட்டிக்குள் போய் அடையலாயிற்று.



மந்திரப்புகையின் கடைசித் துளியும் புட்டிக்குள் புகுந்ததும் மங்கு அதன் வாயை ஒரு அடைப்பானால் அழுத்தி மூடினான். புகை அடங்கிய அந்தப் பச்சை சீசாவிற்குள் ஒரு பெண் இருப்பதைக் கூர்ந்து பார்த்தான்.



மங்கு சுற்று முற்றும் ஒரு தடவை பார்த்துவிட்டு அந்தச் சீசாவைத் தன் அங்கிக்குள் பத்திரமாக மறைத்துக் கொண்டான். ஜாடிக்குப் பின்னால் இருந்தபடி இத்தனையையும் பார்த்துக் கொண்டிருந்த காசிம் அவன்



கண்களில் படவில்லை. தன் செய்கையை யாரும் பார்க்கவில்லை என்ற நிம்மதியுடன் மந்திரவாதி மங்கு அந்த அறையை விட்டுப் பரபரப்புடன் வெளியேறினான்.

(தொடரும்)




மேலே படத்தில் உள்ள குருவிகளெல்லாம் ஒரே மாதிரி இருக்கின்றன அல்லவா?..அதுதான் இல்லை. எல்லாக் குருவிகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன. வித்தியாசம் அவை அணிந்திருக்கும் குல்லாயிலும் கோட் பித்தான்களிலும், கழுத்தில் அணிந்திருக்கும் துணியிலும். அதன் குஞ்சத்திலும்தான் இருக்கிறது. உதாரணமாக. ஒரு குருவிக்குக் கோட்டில் மூன்று பித்தான்களும் தலைக்குல்லாய் குஞ்சம் வெள்ளையாயும், மற்றொரு குருவிக்குக் குஞ்சம் கறுப்பாயும் இருக்கின்றன. அதைத் தவிர, கழுத்தில் அணிந்திருக்கும் துணியின் கட்டங்கள் வித்தியாசப்படும். அதன் குஞ்சம் மூன்றாகவும் மற்றொரு குருவியின் கழுத்தில் உள்ள துணியில் இரண்டாகவும், இல்லாவிட்டால் குஞ்சமே இல்லாமலும் இருக்கும். இப்படி வித்தியாசமே இல்லாமல் மூன்று குருவிகள் இருக்கின்றன. அவைகளைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம். முயற்சி செய்து பாருங்கள்!

டூத்பேஸ்ட் அல்லது பவுடர், எதை
உபயோகித்தாலும் . . . பற்களைச் சுத்தம் செய்வது
டூத்பிரஷ்தான்

டெக் உபயோகியுங்கள்—
டூத்பிரஷில் சிறந்தது!

பிரத்தியேகமாக அமையப்பெற்ற தலைப்பாகம்
நீடித்து உழைக்கும் நைலான் முடிகள்
உங்கள் பிடிக்கு அடக்கமான பிளாஸ்டிக் கைப்பிடி



சிறந்த டூத்பிரஷ் வேண்டுமென்றால்

ஜான்ஸன் & ஜான்ஸன் (கிரேட் பிரிட்டன்) லிட். **டெக்** வாங்குங்கள்!

14. மன்னனின் மகிழ்ச்சி

மால்கோஷும், ரூபியாவும் காட்டுப் பன்றிகளாக மாறுவது கண்டு மந்திரவாதி அதிசயப்பட்டான் அல்லவா? அவன் மால்கோஷின் திறமையை எண்ணி வியந்தான். 'ரூபியாவை அழைத்துக் கொண்டு போகிறவன் என்னைவிட மந்திர சக்தியில் சிறந்தவனாகத்தான் இருக்க வேண்டும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு யோசித்தான்.

''அடாடா! என்னிடமுள்ள மந்திர சக்தி வாய்ந்த கத்தி போய் விட்டதே. அப்படியானால் என்னை விட்டு என் மந்திர சக்தியும் போய்விட்டது. மந்திர சக்தி இப்பொழுது போனால் போகட்டுமே. என்னுடைய பராக்கிரமம் எங்கே போயிற்று? இதோ நான் இந்த மரத்தின் வழியாகவே சென்று வாலிபனை அடித்து வீழ்த்தி அவனிடமுள்ள மந்திரசக்திவாய்ந்த கத்தியைக் கொண்டு வருகிறேன். என்னை விட்டுப் போன அந்தக் கத்திக்கு இப்போது ஏது மந்திர சக்தி? என்னிடம் வந்தால்தானே அது உயிர் பெறும். வாலிபனுடன் இப்பொழுது இருக்கும்போது அது சாதாரணக் கத்திதான். ஏ, ரூபியா நீ என்னிடமிருந்து சாமர்த்தியமாகத் தப்பி விட்டாய் என்று நினைக்கிறாய். அது தவறு என்பதை இப்பொழுதே நிரூபிக்கிறேன்'' என்று வெகு வேகமாக அந்த மந்திர மரத்தில் தாவி ஏறினான்.


மால்கோஷும், ரூபியாவும் மந்திரவாதி வருகிறானா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போகும்போது, அவர்கள் சென்று கொண்டிருந்த மரம் வேகமாகத் திடீர் என்று ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது போல இப்படியும் அப்படியுமாக ஆடிற்று. 'இந்த மரம் ஆடுவதைப் பார்த்தால் மந்திரவாதி மரத்தின் வழியாக நம்மைப் பின்பற்றி வருகிறான் போலிருக்கிறது. இப்பொழுது என்ன செய்வது?' என்று பயந்தாள் ரூபியா. மால்கோஷ் திரும்பிப் பார்த்தான். ''ரூபியா! நீ சொல்லுவது உண்மையே. வெகு தூரத்தில் யாரோ ஒருவன் நம்மை மரத்தின் வழியாக வேகமாகப் பின்பற்றி வருகிறான்'' என்று கூறினான்.

''ஆமாம், ஆமாம். அவன் மந்திரவாதிதான். இப்பொழுது நாம் ஆபத்தில் அல்லவா இருக்கிறோம்! என்ன பண்ணுவது? இப்படியே கீழே குதித்து ஓடி விடலாமா?'' என்று கேட்டாள் ரூபியா.

''பயந்து ஓடுவதுதான் இந்த மால்கோஷினிடம் நடக்காது. இப்பொழுது எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதைச் செய்தால் அவன் நம்மை நோக்கி வரத் தாமதமாகும்'' என்று தனது கையிலுள்ள கத்தியை ஓங்கினான். அந்தச் சமயத்தில் அவன் ஏறி இருந்த மரம் பூமிக்குச் சற்று அருகில்தான் இருந்தது. மால்கோஷ் பின்பக்கமாகத் திரும்பினான். கத்தியால் மரத்தை வெட்டினான். அதனால் மரத்தில் அவன் இருந்த இடத்துக்கும் மந்திரவாதி இருந்த இடத்துக்கும் ஒரு பிளவு ஏற்பட்டது. பிறகு மால்கோஷும் ரூபியாவும் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் தனக்குப் பின்புறமுள்ள மரத்தை வெட்டினான் அல்லவா? அது என்ன ஆயிற்று என்று சற்றுக் கவனிப்போம். இந்தச் சமயத்தில் மந்திரக் கிழவி மால்கோஷிடம் மந்திர விதையைக் கொடுத்த போது சொல்லியதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

''இந்த விதையை, பூமியில் வைத்தால் அது மரமாக வளர்ந்து உனக்கு வேண்டிய காரியமும் கைகூடும். உன் விரோதிக்கும் தீங்கு இழைக்கும். இந்த விதையினால் ஏற்பட்ட மரம் முருங்கை மரத்தைப் போலக் கிளைகள் நட்ட இடங்களெல்லாம் முளைக்கும் என்று சொன்னாள் அல்லவா? அதைப் போல் மந்திரவாதி இருந்த பக்




கத்தை வெட்டியவுடன் அதனுடைய மற்றொரு பாகம் பூமியில் குகைக்குப் பக்கத்தில் புதைந்து இருந்தது. ஆதலால் வெட்டியவுடன் அந்த வெட்டிய மரம் வளர்ந்து கொண்டே போயிற்று. ஆனால் அது மால்கோஷ், ரூபியா இருந்த பக்கமாக வளரவில்லை. அதற்கு எதிராக வளர்ந்து கொண்டு போயிற்று. அந்த விஷயத்தை அறியாத மந்திரவாதி வேறு பக்கமாகப் போகும் மரத்தைப் பின்பற்றிக் கொண்டே போய்க் கொண்டிருந்தான்.

மால்கோஷும் ரூபியாவும் ஏறிப் போய்க் கொண்டிருந்த மரமும் வெட்டப் பட்டதல்லவா? அந்த மரத்தின் மற்றொரு பாகமும் அரண்மனைக்கு எதிரே பூமியில் புதைந்திருந்தது. அதனால் மால்கோஷ் ஏறியிருந்த மரமும் பின்பக்கம் வளர்ந்து கொண்டே போயிற்று.

மால்கோஷும் ரூபியாவும் அடி மரத்தைச் சேரும்போது பொழுது விடிந்து விட்டது. ராஜகுமாரி ரூபியாவுடன் மால்கோஷ் வந்து கொண்டிருப்பதாகச் செய்தி அரசனுக்கு எட்டவே, அரசன் ஓடோடியும் வந்து மற்றைய ஜனங்களுடன் மரத்தின் சமீபத்தில் நின்று கொண்டிருந்தான். மரத்திலிருந்து இறங்குவதற்கு முன்பாகவே அரசன் தன் குமாரியின் கைகளைப் பற்றிக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினான்.

பிறகு மால்கோஷைக் கட்டிக் கொண்டான். "உன்னுடைய பலத்தைத் தெரிந்து கொள்ளாமல் உன் வார்த்தைகளுக்கு நான் செவிசாய்க்கவில்லை. இருந்தாலும் உன் சாமர்த்தியத்தைக் காண்பித்து 'நான் இனிமேல் காணப்போவதில்லை' என்று எண்ணிய என் குமாரியை என்னிடம் சேர்த்தாய். அதுவுமல்லாமல் அந்த மந்திரவாதியின் உயிர் நிலையைப் போல உள்ள கத்தியையும் கொண்டு வந்து விட்டாய். இப்போதே ஆட்களை அனுப்பி உன் மாமா வீட்டார்களையும், உன் தங்கையையும் அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன். அரண்மனையிலேயே நீங்கள் விருந்தினராக இருக்க வேண்டும்" என்றான்.

மால்கோஷ் மந்திரவாதியினிடமிருந்து ராஜகுமாரியையும் அவனது கத்தியையும் ஜயித்துக் கொண்டு வந்தது காட்டுத் தீ



போல் எங்கும் பரவியது. துக்ககரமாக இருந்த மகாராஜ பட்டணம் சோபையுடன் விளங்கியது.

இரண்டு மூன்று நாட்கள் மால்கோஷும் கலாவும் அரண்மனையில் தங்கினார்கள்.

மந்திரவாதி ஏறிக் கொண்டு போன மரம் வெகு தூரம் வளர்ந்து சென்று சமுத்திரத்தின் நடு மத்தியில் நின்று விட்டது என்றும், அவன் சமுத்திரத்தில் மூழ்கி நீந்திக் கரை அடைந்து தன்னிடத்திலுள்ள மந்திரக் சுத்தி போன அவமானத்தினால் வேறு எங்கேயோ போய்விட்டான் என்றும் வதந்தி உலவியது. சிலர் அவன் சமுத்திரத்திலேயே மூழ்கி இறந்து விட்டான் என்று பேசிக்கொண்டார்கள். எப்படி இருந்தால் என்ன? அரசனுக்கு மந்திரவாதியினால் பிறகு ஒரு உபத்திரவமும் ஏற்படவில்லை. மால்கோஷ் அரசனுக்குச் செய்த உதவியால் மால்கோஷின் மாமா குல்மாவுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவி கிடைத்தது.

மால்கோஷுக்கும், கலாவுக்கும் எங்கு போவது என்று தெரியவில்லை. "எங்கே போகலாம்?" என்று கேட்டான் மால்கோஷ். உடனே கலா, "எங்கே வேண்டுமென்றாலும் போகலாம். ஆனால் எங்கே போனாலும் இனி மேல் அத்தை வீடு, மாமா வீடு இல்லை.' என்னைத் தனியே விட்டு விட்டு அன்று மாலை அரண்மனைக்குப் போனாய் அல்லவா? அன்று இரவு நீ திரும்பி வரவில்லை. நம்ம மாமாவிடம் ஊரில் உள்ளவர்களெல்லாம், 'மால்கோஷினிடம் அரசன் கோபித்துக் கொண்டு விட்டான். அவனைத் தலைகீழாகக் கட்டிப் போட்டு நன்றாக அடித்தான். பிறகு அவனைக் காணவில்லை' என்று சொன்னார்கள். எனக்கு அப்பொழுது எப்படி இருக்கும்? நான் அன்று இரவு தூங்காமல் உன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு மாமாவின் வீட்டு வாசலிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தேன். மறுநாள் காலையில் எனக்கு வந்த செய்திதான் என்னை ஆனந்தக் கடலில் ஆழ்த்தியது" என்று கூறினாள்.

உடனே மால்கோஷ், "கலா! உன்னை எக்காரணத்தை முன்னிட்டும் இனிமேல் தனியே விட்டு விட்டுப் போக மாட்டேன். இது உண்மை" என்று ஆறுதல் கூறினான்.

அப்பொழுது அவர்களுடைய மாமா குல்மா அங்கே வந்தார். "மால்கோஷ்! எதிர்பாராமல் நீ அரசனுக்கு உதவி செய்ததால்தான் எனக்கு உயர்ந்த பதவி கிட்டியது. அதை ஒரு நாளும் மறக்கமாட்டேன். இந்த விஷயத்தைப் பற்றி மால்மாவுக்குத் தெரிவிக்கப் போகிறேன். நீங்கள் நேராக என் வீட்டுக்கு வந்து இரண்டு நாட்களாவது தங்கிவிட்டுப் போக வேண்டும்" என்று வற்புறுத்தினார்.


"தங்கி இளைப்பாறுவதற்காக நாங்கள் வரவில்லை. நாங்கள் சீக்கிரம் இதை விட்டுப் புறப்பட வேண்டும். அதுதான் எனது தகப்பனாரின் கட்டளை" என்றான் மால்கோஷ்.

உடனே குல்மா "நீ சொல்லுவது உண்மையே. நீங்கள் இருவரும் இந்தப் பட்டணத்துக்கு வந்ததே எனக்கு ஆச்சரியம். நேற்று இரவு முழுவதும் உன்னைக் காணவில்லையே என்று கலா தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தாள். நீயும் இரவு முழுவதும் உயிருக்கு மன்றாடி மந்திரவாதியுடன் போராடித் தூங்காமல் வந்திருக்கிறாய். ஆதலால் இன்று தங்கிவிட்டு நாளைக்காலையில் புறப்பட்டுப் போங்கள்" என்றார். குல்மா சொல்வதை ஆமோதித்து மால்கோஷும் கலாவும் குல்மாவின் வீட்டுக்குப்போய் இளைப்பாறினார்கள். (தொடரும்)



'கல்கி' உதவி ஆசிரியர் திரு ரா. வீழிநாதனின் புதல்வி சௌபாக்கியவதி லக்ஷ்மிக்கும், செம்மங்குடி வி. முத்துஸ்வாமி அய்யர் குமாரன் சிரஞ்சீவி சாம்பசிவனுக்கும் விஷ்ணுபுரத்தில் 16-6-57 அன்று விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. திரு வீழிநாதனின் குமாரன் சிரஞ்சீவி ராமமூர்த்திக்கு அன்று உபநயனமும் நடந்தது. காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அனுக்ரஹப் பிரசாதமும், திரு ராஜாஜி, திரு கே. எம். முன்ஷி, கல்கி திரு சதாசிவம் ஆகியவர்களிடமிருந்து ஆசிச் செய்திகளும் வந்திருந்தன. விவாக வைபவத்தில் திருச்சேறை திரு கிருஷ்ணமூர்த்தி பிள்ளையின் நாதஸ்வர இன்னிசை விருந்து நிகழ்ந்தது.

மலைச்சாரல் மாதவி



அத்தியாயம் 33

மாதவி விரித்த வலை


சிவசங்கரன் புறப்பட்டு வாசற் பக்கம் போகும்போது அவருடைய அன்னை, "சங்கரா! எழுந்ததும், எழுந்திருக்காததுமாய் எங்கே கிளம்புகிறாய்? ஏதாவது பலகாரமாவது சாப்பிட்டு விட்டுப் போகக் கூடாதா?" என்றார்.

சிவசங்கரன் பதிலுக்கு, "நான் மலைச்சாரல் பங்களாவுக்குத்தான் போகிறேன், அம்மா. அங்கே போய்ச் சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பினார்.

முதல் நாள் வந்த கடிதம் அவருக்கு ஞாபகம் வந்தது. அவரது நண்பர் ஸ்ரீநிவாஸ மூர்த்தி எழுதிய கடிதம் அது. கோர்ட் விடுமுறை மறுநாளிலிருந்து தொடங்குவதால் தம்முடன் சில நாட்கள் வந்து தங்கும்படி எழுதியிருந்தார்.

சிவசங்கரனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. தாம் மாதவி என்னும் கட்டழகி விரித்திருக்கும் வலைக்குள் சிக்கிக்கொண்டு வெளியே வரத் தெரியாமல் தவிப்பது தம் நண்பனுக்கு எவ்வாறு தெரிய முடியும்? என்று எண்ணிக் கொண்டார். விடுமுறை நாட்களைத் தாம் மிக ஆவலுடன் வரவேற்பதை எண்ணிச் சிரித்துக் கொண்டார். முன்பெல்லாம் கோர்ட் விடுமுறை என்றால் அவருக்குப் பொழுது போகாதே என்று கவலையாக இருக்கும். இப்போது விடுமுறை எப்போது வரும்? மாதவியுடன் மலைக் காடுகளில் எப்போது சுற்றலாம் என்று ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்திருந்தார். மாதவியுடன் கழிக்காத நேரம் வீண்தான் என்று கருதத் தொடங்கியிருந்தார். வழக்கு நடந்தபோது மிகவும் கஷ்டப்பட்டு மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. இப்போது வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு மாதிரி நேரே மலைச்சாரல் பங்களாவை நோக்கி அவரது கால்கள் அவரை இழுத்துச் செல்லத் தொடங்கின.

ஆனந்தி



ஆனால் சற்றுத் தூரம் போவதற்குள்ளாகவே ஒரு தடை குறுக்கிட்டது. எதிரே இரண்டு சைக்கிள்களில் கோவிந்தனும், அச்சுதனின் சிநேகிதனான பாலகோபாலும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும் வேறு வழியாகத் திருப்பிப் போய் விடலாமா என்று யோசித்தார் சிவசங்கரன். திருப்புவதற்கு அருகில் ஒரு வீதியும் இல்லை. அவர்களும் அவரைப் பார்த்து விட்டுக் கையைத் தூக்கினார்கள். அவர் பதிலுக்குக் கையை உயர்த்தும் போதே இருவரும் அருகில் வந்து சைக்கிளிலிருந்து கீழே குதித்தார்கள்.

சிவசங்கரனுக்குப் பாலகோபாலை அதிகமாகப் பிடிக்கவில்லை. அச்சுதனிடப் அவருக்குப் பிரியம் இருந்தபோதிலும் பாலகோபாலின் சிநேகத்தை அவன் எப்படி விரும்புகிறான் என்று வியந்திருக்கிறார். பாலகோபாலின் பேச்சு ஒரு மாதிரியாகவே இருக்கும். விடாமல் புகை பிடிப்பார். 'ஏன் இவ்வளவு புகை பிடிக்கிறாய்?' என்று யாராவது கேட்டால், 'இந்த ஊரில்தான் கொசு உபத்திரவம் தாங்க முடியவில்லையே. புகையிலை மணம் ஒன்றுதான் அவைகளை விரட்டுமாம். மலேரியாக் காய்ச்சல் வந்து அவதிப்படுவதை விடப் புகை பிடிப்பதே மேல் அல்லவா?' என்று கிறுதக்காகப் பதில் சொல்லுவார்.

அவருடைய விலை உயர்ந்த உடைகள் எங்கேயிருந்து வருகின்றன என்று பலருக்கும் வியப்பாக இருந்தது. சிவசங்கரனுக்கு அவர் அச்சுதனை ஏமாற்றப் பணம் பிடுங்குகிறாரோ என்ற சந்தேகம் உண்டாகி

யிருந்தது. ‘நமக்கென்ன அதைப் பற்றி?’ என்று பல முறை அந்த எண்ணத்தை உதறித் தள்ளிய போதிலும், பாலகோபாலிடம் அவருக்கு நல்ல எண்ணம் மட்டும் ஏற்படவே இல்லை.

இன்று கோவிந்தனையும், பாலகோபாலையும் சேர்த்துப் பார்த்தபோது அவருக்குப் பாலகோபாலிடம் ஏற்பட்டிருந்த வெறுப்பு அதிகமாயிற்று. கொஞ்சம் கையில் பசையுள்ள ஆசாமிகளை அவர் வலுவில் சென்று சிநேகம் செய்து கொள்வதும், அதை மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் எடுத்துக் கொள்ளும் சிரமமும் சிவசங்கரனுக்கு அருவருப்பாக இருந்தன. கோவிந்தன் தம்முடைய சிநேகிதராகி விட்டார் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே பாலகோபால் இன்று ஸைக்கிளில் போகலாம் என்று கோவிந்தனை வற்புறுத்தியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார் சிவசங்கரன்.

ஸைக்கிளிலிருந்து கீழே இறங்கிய உடனே கோவிந்தன் கையை நீட்டிச் சிவசங்கரனின் கரத்தைப் பிடித்துக் குலுக்கினார். பாலகோபாலும் கை குலுக்கினார். கையை அவசரமாக இழுத்துக் கொண்டார் சிவசங்கரன்.

‘‘எங்கே இவ்வளவு காலையில் போகிறீர்கள்?’’ என்று வியப்புடன் கேட்டார் கோவிந்தன்.

‘‘மலைக்குத்தான் போகிறேன்.’’

‘‘மலைக்கா? வேட்டையாடப் போகிறீர்களா?’’

‘‘வேட்டையாடுவதற்கென்று போகவில்லை. கையில் எதற்கும் துப்பாக்கி இருக்கட்டுமே என்று எடுத்துக் கொண்டேன்’’ என்றார் சிவசங்கரன்.

‘‘எனக்குக் கூட உங்களுடன் வர ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் இன்று வேறு பல வேலைகள் இருக்கின்றன. அதனால் வருவது சாத்தியமில்லை’’ என்றார் கோவிந்தன்.

‘‘ஒரு கூட்டமாக மலைமீது ஏறிப் போனால் உற்சாகமாகத்தான் இருக்கும்’’ என்று சிவசங்கரன் சொன்னார்.

‘‘கூட்டமாகப் போக வேண்டும், அல்லது இருவர் மட்டும் போக வேண்டும்’’ என்று சொல்லிவிட்டுப் பாலகோபால் சிரித்தார்.

கோவிந்தனும் ஏதோ பிரமாதமான ஒரு ஹாஸ்யத்தைக் கேட்டு விட்டதுபோலச் சிரித்து விட்டு, ‘‘ஆமாம்! ஆமாம்! இப்போது கூட நீங்கள் முதலில் மலைச்சாரல் பங்களாவுக்குப் போய் விட்டுத் தான் மலை ஏறுவீர்கள், இல்லையா? வேட்டையாடப் போகவில்லை என்று நீங்கள் சொன்ன உடனேயே நான் புரிந்து கொண்டிருக்க வேண்டும். எத்தகைய முட்டாள் நான்?’’ என்றார்.

‘‘மலைச்சாரல் பங்களாவுக்கு இன்று இவர் போக மாட்டாரென்று நினைக்கிறேன். நேற்று இவர் கூறிய தீர்ப்புக்குப் பிறகு கருணாகரன் இவரை உள்ளே நுழையவே விடமாட்டான்’’ என்றார் பாலகோபால்.

சிவசங்கரனுக்குக் கோபம் வந்தது. ‘‘சொந்த விஷயத்தையும், கோர்ட் விவகாரங்களையும் பிணைக்கும் வழக்கம் எனக்குக் கிடையாது, பாலகோபால்!’’ என்று கடுகடுப்பாகக் கூறினார்.

‘‘அது எனக்குத் தெரிகிறது. ஆனால் கருணாகரனின் மனோபாவம் அப்படி இருக்க வேண்டுமே’’ என்றார் பாலகோபால் விஷமச் சிரிப்புடன்.

கோவிந்தன் சிவசங்கரனைப் பார்த்து, ‘‘நீங்கள் என்னமோ பாரபட்சமில்லாமல் தீர்ப்புக் கூறி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால்



அது எங்களுக்கெல்லாம எத்தனை கஷ்டம் அளித்திருக்கிறது, தெரியுமா? கருணாகரனிடம் தொழிலாளர் சங்கத்துக்குக் கொடுக்கப் பணம் கிடையாது. விஜயராகவன்தான் கொடுத்தாக வேண்டும். அதைக் கொடுப்பது அவருக்குப் பிரமாதமில்லை. ஆனால் அவர் கொடுத்தாலும் கருணாகரன் தவறாக எடுத்துக் கொள்வான். கொடுக்கா விட்டாலும் தவறாக முடியும். பாவம்! ஜயந்திதான் ரொம்ப வேதனைப் படுகிறாள். இனிமேல் கருணாகரன் என்ன செய்வானோ என்று ரொம்பக் கவலைப்படுகிறாள்'' என்றார்.

'' நான் என்ன செய்வது கோவிந்தன்? கருணாகரன் என்னுடைய தீர்ப்பை நல்ல எண்ணத்துடன் எடுத்துக் கொள்ள வேண்டும். விரஸமாக ஏதும் செய்ய மாட்டான் என்றே எண்ணுகிறேன். ஜயந்தியைக் கவலைப்பட வேண்டாமென்று சொல்லுங்கள். என்னால் இயன்றதை நான் செய்கிறேன்.''

'' உங்களால் என்ன செய்ய முடியும்? ஏற்கனவே இந்தச் சிக்கல் பிரிக்க முடியாதபடி ஆகிவிட்டது. நீங்கள் ஏதாவது செய்தால் குழப்பம் அதிகரிக்குமே தவிரக் குறையாது'' என்றார் பாலகோபால்.

சிவசங்கரன் அதைப் பொருட்படுத்தாமல், '' நான் இப்பேரது மலைச்சாரல் பங்களாவுக்குத்தான் போகிறேன். கருணாகரனிடம் நல்ல வார்த்தையாகச் சொல்லிப் பார்க்கிறேன்'' என்றார்.

'' சொல்லிப் பாருங்கள். அவனுக்கு உங்கள்மீது கோபம்தான் அதிகமாகும் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றார் கோவிந்தன்.

'' அச்சுதன் உங்களை ஒரேயடியாகப் புகழ்ந்து கொண்டிருக்கிறார். உங்களுடைய நேர்மையைப் பற்றி நேற்றிரவு முழுவதும் பேசிக் கொண்டிருந்தார். உங்களைப் பார்க்க இன்று மாலை நாங்கள் எல்லோருமாக வருவதாக இருக்கிறோம்'' என்றார் பாலகோபால்.

'' நீங்கள் வருவதாக இருந்தால் பேஷாக வாருங்கள். ஆனால் இந்த மாதிரி பேச்சுக்களெல்லாம் எனக்குப் பிடிக்காது'' என்றார் சிவசங்கரன்.

கோவிந்தன் உடனே, '' எங்களுக்கும் நேரமாகி விட்டது. மாலை முடிந்தால் நானும் வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஸைக்கிளில் ஏறிக் கொண்டார். பாலகோபாலும் தம் சைக்கிளில் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்.

சிவசங்கரனுக்கு மனத்தில் இருந்த அமைதி அவர்களுடைய பேச்சால் குலைந்து போயிற்று. ஏதோ தவறு செய்துவிட்டது போல மனம் அலை பாய்ந்தது. ஏன் அப்படி வேதனையாக இருக்கிறதென்பது அவருக்குப் புரியவில்லை. மெதுவாக நடக்கத் தொடங்கினார். கிளம்பியபோது இருந்த வேகம் இப்போது இல்லை. உடலே கனப்பது போல இருந்தது.

கருணாகரனைப் பற்றி நினைக்க நினைக்க நெஞ்சில் வேதனை அதிகமாயிற்று. அவனுடைய விசித்திரமான போக்கினால் எத்தனை பேருக்கு எவ்வளவு துன்பம் என்று எண்ணி வேதனையடைந்தார்.

ஆயினும் இத்தனைக்கும் இடையே தாம் சரியான தீர்ப்பு வழங்கியதை நினைக்கும்போது ஒரு திருப்தி ஏற்படத்தான் செய்தது. 'பெண் மோகத்துக்கு நான் அடிமையாகி விடவில்லை. மாதவிக்காகக்கூட நான் நீதியிலிருந்து வழுவி விடத் தயாராக இல்லை' என்று எண்ணிக் கொண்டே சென்றார்.

அத்தியாயம் 34
"போம் வெளியே!"

மலைச்சாரல் பங்களாவை நெருங்கும் போதே சிவசங்கரனுக்கு அதுவரையில் ஏற்படாத ஒரு தயக்கம் உண்டாயிற்று. உள்ளே போகலாமா, நேரே மலைமீது ஏறிச்சென்று விடலாமா என்று யோசித்தார். பிறகு, 'எனக்கு என்ன பயம்? எதற்காகத் தயங்க வேண்டும்?' என்று மனத்தைச் சமாதானம் செய்துகொண்டு பங்களாவை நோக்கிச் சென்றார்.

பங்களாவின் வாசல் வெறிச்சோடியிருந்தது. அதற்குக் காரணம் என்னவென்பது சிவசங்கரனுக்குப் புரியவில்லை. ஒரு கணம் சிந்தனை செய்தபிறகுதான் வாசலில் இருந்த ரங்கூன் மல்லிப்பந்தல் காணப்படவில்லை ;என்பது புலனாயிற்று. சிவந்த மணமுள்ள புஷ்பங்கள் கொத்துக் கொத்தாகப் பூத்து மிக அழகாக இருக்கும். அதை ஏன் பிடுங்கி எறிந்திருக்கவேண்டுமென்று சிவசங்கரனுக்குப் புரியவில்லை. சென்ற தடவை வந்த போது மிக அழகாக இருந்ததே என்று எண்ணிக் கொண்டே உள்ளே சென்றார். வாசல்படியில் கால் எடுத்து வைக்கும் போதே உள்ளேயிருந்து கருணாகரனின் குரல் கேட்டது.

"இப்படிப்பட்ட அவமானம் வந்து சேரும் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை, அக்கா! இருந்தாலும்


எத்தனை குளுமை
நுண்ணிய கைத்தறி
சேலை உடுத்திக்கொண்டால்
நீங்கள் புத்துணர்ச்சியும்
குளுமையும் பெறுவீர்கள். ஒரே
வர்ணத்திலோ
அல்லது மாறுபட்ட,
பொருத்தமான வர்ணங்களிலோ
கைத்தறி சோளி
வகைகள். வெளுப்பதற்குச்
சுலபமாகவும், மலிவாகவும்
நீண்டு உழைக்கும் தன்மையும்
பெற்ற இந்திய
கைத்தறித் துணிகள்
பலதரப்பட்ட
நுணுக்கங்களிலும் பல
வர்ணங்கள்,
டிசைன்களில் கிடைக்கின்றன.
கைத்தறித் துணிகள்
ஆல் இந்தியா ஹாண்ட்லூம் போர்ட்
ஷாஹிபாக் ஹௌஸ், விட்டெட் ரோட், பம்பாய்.
ALL INDIA HANDLOOM BOARD
DA 57/67 TH



இப்பொழுது
நடைபெறுகிறது
பத்மினி
பிக்சர்ஸ்
தங்கமலை
ரகசியம்
...சென்னை...
கெயிட்டி
• பாரத் •
மஹாலக்ஷ்மி
மற்றும் தென்னுடெங்கும்
தயாரிப்பு & டைரக்ஷன் : B.R.பந்துலு

சிவசங்கரன் இப்படி நமக்குத் துரோகம் செய்வார் என்று நான் எண்ணவே இல்லை. அவருக்குத்தான் முன்பே வழக்கைப் பற்றி எல்லா விவரங்களும் தெரியுமே. அப்பொழுதே வழக்கின் முடிவு எனக்கு எதிராகத்தான் ஆகும் என்று சொல்லி எச்சரிக்கை செய்திருக்கக் கூடாதா? அப்படிச் சொல்லி யிருந்தாலாவது நான் அவனை உடனே வேலையில் எடுத்துக் கொண்டிருப்பேன். அல்லது ராஜினுமா எழுதிக் கொடுத்து விட்டுப் பேசாமல் இருந்திருப்பேன். அது எவ்வளவு கௌரவமாக இருந்திருக்கும்? இனிமேல் நான் எப்படி அங்கே போக முடியும்? அதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் கருணாகரன்.

''தம்பி! பதறாதே. உன் பதற்றமே உனக்கு எப்போதும் சத்துருவாக இருந்து வந்திருக்கிறது. அவரைப் பற்றி இப்படி யெல்லாம் பேசாதே. வழக்கு நடந்த பிறகு தானே அவரால் தீர்ப்புக் கூற முடியும்? அவர் முன்னமேயே சொல்லவில்லை என்று நீ கோபித்துக் கொள்வது அறிவீனம்'' என்றாள் மாதவி.

மாதவியின் வார்த்தைகள் சிவசங்கரனுக்கு இதமாக இருந்தன. இவ்வளவு தூரம் விஷயத்தை எடுத்துச் சொல்லுகிறாளே என்று எண்ணிச் சந்தோஷப்பட்டார்.



மாதவி கூறியதைக் கருணாகரன் ஒப்புக் கொள்ளவில்லை. அதைக் கேட்டு அவனுக்குக் கோபந்தான் அதிகமாயிற்று.

''அக்கா! நீ நன்றாக அவர் பேச்சில் மயங்கிப் போயிருக்கிறாய். அவருக்குத் தான் எல்லா விவரங்களும் முன்பே தெரியுமே. என்னிடம் 'உனக்கு எதிராகத்தான் வழக்கு இருக்கிறது. சமாதானம் செய்து கொண்டு விடு' என்று நல்ல எண்ணமுடையவராக இருந்தால் கூறியிருக்க மாட்டாரா?'' என்று மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கேட்டான் கருணாகரன்.

இது காதில் விழுந்ததும் சிவசங்கரன் திகைத்துப் போனார். தம்மிடம் வழக்கைப் பற்றிக் கருணாகரன் வாயே திறக்காத போது, தாம் முன்பே எச்சரிக்கை செய்யவில்லை என்று குற்றம் சாட்டுகிறானே என்று வியப்படைந்தார்.

அதற்குமேல்அங்குநின்றுஅவர்கள்பேசுவதைக் கேட்க அவருக்குப் பிடிக்கவில்லை. உள்ளே சென்று தம் நிலையை விவரமாக எடுத்துக் கூறலாம் என்ற எண்ணத்துடன் கதவைத் தொட்டார். அது உள்ளே தாழ்ப்பாள் போட்டிருக்காதபடியால் உடனே திறந்து கொண்டது. அவரைப் பார்த்தவுடன் அங்கு அசாதாரணமான நிசப்தம் நிலவியது.

அதை முதலில் சிவசங்கரன் தான் கலைத்தார். ''நீ சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது கருணாகரா! நான் உன்னிடம் சொல்லக் கூடாது என்று இருக்கவே இல்லை. கோவிந்தனும், ஜயந்தியும் உன்னைப் பார்த்துச் சமாதானம் செய்தார்களாம். விஜயராகவனும் இந்தக் கலவரத்தை முற்ற விடாமல் இருப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தார். நீதான் கேட்கவில்லை. இத்தனைக்கும் மேலாக நான் உனக்கு என்ன சொல்லிவிட முடியும்? மேலும் நீதிபதியாகிய நான் வழக்கு நடப்பதற்கு முன்னால் என்ன ஆகும் என்று சொல்லக் கூடாது. சொல்லவும்முடியாது. வழக்கின் முடிவு சாட்சியங்களின் பலத்தைப் பொறுத்ததே தவிர, நீதிபதியின் மனப்போக்கை அனுசரித்ததல்ல. நீ வேலாயுதத்தை அடித்தது தவறு. அதைஇன்னும் உணராமல் என்மீது குற்றம் சொல்கிறாய். நான் கடமையைச் செய்தேன். வேறு என்ன செய்திருக்க முடியும்?'' என்றார்.

கருணாகரன் குதித்து எழுந்தான். ''உங்களிடம் புத்திமதி கேட்பதற்காக நான் காத்துக் கொண்டிருக்க வில்லை. போம் வெளியே! கடமையைச் செய்த ஆளைப் பார். தொழிலாளர் சங்கத்தில் நல்ல பெயர் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று உங்களுக்கு ஆசை. நீதி வழுவாதவர் என்று ஊரார் புகழ வேண்டும் என்று ஆசை. என் பக்கமாகத் தீர்ப்புக் கூறினால் பாரபட்சமாக நடந்து கொண்டார்கள் என்று ஊரில் ஏசுவார்களோ என்ற பயம். அதனால் இப்படி என்மீது பழி வாங்கி விட்டீர்கள். முகுந்தனும் கோவிந்தனும் உங்களிடம் என்னை அவமானப்படுத்த வேண்டுமென்று கூறி யிருப்பார்கள். சித்தப்பாவின் சிநேகமும் உறவும்,

உமக்கு இப்போது அதிகமாகி விடும்'' என்று அவன் பொரிந்து தள்ளினான்.

சிவசங்கரனுக்கு இதைக் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருக்க முடியவில்லை.

''கருணாகரா! வாயை மூடு. உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? வேலாயுதம் உன்னைப் பரிகசித்ததில் என்ன அதிசயம் இருக்கிறது? உன் நாவை உன்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இதே குற்றத்துக்காகத் தானே நீ வேலாயுதத்தை வேலையை விட்டு நீக்கினாய்? உனக்கும் வேலாயுதத்துக்கும் என்ன வித்தியாசம்? இப்போது நீ பேசுவதை ஜயந்தி கேட்டால் ரொம்ப சந்தோஷப்படுவாள் அல்லவா'' என்றார்.

''தம்பியிடம் நீங்கள் தயவு செய்து இப்படி யெல்லாம் பேசாதீர்கள். அவன் ஏற்கனவேயே மிகவும் நொந்துபோயிருக்கிறான். ஏதோ வருத்தத்தினால் பேசுகிறானே தவிர அவன் கூறுவதிலும் கொஞ்சம் நியாயம் இருக்கத்தானே செய்கிறது? அவனை நீங்கள் முதலில் எச்சரித்திருக்க வேண்டும்.''

மாதவிக்குத் தன் தம்பி கோபத்தில் இன்னும் ஏதாவது செய்து விடப்போகிறானே என்று பயமாக இருந்தது. தான் சிவசங்கரனுக்கு ஆதரவாகப் பேசினால் அவனால் பொறுக்கவே முடியாதென்று அவளுக்குத் தெரியும். அவனைச் சாந்தப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இவ்வாறு பேசினாள். சிவசங்கரன் அவ்வளவு மனக்கொதிப்பு அடைந்திருக்கா விட்டால் அதைப் புரிந்து கொண்டிருப்பார். ஆனால் அந்த நிமிஷத்தில் மாதவி அவ்வாறு தம்பிக்குப் பரிந்து பேசியது அவர்மீது ஒரு சட்டி நெருப்பை எடுத்துக் கொட்டி விட்ட மாதிரி இருந்தது.

''சொல் அக்கா! சொல். இப்போதாவது நீ புரிந்து கொண்டாயே. நம் சித்தப்பா இவருக்கு விருந்து வைத்த போதே எனக்குச் சந்தேகமாக இருந்தது. நம்மை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவர்கள் எல்லாம் சூழ்ச்சி செய்திருக்கிறார்கள். இந்தக் கலகத்தைத் தூண்டிவிட்டதுகூட அந்தச் சாதுப்பிள்ளை கோவிந்தன் தானாம். தொழிலாளர் சங்கத் தலைவருக்கு லஞ்சம் கொடுத்து வழக்கு போடச் செய்தானாம். இல்லாவிட்டால் அவர்கள் வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டிருப்பார்கள்! ஒரு வேளை இவருக்குக்கூட ஏதாவது கொடுத்திருப்பார்கள்'' என்றான் கருணாகரன் ஆக்ரோஷத்துடன்.

சிவசங்கரனால் பொறுக்க முடியவில்லை. மாதவி சும்மா இருப்பதைக் கண்டதும் அவள் மீது அவருக்கு வெறுப்பு பொங்கி எழுந்தது. ''அடிப் பாவி! உன்னை நல்லவள், நியாயம் தெரிந்தவள் என்று நினைத்தேனே. இவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டு நிற்கிறாயே!'' என்று ஆத்திரத்துடன் சொன்னார்.

''மிஸ்டர், சிவசங்கரன்! அக்காவைப் பற்றி அவதூறு சொன்னால் நாக்கை அறுத்து விடுவேன்!''

''அறுத்துவிடு! 'அதைப் பார்த்து மாதவி, ஜயந்தி இருவரும் ரொம்ப சந்தோஷப்படுவார்கள்'' என்று இரைந்தார் சிவசங்கரன்.

''உடனே இங்கிருந்து நீங்கள் போகாவிட்டால் நான் உம்மைக் கொன்று விடுவேன். சித்தப்பாவிடம் லஞ்சம் வாங்கியதாக வழக்குப் போட்டுச் சந்தி சிரிக்க அடித்து விடுவேன்.''

மாதவி ''வேண்டாம் தயவு செய்து இருவரும் பொறுமையாக இருங்கள். சத்தம் போடாதீர்கள்'' என்று கெஞ்சினாள்.

''உன் தம்பியை என்னிடம் தான் கூறியதற்கு மன்னிப்புக் கேட்கச் சொல். இல்லாவிட்டால் இந்த ஜன்மத்தில் உங்கள் இருவர் முகத்திலும் நான் விழிக்க மாட்டேன்!'' என்று உறுதியான குரலில்கூறினார் சிவசங்கரன்.

தான் அப்படிச் சொன்னால் கருணாகரன் ஏதாவது செய்து விடுவான் என்று மாதவி பயந்தாள். அவரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினாலும் தள்ளி விடுவான். சுத்த முரடன்.

பேதை அவளால் என்ன செய்ய முடியும்? ''நீங்கள் என் முகத்தில் விழிக்காவிட்டாலும் பரவாயில்லை. இப்போது தயவுசெய்து இங்கிருந்து போய் விடுங்கள்'' என்றாள். சிவசங்கரனைப் பிறகு சமாதானம் செய்து கொள்ளலாம் என்று எண்ணித்தான் கூறினாள்.

ஆனால் சிவசங்கரன் தம் தலைமீது இடியே பெயர்ந்து விழுந்து விட்டது போல் திகைத்துப் போனார். தம் துப்பாக்கியை எடுத்துத் தோள்மீது சாத்திக் கொண்டு வேகமாக வீட்டை விட்டு வெளியேறினார். வீட்டு வாசலில் ஐந்தாறு பேர்கள் நின்று வேடிக்கை பார்ப்பதைக் கண்டதும் அவருக்கு அவமானமாகப் போய் விட்டது.

அவர்கள் பேசியதெல்லாம் நன்றாக வெளியே கேட்டிருக்கும். தம்மைப் பற்றி இவர்களெல்லாம் என்ன நினைப்பார்கள்? உண்மையிலேயே முகுந்தன் தமக்கு லஞ்சம் கொடுத்திருக்கலாம் என்றுதான் நினைப்பார்கள். கருணாகரன் இப்படிப் பேசியதற்கு மன்னிப்பே கிடையாது என்றெல்லாம் நினைத்து நினைத்து மனம் புழுங்கினார். (தொடரும்)

இந்தக் கதையில் வரும் சில கதாபாத்திரங்களை இந்த வார அட்டைப்படமாக நமது ஓவியர் விஜு சித்தரித்திருக்கிறார்.



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்



நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும் பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்



அன்புக்குரிய சுஜாதா,

வேண்டாத கவலை வென்றுகூட இருக்கிறதா, நாமாக ஒன்றைச் செய்துகொள்ள முடியுமா என்று கேட்கிறாய். பெரியோர்கள் கஷ்டத்தை மூன்று விதமாகப் பிரித்தார்கள். இயற்கையின் விபத்தாக வருவது, விதியால்-பழவினையால் நேருவது, தானாகச் செய்து கொள்வது என்றார்கள். நாமாக விலை கொடுத்து வாங்கும் வேதனைகளில் ஒன்று பிராணிகளை வளர்ப்பது எனக் கருதுகிறேன்.

நான் யார் வீட்டுக்குப் போனாலும் மிகவும் கவலையுடன் அடிமேல் அடி வைத்துத்தான் போவேன். அநேகம் பேர்கள் வீட்டில் நாய் வளர்க்கிறார்கள். வளர்க்காத சில வீடுகளில் 'நாய்கள் ஜாக்கிரதை' என்று வேறு போட்டு விடுகிறார்கள். வாசற்படி நுழையும்போதே உயரமாகக் கொள்ளிக் கண்களுடன், நெருப்பைக் கக்கிக்கொண்டு குரைக்கும் அல்சேஷன் நாய்களைக் கண்டு நமக்குத் தலை சுற்றல் எடுக்கிறது. இறப்பது ஒரு நாள் நிச்சயம். ஆனால் நாய் கடித்தா இறக்க வேண்டுமென்று தோன்றுகிறது. நாய் வளர்ப்பவர்கள் அது பெரிய காவல், திருடனைப் பிடித்துக் கொடுக்கிறது, விசுவாசமுள்ள பிராணி என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.

ஒரு வீட்டுக்காரப் பையன் சினிமாவுக்குப் போய்விட்டு அப்பாவுக்குத் தெரியாமல் பின் பக்கமாக நுழைந்திருக்கிறான். அந்த வீட்டில் வளர்க்கப்படும் நாய் அந்தப் பையனைக் கடித்து விபரீதமாகி விட்டதாக அறிகிறோம். இம்மாதிரி நாய்களால் எவ்வளவோ ஆபத்துகள் நேரிடுகின்றன.

சிலர் நாம் பயந்துகொண்டு 'நாய்களைப் பிடித்துக் கட்டி விடுங்கள்' என்று சொன்னால் சம்மதிப்பதில்லை. 'அது ஒன்றும் செய்யாது. புத்திசாலி' என்று பெருமையாகச் சொல்லுகிறார்கள். அப்படிப் புத்திசாலியாக இருக்கிறதா? அந்த மிருகத்துக்கு, வந்திருக்கும் நாம் சிநேகிதர்கள்தான். அதனால்தான் சோபாவிலும் நாற்காலிகளிலும் உட்காருகிறோமென்று அறியும் சக்தி இருக்கிறதா? கிடையாது. நாய் நம்முடைய காலைச் சுற்றிக்கொண்டு வருவதும் நாம் பீதி அடைந்து கால்களை மடக்கிக் கொண்டு திண்டாடுவதுமாக நேருகிறது.

அன்று ஒரு சிநேகிதி வீட்டுக்குப் போயிருந்தேன். எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும் அவள் கவலையுடன் போனில் பேசிக் கொண்டிருந்தாள். "பிரசவம் ஆச்சா? ஸிஸேரியன் கேஸா? டாக்டர், விசேஷமாகக் கவனித்துக் கொள்ளுங்கள். ராணியின்றி என்னால் இருக்க முடியாது" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

"வீட்டில் யாருக்குப் பிரசவம்?" என்று கவலையுடன் கேட்டேன்.

"எங்கள் வீட்டு நாய்க்குத்தான். மூன்று நாட்களாகக் கஷ்டப்படுகிறது. ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறோம். இரவு பகலாகத் தூக்கமில்லை!" என்று துக்ககரமாகச் சொன்னாள். எனக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக்கொண்டு, "அடடா, அப்படியா!" என்றேன். பிராணிகளிடம் அன்பு வேண்டியதுதான். ஆனால் என் சிநேகிதியைப் போலக் கவலைப்படுவது அவசியமா?

இன்னொரு வீட்டில் பூமியோடு வளர்ந்து போகிற நாய்கள் ஆளுக்கொன்றாக வளர்க்கிறார்கள். அதற்காகச் செலவு செய்யும் தொகையைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. ஏழை மக்கள், மத்தியதரக் குடும்பத்தினர் வறுமையிலும், துன்பத்திலும் தவிக்கிறார்கள். இயற்கையில் வாழும் நாய்களுக்குச் சோப், மெத்தை, முதல்தர ஆகாரம், வேலைக்காரர்கள் எல்லாம் பிரத்தியேகமாக நடைபெறுகின்றன. சில நாய்கள் ப்யூக் வண்டி முழுதும் அடைத்துக்கொண்டு போகின்றன. ஆபீஸிலிருந்து திரும்பிவா பஸ்ஸைத் தக் காசின்றிச் சோர்வுடன் நடந்துவரும் குமாஸ்தாவின் நிலை நம் கண் முன் தோன்றுகிறது.

சிலர் 'திருடனுக்காகக் கூட நாய்கள் வளர்க்கவில்லை. பிச்சைக்காரர்கள் உபத்திரவத்துக்காக வளர்க்கிறோம்' என்கிறார்கள். இதற்காக அபாரமாகச் செலவு செய்வதை விட்டுப் பிச்சைக்காரர்களுக்காகச் சில்லறை செலவு செய்யலாமே.

இதையறிந்துதான் திருவள்ளுவர்,

"அறத்தான் வருவதே இன்பம் மற்(று)
எல்லாம்
புறத்த புகழும் இல."

என்று கூறியிருக்கிறார்.

இன்னொரு விசித்திரச் செய்தி. அமெரிக்காவில் கோடிக்கணக்கான செல்வமுள்ள ஒரு சீமாட்டி தன்னுடைய சொத்துக்களை வளர்க்கும் நாய்க்கு உயில் எழுதி விட்டாள். அதற்கு இரண்டு பேர் பொறுப்பாளிகள். அந்நாய்க்கு எப்படிச் செலவு செய்வது? எவ்வளவு செய்வது என்று அவர்களிடையே சண்டை வந்து இரண்டு ஆண்டுகளாகக் கோர்ட்டில் வழக்கு நடைபெறுவதாகப் பத்திரிகையில் படித்தேன்.

போலீஸ் இலாகாவுக்கு மோப்பம் பிடிக்கவும், வேட்டையாடுபவர்களுக்கும் அல்சேஷன் நாய் தேவைதான். ஒரு கலைஞரை இரண்டு நாட்களுக்கு முன் சந்தித்தேன். அவர் வளர்த்த நாய் இறந்து போனதற்காக வருந்தினார். மிகவும் இளகிய உள்ளம் படைத்த அவர் வருந்துவது கஷ்டமாக இருந்தது. வீடுகளில் பெரிய நாய் வளர்ப்பது கவலையை விலைக்கு வாங்குவதாகத்தான் முடியும் என்று நினைக்கிறேன்.

இப்படிக்கு,

பூமாதேவி


எல்லோருக்கும் தெரியும்—
நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு ப்ரூக் பாண்ட் தேயிலை அதிகப்படியான, ருசியான தேநீரை அளிக்கிறது
காற்றுப் புகாமல் நன்றாக பாக் செய்யப் படுவதால் ப்ரூக் பாண்ட் தேயிலை களங்கமற்று மெத்தவும் சுத்தமாக உங்களுக்குக் கிடைக்கிறது
ஒவ்வொரு நாளும் 24,90,496 ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டுகள் வாங் கப்படுகின்றன
Darjeeling
Brooke Bond Tea
Blend
Brooke Bond Tea
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள் !

தெய்வத்தால் ஆகாதெனினும்...

— நா. பார்த்தசாரதி —



கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக மைத்துனன் சென்னையிலிருந்து வந்திருந்தான். ராஜத்துக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. அருமைத் தம்பியை வரச் சொல்லி விடுமுறை ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே வருந்தி வருந்திக் கடிதம் எழுதினவள் வந்தபின் மகிழ்வதற்குக் கேட்கவா வேண்டும்?

ஆனால் என்னுடைய அந்த அழகான மைத்துனன் பட்டணத்துக் கல்லூரியில் பாடத் திட்டத்துக்குள் அடங்காத சில விஷயங்களையும்படித்துக் கொண்டு வந்திருந்தான். வந்து இரண்டு நாட்களுக்குள்ளேயே அவனுடைய மாறுதலை நான் கண்டு பிடித்து விட்டேன். எதை எடுத்தாலும்மூட நம்பிக்கை என்றான். மற்றவர்கள் நம்புவது எதையும் அவன் நம்புவதற்குத் தயாராயில்லை. ஆனால் அவன் நம்புவதை எல்லோரும் நம்ப வேண்டுமென்று ஆசைப்பட்டான். எதற்கெடுத்தாலும் காரணமில்லாமலே காரசாரமாக விவாதித்தான். எங்கும் நிதானம் இழந்து உணர்ச்சியைக் கொட்டிப் பேசக் கற்றுக் கொண்டு வந்திருந்தான்.

"ஐயோ, பாவம்! இந்தப் பிள்ளை இப்படிக் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்டு வந்த மாதிரி அறிவைக் கற்றுக் கொள்ளப் போன இடத்தில் அறியாமையைக் கற்றுக் கொண்டு வந்திருக்கிறதே!" என்று என் மனம் உள்ளூற வருந்தியது.

ஆனால் ராஜம் தன் தம்பியின் இந்த மாறுதல்களைப் புரிந்து கொண்டதாக வெளிக் காட்டிக் கொள்ளவே இல்லை. 'அம்பி அம்பி' என்று ஓடியாடி உபசரித்துக் கொண்டிருந்தாள். வாராது வந்த மாமணியைக் கண்டவள் போல் அன்பை அள்ளிச் சொரிந்தாள்.

அன்பும் பாசமுமுள்ள இடத்தில் குறைபாடுகள் இருந்தாலும் தெரிவதில்லை. தவிர, பெண்களின் இயற்கை அவர்களைப் பாதிக்காத வரையில் இத்தகைய குறைகளைப் பொருட்படுத்தத் தோன்றாது.


"என்ன ராஜம்? உன் தம்பி ஒரு மாதிரி இருக்கிறானே? பழக்க வழக்கங்கள், பேச்சு, கொள்கை, எல்லாம் மாறியிருக்கின்றனவே? பார்த்தாயா?" என்றுநானே ஒரு நாள் அவளைக் கேட்டு விட்டேன்.

"அதற்கென்ன செய்கிறது? இந்தக் காலத்தில் இந்த வயசில் எல்லாப் பிள்ளைகளுமே இப்படித் தான் இருக்கிறார்கள்."

"எதற்கெடுத்தாலும் அவன் எடுத்தெறிந்து பேசுகிறானே?"

"அது அவனுடைய சுபாவம்! ஏதோ நாலு நாளைக்கு இருந்து விட்டுப் போகலாமென்று வந்திருக்கிறான். இந்தச் சிறிய விஷயத்தைப் பெரிசுபடுத்தாதீர்கள்!" என் மனைவி என்னைச் சமாதானப் படுத்தும் தோரணையில் பேசத் தொடங்கி விட்டாள்.

"நாம் இவனுடைய தம்பியைப் பற்றி உண்மையான அநுதாபத்தோடு சொல்கிறோம். இவளோ அதை வேறுவிதமாக எடுத்துக் கொள்கிறாள். இனி நாம் இதைப்



பற்றி இவளிடம் பேசாமல் இருப்பதே நல்லது'' என்று என்னை அடக்கிக் கொண்டேன்.

அன்று மாலை அக்காவுக்கும் தம்பிக்குமே ஒரு தகராறு ஏற்பட்டு விட்டது. ராஜம் பூஜையறைக்குள் அந்தி விளக்கு ஏற்றித் தீப வழிபாடு செய்து கொண்டிருந்தாள். அவள் தம்பி குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டுக் கொண்டே பூட்ஸ் கால்களோடு உள்ளே நுழைந்து விட்டான்.

''என்னடா அம்பி! இப்படிச்செய்யலாமா நீ? குடிப்பதற்குத் தண்ணீர் அங்கேயிருந்தே கேட்டால் நான் கொடுக்க மாட்டேனா?''

''ஏன்? என்ன அக்கா? இப்போ நான் என்ன செய்து விட்டேன்?'' அவன் ஒன்றும் தெரியாத மாதிரி கேட்டான்.

''உனக்கு நம்பிக் கையில்லேன்னு மற்றவர்களைக் கஷ்டப்படுத்தலாமா? பூட்ஸ் காலோடு பூஜையறையில் இங்கே வந்து நிற்றாயே?''

''இதிலே என்ன தப்பு, அக்கா?''

''போடா போ! எதை யெடுத்தாலும் உனக்கு விதண்டா வாதம்தான்!''

''தரையைத்தானே மிதிக்கிறேன்! சாமியையா ....?''

''போதும் போ! உன் பேச்சும் நீயும். தண்ணீரைக்குடித்துவிட்டுப் போய்ச் சேர்.'' கோபத்தோடு அலுத்துக் கொண்டாள்.

கடைசிவரை நான் பேசாமலே இருந்து விட்டேன். ''இது அக்கா தம்பி சண்டை—நான் போனால் இருவருமே என்னைஎதிர்த்துக் கொண்டால் என்ன செய்வது?'' எனக்கு ஒன்றுமே தெரியாதது போல் இருந்து விட்டேன். தம்பி இப்படிச் செய்து விட்டான் என்று அவளாக என்னிடம்பிரஸ்தாபிக்கவும் இல்லை. என்ன இருந்தாலும் சொந்தத் தம்பியைக் காட்டிக் கொடுக்க மனசுவருமா?

மறு நாள் வெள்ளிக்கிழமை. என்ன தலைபோகிற காரியமாக இருந்த போதிலும் வெள்ளிக்கிழமை மாலை மீனாட்சியம்மன் கோவிலுக்குப் போகும் வழக்கத்தை நிறுத்தியதில்லை நாங்கள். மீனாட்சியைத் தரிசித்து விட்டுப் பொற்றாமரைக் குளக் கரையில் சிறிது நேரம் உட்கார்ந்து வருவதில் புனிதமான நிம்மதி ஒன்று கிடைத்தது. தார் ரோட்டில் நடக்



பெரியவர்:— **விலை அதிகமானாலும் பரவா யில்லை. நாய்க்கு உயர்ந்த பிஸ்கோத்தாகக் கொடு, அப்பா!......**

கடைக்காரர்:— **நம்ம கடையிலே மட்டம், ஒசந்தின்னு வித்தியாசம் கிடையாதுங்க!...... உங்களுக்குக் கொடுக்கிறதைத்தான்......அதற்கும் கொடுப்பேன்!......**

கும் போதோ, வீட்டிலிருக்கும் போதோ, நாடகம் சினிமா பார்க்கும்போதோ, கிடைக்காத நிம்மதி அது. கோவிலில் மட்டுமே கிடைத்தது.

வழக்கம்போல அன்று மாலையும் கோவிலுக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தோம். கூடத்தில் உட்கார்ந்து எங்கள் குழந்தை குஞ்சுவுக்குத் தலைவாரிப் பின்னி விட்டுக் கொண்டிருந்தாள் ராஜம். காமிரா உள்ளில் மைத்துனன் முகத்துக்கு ஸ்நோ பூசித் தலையைக் 'கர்லிங்' விழும்படியாக அக்கறையுடன் வாரி விட்டுக் கொண்டிருந்தான். சினிமாப் பாட்டு ஒன்றை அவன் வாய் சீட்டியடித்துக் கொண்டிருந்தது. அரை மணி நேரமாக அவன் தலை சீவிக் கொள்ளும் இலட்சணத்தைப் பார்த்தபோது, 'தலையிலுள்ள மயிர் முழுதும் உதிர வேண்டும் அல்லது சீப்பிலுள்ள பல் முழுதும் உதிர வேண்டும்' என்று போட்டி போடுகிறது போல் தோன்றியது.

''சரி! பையனுக்குப் புத்தி வந்து விட்டது. நம்முடன் கோவிலுக்கு வருவதற்காகத்தான் இவ்வளவு அலங்காரங்களும் செய்து கொள்கிறான் போலிருக்கிறது. பயல் அம்மனைத் தரிசிக்க வராவிட்டாலும் அம்மனைத் தரிசிக்க வரும் 'அம்மன்'களைத் தரிசிக்கவாவது வருவான்!'' என்று எண்ணி உள்ளூற நகைத்துக் கொண்டேன்.

அவன் 'மேக்அப்பை' முடித்துக் கொண்டு அறையிலிருந்து கூடத்துக்கு வந்தான். நேரே என்னிடம் வந்து கேட்டான். ''அத்தான்! எல்லாருமாகச் சேர்ந்து ஒரு சினிமாவுக்குப் போகலாம்!'' என்றான்.

''நாங்கள் கோவிலுக்குப் போகிறோம். இன்றைக்கு வெள்ளிக் கிழமை. நீ வேண்டுமானால் சினிமாவுக்குப் போய்விட்டு வா!'' என்று பதில் சொன்னேன்.

அவன் அக்காவிடம் போனான். ''அத்தான் கோவிலுக்குப் போகட்டும். நீ வாயேன் அக்கா, குழந்தையை எடுத்துக் கொண்டு, நாம் சினிமா போய் விட்டு வரலாம்...''

''இல்லையடா, அம்பி! மதுரைக்கு வந்து மூன்று வருஷங்கள் ஆயிற்று. ஒரு வெள்ளிக் கிழமை கூடத் தவறினதில்லை. நீ போய் விட்டு வா. நாங்கள் கோவிலுக்குப் போகிறோம்...'' ராஜமும் அவன் வேண்டுகோளை மறுத்து விட்டாள். மைத்துனனுக்குப் பெரிய ஏமாற்றம். முகம் தொங்கி விட்டது. திடீரென்று என்ன நினைத்துக் கொண்டானோ தெரியவில்லை. எனக்கு முன்னால் வந்து விறைப்பாக நின்று கொண்டான். கேட்க ஆரம்பித்தான்:

''நீங்கள் படித்துப் பட்டம் பெற்றவர் தானே?''

''ஆமாம்!''

''சுயமாகச் சிந்திக்கும் பகுத்தறிவு உள்ளவர்தானே?''

''ஆமாம்!''

''உண்மை எது? போலி எது? என்று அறியத் தெரிந்தவர்தானே?''

''தெரியும்!''

''அப்படியானால் கோவிலும், குளமும், சாமியும், பூதமும் இந்தப் போலிப் பாவனைகளில் இருப்பதாக எப்படி நம்புகிறீர்கள்!''

''சீ! இதென்னடா முரட்டுத்தனமாக உளறிக் கொண்டு...?''—ராஜம் அவனைக் கடிந்து கொண்டாள். குழந்தை குஞ்சு மிரள மிரள எங்கள் இருவரையும் பார்த்து விழித்துக் கொண்டு நின்றாள்.

''நீ சும்மா இரு அக்கா! எங்களுக்குள் ஒரு சிறு விவாதம்...இதில் நீ தலையிடாதே...''

''எப்படியாவது போ''—என்று அவள் உள்ளே போய் விட்டாள். நான் இன்னும் மைத்துனனுடைய கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. விழிகளை இமையாமல் அவனை ஏறிட்டுப் பார்த்தேன். அவனுடைய இளமை கொஞ்சும் முகத்தில் அறிவுக் கலப்பற்ற உணர்ச்சி வெறி தாண்டவ மாடியது. முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. நமது கேள்விக்கு எதிரியிடம் பதில் இல்லை என்கிற மாதிரி தெம்பும் பலமும் அவன் கண்களில் ஒளியிட்டிருந்தன. நான் பதில் சொல்லாமல் மௌனமாயிருப்பதைத் தனக்குச் சாதகமாக நினைத்துக் கொண்ட அவன் மேலும் மடக்க ஆரம்பித்து விட்டான்!

''அத்தான்! நீங்கள் மார்க்ஸ், இங்கர்சால், சி. இ. எம். ஜோட் ஆகியவர்கள் எழுதிய அறிவு நூல்களைப் படித்திருக்கிறீர்களா?''

''..............''

''போகட்டும்! நம்முடைய வழிபாடு முழுவதும் ஒரு போலித்தனம். உண்மைக் கலப்பற்ற பொய். தெய்வத்தைப்போல இருப்பதெல்லாம் தெய்வமென்று எண்ணி மயங்குகிறோம் நாம். ரயில்வே 'கைடு' ரயிலாகி


'அனஸின்'
ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பான
நான்கு மருந்துகள் சேர்ந்துள்ளது
1. க்வினைன் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
10
2
1957

விடுமா? அதில் ஏறிப் பிரயாணம் செய்வ தற்கு முடியுமா?''

''..............''

''இந்தப் போலியான சமயமும் போதை தரும் பாவனைகளும் சமூகத்தை ஏமாற்று கிறது என்கிறான் கார்ல் மார்க்ஸ்.''

'' . . . . ''

''என்னுடைய கேள்விக்கு உங்களால் பதில் சொல்ல முடிய வில்லை. அதனால் தான் மௌனம் சாதிக்கிறீர்கள்.''

நான் கலகலவென்று வாய்விட்டுச் சிரித்து விட்டேன். என்னால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. மேடையில் முழங்கும் அடுக்கு மொழிச் சொற்பொழிவாளர்களை யெல்லாம் தன்னிடம் பிச்சை வாங்கும்படி செய்து விட்டான் என் மைத்துனன்.

'' நீங்கள் சிரித்து மழுப்புவது நியாய மில்லை...'' அவன் மறுபடியும் பலமாகக் கூச்சல் போட்டான்.

'' நல்லது! உனக்கு அருமையான மூளை வாய்த்திருக்கிறது அப்பா. என்னைவிட எவ் வளவோ அதிகமாகத் தெரிந்து கொண்டிருக் கிறாய். நான் மார்க்ஸ், இங்கர்சால், ஜோட் ஆகியவர்களைப் படிக்கவில்லை. சங்கரர், மாணிக்கவாசகர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆகியவர்களைப் படித்து ஏமாந்துவிட்டேன்!''

'' அத்தான்! நீங்கள் பதில் சொல்லவில்லை. வேண்டு மென்றே என்னைக் கேலி செய் கிறீர்கள்...''

'' இப்போது எங்களுக்குக் கோவிலுக்கு நாழிகையாகி விட்டது. உனக்குச் சினிமா வுக்கு நாழிகையாகி விட்டது. நாளைக்கு வைத்துக் கொள்வோமே...'' நான் அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பினேன்.

''இதென்ன இவ்வளவு முரட்டுத்தனமும் அசட்டுத் தனமும் இவனுக்கு எங்கிருந்து வந்தன?''—அவன் தலை மறைந்ததும் ராஜம் என்னைக் கேட்டாள்.

''அசட்டுத்தனமில்லை! இதற்குப் பெயர் தான் பகுத்தறிவு என்கிறது. நீ புறப்படு. கோவிலுக்குப் போக நேரமாகி விட்டது''— என்றேன். இதற்குப் பின் அந்தப் பேச்சு எழவில்லை. கோவிலுக்குப் புறப்பட்டோம்.

* * *

கோவிலிலிருந்து புது மண்டபம் வழி யாக ராயகோபுரத்து வாசலுக்கு வந்தோம். அங்கிருந்த மரப்பொம்மைக் கடை ஒன்று குழந்தை கண்களில் பட்டுவிட்டது. பொம் மைக் கடையைப் பார்த்தாளோ, இல்லையோ, ஏதாவது ஒரு பொம்மை வாங்கிக் கொடுத் தால்தான் அங்கிருந்து கிளம்புவேன் என்று அடம் பிடிக்கத் தொடங்கிவிட்டாள் குஞ்சு. நானும் ராஜமும் குழந்தையின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிச் சமாதானம் செய்து அழைத்துக் கொண்டு போக முயன்றோம். எங்கள் முயற்சி பலிக்க வில்லை.

''பொம்மை! எனக்குப் பொம்மை வேணும். அதோ அந்த யானைப் பொம்மையை வாங்கிக் கொடு''—குழந்தை அழுது கொண்டே புது மண்டபத்துக் கல் தரையில் உருண்டு புரளத் தொடங்கி விட்டாள்.

'' சார்! குழந்தை ரொம்ப அழுகிறது. நாலணுத்தானே? ஒரு பொம்மை வாங்கிக்



மானேஜர் (குமாஸ்தாவிடம்): முதல்லே நீ நேற்று ஆபீசுக்கு வராததற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்லு!

கொடுங்களேன்''—கடைக்காரன் வேறு சிபாரிசுக்கு வந்தான்.

போனால் போகிற தென்று நாலணு கொடுத்து அந்த யானைப் பொம்மையை வாங்கிக் குழந்தையிடம் அளித்தேன். அழுகை நின்றது. கோடைக் காலத்தில் மழை எப்போது வருமென்றும் தெரியாது; எப்போது நிற்குமென்றும் தெரியாது. குழந்தைகளுடைய ஆசையும் பிடிவாதமும் கோடை மழை போல. வீட்டுக்குத் திரும் பியதும் குழந்தை அந்த யானைப் பொம்மை யோடு தன் விளையாட்டைத் தொடங்கி விட்டாள். எங்கள் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ராஜம் இரவுச் சாப்பாட்டுக் காகச் சமையலைக் கவனிக்கப் போனாள். யானைப் பொம்மையைக் கிணற்றடிக்குக் கொண்டுபோய்ச் சோப்பு போட்டுக் குளிப் பாட்டுவது. பவுடர் பூசி விடுவது. இந்த மாதிரி குழந்தைத்தனமான காரியங்களைக் குஞ்சு செய்து கொண்டிருந்தாள். ஒரு ரசிக னின் மனோபாவத்தோடு அதைச் சிறிது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

'' பொம்மை வாங்கி முழுசாக ஒரு மணி நேரம்கூட ஆகவில்லை. அதற்குள் இந்தக் குழந்தை மனம் அதனுடன் எவ்வளவு நெருங் கிய ஒட்டுறவு கொண்டாடுகிறது?'' என்று சிந்தித்தேன். ஏதோ காரணகாரியத் தொடர் பற்ற சிந்தனைகள் மனத்தில் அலைமோதின.

'என் கையில் இதே யானைப் பொம்மை யைக் கொடுத்துச் சோப்பு போட்டுவிடவும், பவுடர் பூசவும் சொன்னால் நான் பொறுமை யோடு செய்வேனா? குழந்தையின் அறி யாமை அதற்கு இன்பத்தைக் கொடுக்கிறது. எனக்கு அறிவு தெளிந்து விட்டதனால் அந்த இன்பத்தை அடைய முடியாது.'

இப்படிச் சிறிது நேரம் சிந்தித்து விட்டுப் படிப்பதற்காக அலமாரியிலிருந்து ஒரு புத்த கத்தை எடுத்து வந்தேன். அது 'அலெக்ஸிஸ்

காரல். எழுதிய அறியப்படாத மனிதன்-'மேன் தி அன்னோன்' என்ற புத்தகம். ஆனால் புத்தகத்தில் மனம் லயிக்கவில்லை.

'மனிதனுக்கு எல்லாவற்றிலும் கட்டுப்பாடு இருப்பது போல அறிவு வளர்ச்சியிலும் கட்டுப்பாடு வேண்டும். அறிவு அளவு மீறி வளருமானால் நல்லது பொல்லாதது எதையுமே நம்பும் சக்தி குறைந்து விடும். நாஸ்திகம் தோன்றும் காரணமே அது'—இப்படிச் சில வரிகள் மின்வெட்டுப் போல் என் மனத்தில் ஆழமாகப் பதிந்தன.

*   *   *

மைத்துனன் பார்க்கப் போயிருந்தது ஆங்கில சினிமா. அதனால் ஒன்பதேகால் மணிக்கே படம் விட்டு வந்து சேர்ந்தான். நானும் அவனும் குஞ்சுவும் சாப்பிட உட்கார்ந்தோம். குஞ்சு தன் இலைக்குப் பக்கத்தில் யானைப் பொம்மையை உட்கார்த்தி அதற்கு முன்பும் ஒரு சிறு இலையைப் போட்டிருந்தாள். ராஜம் அந்த இலையில் ஒன்றும் பரிமாறாமல் போகவே அவள் அழ ஆரம்பித்து விட்டாள்.

"அது மரப்பொம்மையடி! சாப்பிடாது."

"மாட்டேன் போ! அதற்குப் போட்டால்தான் நானும் சாப்பிடுவேன்."

வேறு வழியின்றி அந்த இலையிலும் பரிமாறி விட்டுப் போனாள் ராஜம்.

சாப்பாடு முடிந்தது. படுக்கையில் குழந்தையை விட்ட போது யானைப் பொம்மையையும் பக்கத்தில் விட்டால்தான் தூங்குவேன் என்றாள். அப்படியே செய்தேன். குழந்தைக்குப் பொம்மையிடம் ஏற்பட்ட பாசம் வேடிக்கையானதாக இருந்தது. மைத்துனன் வந்தான்.

"என்ன அத்தான்? என் கேள்விக்குப் பதில் சொல்கிறீர்களா?"

"மணி பத்தரை. தூக்கம் இமைகளை அழுத்துகிறது. காலையில் சொல்கிறேன். நீயும் போய்த் தூங்கு" என்று அவனை அனுப்பினேன்.

பொழுது விடிந்தது. கோயில் யானை நாள்தோறும் அபிஷேகத்துக்கு நீர் கொணர எங்கள் தெரு வழியே போகும். சனிக்கிழமைகளில் மட்டும் அந்த யானைக்கு ஒரு சீப்பு வாழைப் பழம் கொடுத்துப் பழக்கப்படுத்தியிருந்தேன். இதனால் யானை மாவுத்தன் ஒவ்வொரு சனிக்கிழமையும் என் வீடு வந்ததும் யானையை நிறுத்தி விட்டு, "சார் வாழைப் பழம்" என்று ஒரு குரல் கொடுப்பான்.

அன்று சனிக்கிழமை என்பது நினைவிருந்தும் பழம் வாங்கி வைக்க மறந்து விட்டேன். தெருக்கோடியில் யானையைக் கண்டதும் மைத்துனனைக் கடைக்கு விரட்டினேன். அவன் அப்போது குஞ்சுவைத் தோளில் தூக்கி 'உப்பு மூட்டை' விளையாடிக் கொண்டிருந்ததனால் அவளையும் அழைத்துக்கொண்டு கடைக்குப் போனான்.

அவன் பழத்தோடு திரும்பி வருவதற்கும் யானை மாவுத்தன் வீட்டு வாசலில் யானையைக் கொணர்ந்து நிறுத்துவதற்கும் நேரம் சரியாக இருந்தது.

ஒரு சீப்புப் பழத்தில் ஒரு பழத்தை மட்டும் குழந்தையிடம் கொடுத்து விட்டு மற்றவற்றை யானைக்குக் கொடுத்தேன்.

"குஞ்சு! அந்த ஒரு பழத்தை உன் கையாலே யானைக்குக் கொடேன்."

"ஐயோ பயமாயிருக்கு! நான் மாட்டேன்" என்று குழந்தை அலறிக் கொண்டே உள்ளே ஓடி விட்டாள். நான் மீண்டும் அவளைப் பிடித்து வந்து யானைக்குப் பழம் கொடுக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடுத்தினேன். குழந்தை பயந்து வீறிட்டுக் கதறினாள். யானையருகே நெருங்கவே அஞ்சினாள்.

"விடுங்க அத்தான்! குழந்தை பயப்படுகிறாள்" என்று மைத்துனன் கூறினான். நான் குஞ்சுவைக் கீழே இறக்கி விட்டு விட்டேன். அவள் கையிலிருந்த பழத்துடன் வீட்டுக்குள்ளே ஓடி விட்டாள். யானைக்காரன் யானையைச் செலுத்திக் கொண்டு போய் விட்டான். நானும் மைத்துனனும் உள்ளே வந்தோம்.

"அத்தான்! என்ன ஏமாற்றிக் கொண்டே போகிறீர்களே? என் கேள்விக்குப் பதில் சொல்லவே இல்லையே?" அவன் முதல் நாளைய விவாதத்தைக் கிளப்பினான்.

"உஷ்! இரையாதே! அதோ மூலையிலே பார்! உன்னுடைய கேள்விக்குப் பதில் அங்கே இருக்கிறது!"

மைத்துனன் ஆச்சரியத்தோடு நான் சுட்டிக் காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தான்.

அங்கே குழந்தை குஞ்சு உயிருள்ள யானைக்குக் கொடுக்க மறுத்த வாழைப் பழத்தை உரித்துத் தன்னுடைய பொம்மை யானையின் வாயில் திணிக்க முயன்று கொண்டிருந்தாள்.

"சாப்பிடு யானை! சாப்பிடு! ஏன் முழுங்கவே மாட்டேங்கிறே?" திருந்தாத மழலை மொழியில் வேண்டினாள்.

"பார்த்தாயா?"

"எதை?"

"அந்தக் காட்சியை!"

"பார்த்தேன். அதற்கென்ன?"

"நேற்றுக் கூறினாயே; பாரத நாட்டின் பக்தி மார்க்கம் வெறும் பாவனை, போலித்தனம் என்றெல்லாம். அந்தக் கருத்தை இப்போது தெரிந்து கொள்!"

"விளங்கவில்லையே?"

"சிந்தித்துப் பார் விளங்கும்! உன்னுடைய பகுத்தறிவு எப்படி எல்லாம் நினைக்கிறதோ அப்படியெல்லாம் உன் முன் தோன்றவும், செயலாற்றவும் தெய்வத்தால் முடியாது! உன் அறிவைக் கொண்டு நீதான் அதைப் பாவிக்க வேண்டும்."

"அப்படியானால் உண்மையை விடப் பாவனை உயர்ந்ததா?"


"அல்ல! உண்மை அணுகுவதற்கரியது; உயிருள்ள நிஜ யானையைப் போல. பாவனை பக்திக் குரியது; யானைப் பொம்மையைப் போல" என்றேன்.

மைத்துனன் தலையைச் சொறிந்தான். "அப்பா! ஊழி ஊழியாக வரும் பாரத நாட்டுத் தெய்வப் பண்பாடு மகத்தானது. கோயிலும் குளமும் கட்டியவர்கள் அந்தப் பண்புக்கு வடிவு கொடுத்திருக்கிறார்கள்."

நான் சொன்னது அவனுக்கு விளங்கவில்லை!



பைலட் பேனாவின் அற்புத
தரத்திற்கு ஒரு தக்க சான்று!
சிறந்த முறையில் நீடித்த உழைப்பிற்கு
பைலட் பேனாவை வாங்குங்கள்
பைலட் பேனாவிற்குகந்தது பைலட் மையே
HIGH GRADE WRITING INK
PILOT
தி பைலட் பென் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
கத்தோலிக் சென்டர், ஆர்மீனியன் தெரு, மதராஸ் 1
விற்பனை மற்றும் சர்வீஸ் செய்பவர்கள்: ஜெம் அண்ட் கம்பெனி
டிரேட் மார்க்



பாதையின் முடிவு

ஜெமினி பார்த்தசாரதி

ஸ்டேஷன் கடிகாரத்தில் மணி ஐந்தரை அடித்தது. ஆனால் ஐந்து மணிக்கு வர வேண்டிய வண்டி இன்னும் வந்தபாடில்லை. நேரம் ஆக ஆக என் மனத்தில் ஒருவித கலவரம் அதிகரித்துக் கொண்டே வந்தது. எதற்கும் வண்டியைப் பற்றி ஸ்டேஷன் மாஸ்டரிடம் விசாரிக்கலாம் என்று எண்ணமிட்டவாறு அவருடைய அறையை நோக்கி நடந்தேன்.

நான் வருவதைப் பார்த்த அவர் "ஓ, நீங்களா ஸார்! வாருங்கள். ரயிலைப் பற்றித் தானே யோசனை? இன்னும் ஐந்து நிமிஷத்தில் வந்துவிடும். முந்திய ஸ்டேஷனை விட்டுக் கிளம்பி விட்டதாம். யார் வருகிறார்கள்?" என்று கேட்டார்.

"என் மைத்துனன் ராமு ஸார். சென்னையிலிருந்து வருகிறான். ஏதோ காட்டிலாகாவில் வேலை பார்க்கிறானே. இந்த மாதிரி சமயத்தில் நமக்கு ஏதாவது உபகாரமாயிருக்குமோ என்று......"

"ஆனாலும் உங்கள் கிராமத்து ஜனங்களுக்குத் தைரியம் போதாது, ஸார். நாலு பேராகச் சேர்ந்து கொண்டு அதை அடித்துப் போடாமல்..."

"அதெல்லாம் சரிதான். ஆனால் நாலு பேராக அதை அடிக்கப் போனால் அது ஒருவரையாவது அடித்துப் போட்டுவிடும். அந்த ஒருவர் யாரென்று தெரிந்துவிட்டால் மற்ற மூன்றுபேரும் தைரியமாய்க் கிளம்பி விடுவார்கள்: போமையா போம், இதெல்லாம் நடக்கக் கூடியதா?"

அதற்குள் ரயில் பிளாட்பாரத்துக்கு வந்து விட்டது. அதிலிருந்து இறங்கிய ராமுவின் க்ஷேம லாபங்களைக்கூட விசாரிக்காமல் அவன் கொண்டுவந்த சாமான்களையெல்லாம் அவசரமாக என் வண்டியில் ஏற்றினேன். அவனையும் துரிதப்படுத்தி வண்டியில் ஏற்றிக் கொண்டு மாடுகளை வேகமாகச் செலுத்தினேன்.

ராமுவுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன அவசரம் அத்திம்பேரே? மெதுவாகத்தான் போவோமே? இங்கே காற்று ஜில்லென்று வீசுகிறது. நான் இந்த மாதிரி பயிர் பச்சையெல்லாம் பார்த்து எவ்வளவு நாட்களாகின்றன! என் வேலையில் பாதி நான் வனவாசம் தானே?" என்றான்.

நான் விளக்கினேன்: "ஒரு மாதமாகவே ஒரு புலி கிராமவாசிகளைத் துன்புறுத்திக் கொண்டு வருகிறது. முதலில் ஆடு மாடு கோழி இவைகளைக் கொன்று கொண்டிருந்தது. பிறகு ஒரு இடையனையும் தூக்கிச் சென்று விட்டது. அதன்பின் பல மனிதர்கள் பலியாகி விட்டார்கள். எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தாலும் ஏதாவது சேதம் நடந்து கொண்டேயிருக்கிறது. அந்த நாமக்காரப் புலியைப் பிடிக்க நீ ஏதாவது..."

"என்ன புலி?"

"நாமக்காரப் புலி. அதன் நெற்றியில் இருக்கும் வடு காரணமாகக் கிராமவாசிகள் அதற்கு அந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள். ஆமாம், இதென்னப்பா புலி கிராமத்துக்குள் வந்து சூறையாடுகிறதே? சாதாரணமாய்க் காட்டில்தானே வேட்டையாடும்?"

''கிழப்புலியா யிருக்கும், அத்திம்பேரே! அதனால்தான் காட்டிலேயே வேட்டையாட முடியாமல் கிராமத்துக்குள் வருகிறது. இன்னொரு விஷயம். எப்போது புலி கிராமத்திலிருந்து ஒரு மனிதனைத் தூக்கிக் கொண்டு போய்விட்டதோ, அப்போதுஅதைஉடனேயே தீர்த்துக் கட்டிவிட வேண்டும். இல்லாவிட்டால் ஒரு தடவை ருசி கண்ட....'' ராமு சொல்ல வந்ததை நிறுத்திவிட்டு, ''அது யார் அத்திம்பேரே! அதோ தூரத்தில் போகிறவன்? நீங்கள் அவசரப்படுவதைப் பார்த்தால் ஊர் ஜனங்கள் எல்லாரும் ஐந்து மணிக்கே வாசற் கதவை இறுகப் பூட்டிக் கொண்டு படுத்து விடுவார்கள் என்றல்லவா நினைத்தேன்?'' என்று கூறினான்.

ராமுவின் கண்கள் பார்த்த திசையில் பார்த்தேன். தூரத்தில் ஒரு உருவம் தென்பட்டது. கம்பீரமான உருவம். சூரியாஸ்தமனத்தினால் பற்பல வர்ண ஜாலங்களைக் காட்டிய வானத்தைப் பின்னணியாக வைத்துத் தீட்டிய சித்திரம்போல் காட்சியளித்தது அது.

''அவரா? அவர்தான் எங்கள் சாமியார்'' என்றேன்.



''சாமியாரா? காஷாயம் அணிந்திருப்பதாகத் தெரியவில்லையே?''

''இரப்பா, சொல்கிறேன் கேள். ஏழெட்டு வருஷங்களுக்கு முன் அவர் எங்கள் கிராமத்துக்கு வந்தார். அவர் ஊர் பேர் ஒன்றும் எங்களுக்குத் தெரியாது. வந்த புதிதில் கிராமத்தின் எல்லையில் அதாவது காட்டுக்குச் சற்று வெளியில் ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டார். அங்கேதான் இன்னமும் வசிக்கிறார். ஏதோ தோட்டவேலை செய்கிறார்போல் இருக்கிறது. யாருடனும் அதிகமாய்ப் பழகுவதில்லை. ஆனால் கிராமவாசிகளில் யாருக்காவது உடம்புக்கு வந்து விட்டால் அழைக்காமலே வந்து ஒரு மூலிகையைக் கொடுப்பார். அதை உட்கொண்டால் குணம் நிச்சயம். வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ள அவர் வீட்டைத் தேடிச் சென்றால் அவர் இருப்பதில்லை. பகல் பொழுதைக் காட்டிலேயே கழிப்பதாக இடையர்கள் சொல்கிறார்கள்...தெய்வம்போல் எங்களுக்கு உதவி புரிவதால் நாங்கள் அவரைச் சாமியார் என்று கூப்பிடுகிறோம். எந்த விஷயத்தைப் பற்றியும் பேசாத அவரே அந்த நாமக்காரப் புலியின் வடுவைப் பற்றி ஏதோ விசாரித்தார் என்றால் பாரேன். இந்தப் புலி விஷயம் அவரையும் கவலைப்பட வைத்து விட்டதோ என்னமோ!''

வீடு வந்து விட்டது. என் மனைவி மரகதம் தன் தம்பியைக் கண்டதும், ''புலி விஷயம் தானே? அப்புறமாகப் பேசிக் கொள்ளலாம். வாப்பா ராமு, முதலில் காப்பி சாப்பிடு'' என்று அன்புடன் வரவேற்று அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

* * *

மறுநாள் காலை எங்கள் வீட்டுக்கு முன் ஒரு சிறு கூட்டம் கூடியது. புலியைக் கொல்வதற்கான வழிகளை ஆராய்ந்து ஏதாவதொரு தீர்மானம் செய்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம்.

''எவ்வளவு நாட்கள்தான் பொறுத்துக் கொண்டிருப்பது? அதைத் தொலைத்துக் கட்டிவிட வேண்டியதுதான். ஏனப்பா ராமு, உனக்கு ஏதாவது வழி தோன்றுகிறதா?'' நான் ஆவலாய்க் கேட்டேன்.

ராமு பதிலளித்தான். ''ஓர் உபாயம் இருக்கிறது. இன்று இரவு கிராமத்தின் எல்லையில் ஒரு ஆட்டைக் கட்டி விடுவது. புலி இரை தேடி வரும்போது அந்த ஆட்டைப் பார்த்து விட்டு அதைக் கொன்று தன் குகைக்கு இழுத்துக் கொண்டு போகுமல்லவா? அப்போது மண்ணில் அடையாளங்கள் பதிந்து விடும். அவைகளைப் பின்பற்றினால் சிரமமில்லாமல் புலி பதுங்கும் இடத்தைக் கண்டு பிடித்து விடலாம்.''

''அதைவிட, அது ஆட்டை நெருங்கும் போதே பிடித்து விட்டால்....!''

''இல்லையில்லை. பதுங்குமிடத்தைக் கண்டு பிடிப்பதுதான் மிகவும் நல்லது. அதற்குத் தோழர்கள் இருந்தால் அதுவும் நமக்குத் தெரிந்து விடுமல்லவா?''

எனக்கு என்னவோ சந்தேகமாகத்தான் இருந்தது. ''ஏனப்பா இதில் கஷ்டம் ஏதாவது....''

''மனத்தில் தைரியத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டியதுதான், அத்திம்பேரே! வேறு கஷ்டம் ஒன்றுமில்லை.'' ராமு சிரித்தான். ''கேலி செய்யவில்லை. அத்திம்பேரே. புலி காட்டுக்குள் இருந்தாலே கஷ்டம்தான். நான் ஒரு பரிதாபக் கதை கேள்விப் பட்டிருக்கிறேன். காட்டிலாகா அதிகாரிதான் அவரும். ஏதோ விஷயமாய் ஒரு சமயம் குடும்பத்தோடு காட்டில் 'கேம்ப்' செய்து கொண்டிருந்த போது ஒரு புலி அவருடைய மனைவியையும் குழந்தையையும் கொன்று விட்டதாம். இந்த மாதிரி எத்தனையோ சம்பவங்கள்! அப்படியிருக்க, காட்டுக்குள்ளேயே அக்கிரமங்கள் செய்யும் மிருகங்கள் பக்கத்திலுள்ள ஊருக்குள்ளும் வருவதற்கு ஆரம்பித்தால் அவற்றை விட்டு வைக்கலாமா?''

'கூடாதுதான்' 'ஐயோ, என்ன பயங்கரம்!' என்பன போன்ற சப்தங்கள் கூட்டத்தில் மெல்ல ஒலித்தன. அப்போது எங்கள் வீட்டு எதிரே இருந்த பாதையில் ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார். அடர்ந்து வளர்ந்த கேசம் அவர் தோள்மேல் தாறுமாறாக விழுந்து கொண்டிருந்தது. நீண்டதொரு தாடி மார்பிலே புரண்டு கொண்டிருந்தது. இடையில் கட்டிய துண்டைத் தவிர அவர் வேறு

ஆடைகளை அணிந்திருக்க வில்லை. கண்கள் ஒடுங்கிக் கிடந்தாலும் அவற்றில் ஒருவிதக் கூர்மை தென்பட்டது. மெல்லிய உதடுகள் அவர் முகத்துக்கு விளக்க முடியாத ஒரு திட பாவத்தை அளித்தன.

அவரைக் கண்டதும் நான் ராமுவின் பக்கம் திரும்பிக் குரலைத் தாழ்த்தி, ''நேற்று மாலை தூரத்திலிருந்து பார்த்தோமே, அந்தச் சாமியார்தான் இவர்'' என்றேன்.

ஆனால் என்ன ஆச்சரியம்! யாரோடும் பழகாத அவர் நாங்கள் இருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

''புலி விஷயம் என்ன ஆயிற்று?'' சாமியாரின் குரல் கம்பீரமாக வந்தது.

''இன்று இரவே அதைக் கொல்வதற்கான அஸ்திவாரங்களைப் போடப் போகிறோம்'' என்றான் ராமு பெருமையுடன்.

''ஓஹோ.....! சரி நான் வருகிறேன்.'' ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவராய்ச் சாமியார் அங்கிருந்து அகன்றார்.

★

அன்று இரவே ராமுவின் யுக்தியின்படி ஆட்டைக் கட்டிவிட்டு மறுநாள் புலியைத் தேடிப் போவது என்று நிச்சயித்தோம்.

மறுநாள் பொழுது விடிந்தது. காலை சூரியன் தன் இளங்கதிர்களை ஜன்னல் வழியாய் என்மீது சொரிந்தான்.

''ஐயா! ஐயா! கதவைத் தொறங்கஐயா!''

வாசற்கதவை யாரோ ஆவேசத்துடன் இடிக்கும் சத்தம். பரபரப்போடு எழுந்து கதவைத் திறந்தேன். எதிரே மாடு மேய்க்கும் கிழவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் முகம் பயத்தினால் வெளுத்திருந்தது.

''ஆடு...அப்படியே இருக்குதுங்க ஆனால்..., சாமியார் வீட்டு வாசலிலே ஒரே ரத்தம். அவரைக் காணோம்!''

இதற்குள் ராமுவும் வந்து விட்டான்.

''என்னப்பா உளறுகிறாய்?''

''நிஜந்தானுங்க. இந்தக் கண்ணாலேயே பார்த்தேனுங்க!''

இதற்குள் எங்கள் வீட்டு வாசலில் கூட்டம் கூடி விட்டது.

''என்ன யோசனை? உடனே கிளம்புங்கள். என்ன ஆயிற்றென்றுதான் பார்ப்போமே!''

மனத்திலே பீதியோடு நாங்கள் கிராமத்து எல்லையை நோக்கி நடந்தோம். சாமியார் வீட்டுக்கு அருகில் செல்லுகையிலேயே வீட்டின் வாசலில் சிந்தியிருந்த ரத்தம் கோரமாய்க் காட்சி தந்தது. அந்தக் கிழவன் சொன்னது அவ்வளவும் உண்மைதான்!

''இதோ பாருங்கள் அத்திம்பேரே. புலி இங்கே நின்றிருக்கிறது. புலியின் கால்கள் மண்ணிலே பதிந்தால் இந்த மாதிரியான அடையாளங்கள்தான் இருக்கும்.''

ஆனால் அந்தக்கணம் எனக்குக் காட்டிலாகாவில் வேலை செய்யும் ஒருவனின் சிறந்த ஞானம் தேவையாயிருக்கவில்லை. புலி சாமியாரை இழுத்துக் கொண்டு போன அடையாளம்தான் அச்சத்தை மூட்டுமளவுக்குத் தெளிவாய்க் காணப்பட்டதே!

அங்கங்கே பூமியில் பதிந்திருந்த அடையாளங்களை வைத்துக் கொண்டு காட்டை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப்பாதையில் நடக்கலானோம்.

உண்மையிலேயே புலி சாமியாரைக் கொன்று விட்டதா? அவ்வளவு பெரிய மகானைத் தன் மிருகத்தன்மைக்குப் பலியாக்கிக் கொண்டு விட்டதா என்ன? இல்லை, இல்லை. அப்படி நடந்திருக்க முடியாது. என் மனத்திலிருந்து சந்தேகங்களையும் கவலைகளையும் அகற்றி விட்டு நம்பிக்கையை வரவழைக்க முயன்றவாறு மேலே நடந்தேன்.


ஆனால் சிறிது தூரம் செல்லுமுன்பே நம்பிக்கையை அறவே அழிக்கும் அந்தக் கோரக் காட்சியைக் கண்டேன்.

சாமியாரின் உயிரற்ற உடல் ரத்த வெள்ளத்துக்கிடையே விழுந்து கிடந்தது.

ஆனால் அவர் முகம் ஒரு அதிசயப் பொலிவுடன் விளங்கியது.

''பெரியவங்களைக் கொன்ற புலி நல்லா இருக்குங்களா? அதுக்கு அழிவுக் காலம் தானே வந்திடுச்சு.''

மாடு மேய்க்கும் கிழவன் ஒருவன்தான் இப்படிச் சொன்னான். ஆனால் நாங்கள் எல்லோருமே அப்படித்தான் நினைத்தோம்.



இன்னும் சற்றுத் தூரத்தில் பாதையில் ஒரு திருப்பம் இருந்தது. அதற்கு அடுத்து ஒரு சிறு மடு உண்டு. எங்கே புலி அங்கே பதுங்கிக் கொண்டிருக்கிறதோ என்று அஞ்சி நடுங்கியவாறு நாங்கள் அடிமேல் அடி வைத்து மெள்ள நடந்தேன்.

ஆனால் நாங்கள் வந்திருக்கவே வேண்டியிருக்கவில்லை. திருப்பத்தை அடைந்ததும் நாங்கள் கண்ட காட்சி எங்களைப் பிரமிக்கச் செய்தது. பாதையின் முடிவில் புலி உயிரற்று விழுந்து கிடந்தது.


ராமு அதை உற்றுக் கவனித்தான். பின் அருகில் சென்று குனிந்து பார்த்தான். ஆம்! புலி இறந்து கிடந்தது. ஆனால் அதன் உடலில் ஒருவிதமான காயமும் காணப்படவில்லை.

உண்மையிலேயே பெரியவரைக் கொன்ற பாவத்தின் பலனை அது அனுபவித்துவிட்டதா?

* * *

சாமியாரின் உடலை எடுத்துக் கொண்டு குனிந்த தலையுடன் மௌனமாய் அவர் வீட்டை நோக்கி நடந்தோம்.

நாங்கள் அந்த வீட்டை அடைந்தபோது கதிரவனின் வெப்பம் தகிக்க ஆரம்பித்து



''நொண்டிக்குக் கால் ஏண்டா போடலே?''
''நொண்டிக்குத்தான் கால் கிடையவே கிடையாதே ஸார்!''

விட்டது. சாமியாரின் மேஜைமீது இருந்த பேனா மூடி சூரியனின் கதிர்களால் பொன்னைப் போல் மின்னிக் கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் இருந்த காகிதங்கள் என் கண்ணைக் கவர்ந்தன. அவைகளில் ஏதோ எழுதப்பட்டிருந்ததைக் கண்டதும் நடுங்கும் கைகளுடன் எடுத்துப் பதறும் மனத்துடன் அவைகளைப் படிக்க ஆரம்பித்தேன்.

''என் பெயர் கிருஷ்ணமூர்த்தி. நான் காட்டிலாகாவில் தலைவனாக இருந்தவன். முப்பது நாற்பது வயதுவரை என் வாழ்க்கையில் நான் அதிக துன்பங்களையே அனுபவிக்கவில்லை. இவ்வுலகில் மனிதன் விரும்பக் கூடிய அவ்வளவு பொருள்களையும் இறைவன் எனக்கு அளித்திருந்தான். பூலோக ரம்பையைப் போன்ற அழகும் நிகரற்ற குணமும் வாய்ந்த மனைவி, ஏராளமான பொருட் செல்வம், மற்றவர் பார்த்துப் பொறாமைப்படும் பதவி, நாற்பதாவது வயதில் ஒரு குழந்தை. நான் கழித்துப் பிறந்த என் மகன் மாதவனின் புன்னகையிலே நான் உலகத்தையே மறந்தேன்.

''என் மனைவியின் மீதும் மகன் மீதும் எனக்கு இருந்த பாசம் எல்லை கடந்ததாக இருந்தது. அதனால் எங்கே சென்றாலும் அவர்களையும் அழைத்துச் செல்லும் வழக்கம் எனக்கு உண்டாயிற்று. இதன் காரணமாய் ஒரு நாள் என்னுடைய வாழ்வின் இன்பத்தையே பலி கொடுக்கப் போகிறேன் என்று நான் எவ்வாறு நினைக்க முடியும்?

''காட்டில் முகாம் செய்ய வேண்டிய ஒரு சந்தர்ப்பம் வந்தது. வழக்கம்போல என் மனைவியையும் மாதவனையும் உடன் அழைத்துச் சென்றேன். அன்று என்றைய தினத்தையும் விட அதிக வேலை இருந்தது. அதனால் என்னையுமறியாமல் மரக்கட்டையைப் போல் தூங்கி விட்டேன்.

''மாதவன் வீறிட்டான். கண்ணைத் திறந்தேன். ஒரு புலி அவனை அணைத்துக்கொண்டிருந்தது. என் மனைவி ரத்த வெள்ளத்துக்கிடையே கிடந்தாள். என் உடல் பற்றி எரிந்தது. கையில் கத்தியுடன் ஆவேசம் வந்தவன் போல் புலிமேல் பாய்ந்து அதன் நெற்றியை இரண்டு முறை காயப்படுத்தினேன். உடனே அது பயங்கரமாய்க் கர்ஜித்துக் கூடாரத்தை விட்டு ஓடி மாயமாய் மறைந்து போய் விட்டது.

''பின் ஒரு வருஷ காலம் அந்தப் புலியைத் தேடிப் பைத்தியம் பிடித்து அலைந்தேன்.

''ஏகாந்தத்தில் என்வாழ்வின் எஞ்சிய நாட்களைக் கழிக்கத் தீர்மானித்தேன். பிறருக்குச் சேவை புரிவதற்காக என் வாழ்வை அர்ப்பணிக்க முடிவு செய்தேன். இந்தக் கிராமத்துக்கு வந்தேன். மூலிகைத் தோட்டம் பயிராக்குவதில் என் கவனத்தைச் செலுத்தினேன். காட்டுக்குச் சென்று பலவித மூலிகைகளைப் பரிசோதித்து என் தோட்டத்தில் நட்டு வைத்தேன். ஆனால் யாருடனும் நான் அதிகமாய்ப் பழகவில்லை. ஏனென்றால் எந்தக் குழந்தையைக் கண்டாலும் என் மாதவனின் ஞாபகம் வந்துவிடும். அவன் கடைசியாக வீறிட்டு அலறியது என் செவிகளில் கேட்கும்.

''என் கவலைகளை மறந்து பிறருக்குச் சேவை செய்வதில் நான் ஏழு வருஷ காலம் இன்பத்தைக் கண்டேன். என் மனத்தில் ஒருவித சாந்தி குடிகொண்டது.

''அப்போதுதான் நாமக்காரப் புலி இந்தக் கிராமத்துக்கு வந்து சூறையாட ஆரம்பித்தது. முதலில் நான் அதைப் பற்றி அவ்வளவாக அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அது மனிதர்களைக் கொல்லத் தொடங்கியவுடன் என் ரத்தம் கொதித்தது. கிராமவாசிகளிடம் அதைப் பற்றி விசாரித்ததில் அவர்கள் புலியின் நெற்றி வடுவைப் பற்றிக் கூறினார்கள். அப்போதுதான் என் வாழ்வை நாசமாக்கிய புலி அது என்று உணர்ந்தேன். என் மனத்திலிருந்த சாந்தி மறைந்தது. என் இரு மாணிக்கங்களின் முடிவு என் எண்ணத்தில் மோதிற்று. பழி வாங்கும் பழைய லட்சியம் நிறைவுக்காகக் கதறியது. வெறி கொண்டவனானேன்.

''மூலிகைகளைப் பரிசோதித்ததின் பயனாக ஒரு அதிசய பலனை அளிக்கும் மூலிகையைப் பற்றி நான் அறிந்திருந்தேன். அந்த மூலிகைக்கு என் உடம்பையே தோட்டமாக்கிக் கொண்டேன். அதைத் தின்பதால் நாளடைவில் என் உடலில் விஷக் கலப்பு ஏற்பட்டு விடும். ஒரு நாள் என்னையே அந்தப் புலிக்குப் பலியாக்கி என் உடம்பின் விஷத்தால் அதைக் கொன்று என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளத் தீர்மானித்தேன்.

''என் எண்ணம் நிச்சயமாய் நிறைவேறும். விரைவிலேயே நான் என் இரு கண் மணிகளையும் காண்பேன். அவர்களைக் கொன்ற யமனை ஒழித்து விட்டு என்னுடைய கடமையைச் செய்து விட்ட செய்தியை அவர்களிடம் கூறி மகிழ்வேன்...''

என் உடல் முழுவதும் அனலால் ஆனது போன்று ஒரு உணர்ச்சி என்னைப் பிடித்துக் கொண்டது. சாமியார் எங்கள் கிராமத்துக்கு அவ்வளவு காலமாய்ச் செய்த உதவிகளையும் கடைசியில் அவர் செய்த மாபெரும் உதவியைப் பற்றியும் நினைத்தவாறு வீடு நோக்கி நடந்தேன்.

சாமியார் தம் பாதையின் முடிவை அடைந்து விட்டார்.

கொழும்பு நகரில் வள்ளுவர் விழா

ஞானமூர்த்தி

ஆண்டுதோறும் தமிழ் மறைக் கழகத்தினர் நடத்தி வரும் திருக்குறள் மகாநாடு இவ்வாண்டு கொழும்பு நகரிலே இலங்கை இதுவரை கண்டிராத கோலாகலமான தமிழ்த் திருவிழாவாக நடைபெற்றது. ஜூன் எட்டாம் தேதி ஆரம்பித்த இவ் விழா பதினோராம்தேதி வரை நான்கு தினங்கள் நடைபெற்றன. கொழும்பிலுள்ள பதினொன்று சங்கங்களின் ஆதரவுடன் நடைபெற்றமையால் என்றுமில்லாதபடி தமிழ்க் குலத்தின் பெருமைக்கும் பண்புக்கும் ஒரு தனி எடுத்துக்காட்டாக விளங்கியது. நாட்டின் பல பாகங்களிலுமிருந்து புலவர்களும் பண்டிதர்களும் தமிழ்ப் பற்றும் தமிழபிமானமுடையவர்களுமாகத் திரண்டுவந்துவிழாவினைச்சிறப்பித்தனர்.

இவ்வளவு உயர்வாக நடைபெற்ற திருவிழாவுக்குச் சிறப்பு அளித்த அம்சம் முதல்நாள் ஆரம்பத்தில் நடைபெற்ற திருக்குறள் ஏட்டுச்சுவடி ஊர்வலம் ஆகும். ஜூன் எட்டாம் தேதி பிற்பகல் மூன்று மணியளவில் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு க. மதியாபரணம் தலைமையில், தட்டாரத் தெருவிலுள்ள கணபதி வித்தியாலயத்திலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் ஆமோர் வீதி, பணிக்கர் வீதி, புதுச் செட்டித்தெரு, செம்பட்டா தெரு, செட்டித்தெரு, செக்கடித்தெரு, கன்னாரத்தெரு, சிந்துப்பிட்டித்தெரு, மேட்டுத்தெரு முதலியவற்றின் வழியாக வந்து விவேகானந்த சபை மண்டபத்தினை அடைந்தது. அலங்கரிக்கப்பட்ட ஒரு யானையின் மீது அம்பாரியில் திருக்குறள் ஏட்டுச் சுவடிகள் வைக்கப் பட்டு வகுப்புவாதமும் இனவெறியும் தலைவிரித்தாடும் கொழும்பு நகர வீதிகள் வழியாகப்பவனி வந்த காட்சியினைத் தமிழ் மக்கள் என்றும் மறக்க முடியாது. ஏறக்குறைய மூன்று மைல்களுக்கு மேற்பட்ட ஊர்வலத்தினைத் துணிவுடன் ஒழுங்கு செய்த தமிழ்மறைக் கழகத்தாரைப் போற்றிப் புகழாமல் இருக்க முடியாது.

ஊர்வலம் விவேகானந்த சபை மண்டபத்தை வந்தடைந்ததும், தமிழ் மறைக் கழகத்தினரால் ஏற்படுத்தப் பட்ட 'திருக்குறள் நூற்காட்சியும் ஓவியக் காட்சியும்' முன்னாள் அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. காட்சியைத் திறந்து வைத்து, ''தமிழர்கள் உரிமைகளை இழந்த நிலையில் இன்று இலங்கையில் உள்ளனர். கடந்த ஆனி மாதத்தில் தமிழ் அன்னைக்கு இரண்டு கால்களும் வெட்டப்பட்டு விட்டன. இன்று அவள் முடமாய்க் கிடக்கிறாள். இன்று கொழும்பு நகர வீதிகளினூடே திருக்குறள் ஏட்டுச்சுவடிகள் ஊர்வலம் வந்தன. இன்னும் ஐம்பது வருடங்களுக்குப் பின் இப்படி ஒரு ஊர்வலம் நடக்கும் நிலை இருக்குமா அல்லது பழங்கதையாகவே நமது வரலாறு இருக்குமா என்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்'' எனப் பேசிய பேச்சே ஊர்வலத்தின் முக்கிய சிறப்புக்கு ஒரு நற்சான்றாக இருந்தது.

விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு கு. வி. செல்வத்துரை அவர்கள் வரவேற்புரைக்குப் பின்னதாக, உளநூற் பேராசிரியர் திரு க. ச. அருணந்தி அவர்கள், திருக்குறள் மகாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசுகையில், ''இன்று தமிழ் மக்கள் இலங்கையில் தங்கள் உரிமைகளை இழந்த நிலையில் உள்ளனர். இந்த நிலையில் நாம் இருக்கக் கூடாது. நாம் நமது சுதந்திரத்தையும் உரிமைகளையும் உணர வேண்டும். குறள்இயற்றப்பட்டு இன்று இரண்டாயிரம் ஆண்டுகளாகி விட்டன. தமிழர்களது பண்பாடு இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முன் எங்ஙனம் அமைந்திருந்தது என்பதற்குத் திருக்குறள் நமக்




திருக்குறள் நூற் காட்சியைப் பார்வையிடுகின்றனர். தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், டாக்டர் அ. சின்னத்தம்பி முதலியோரை இந்தப் படத்தில் காணலாம்.

கொரு விளக்கமாகும். மக்கள் குறளைக் கற்கின்றனர்; ஆனால் கற்றபடி ஒழுகுவது இல்லை. அறிவு நிலையில் நாம் இருந்தால் போதாது. நமது அறிவு வாழ்க்கையிலும் இருக்க வேண்டும். போதனை கூடாது. நமக்கு வேண்டியது சாதனையே'' என்றார்.

மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் அவர்கள், தமிழ் மறைக் கழகத்தின் நோக்கத்தையும் வள்ளுவர் விழாவைக் கொண்டாட வேண்டியதன் அவசியத்தையும் விரிவாக எடுத்துக் காட்டினார். வள்ளுவர் விழாவில் கலந்து கொள்ளுமாறு உலகப் பேரறிஞர் திரு அல்பர்ட் சுவெய்ட்சருக்குத் தாம் அனுப்பிய அழைப்புக்கு அவர் அனுப்பிய பின்வரும் பதிலினை வாசித்துக் காட்டி மேல்நாட்டில் திருக்குறளுக்குள்ள சிறப்பினையும் மதிப்பினையும் விளக்கினார்:

''யான் முதன் முதல் குறளை வாசித்த பொழுது அதனுள் செறிந்த கருத்துக்கள் என்னை ஆட்கொண்டு விட்டன. அறத்தினை நுட்பமாகவும் ஆழமாகவும் தெரிவிக்கும் நூல்களில் சிறப்பாக அறவாழ்க்கையை எடுத்துரைக்கும் நூல் திருக்குறளே. ஐரோப்பிய நாட்டு மக்கள் பலரைத் திருக்குறளைப் படிக்கச் செய்துள்ளேன். திருக்குறளின் கருத்துக்களால் அவர்களும் ஆட்கொள்ளப்பட்டு விட்டனர். இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்திருக்காவிட்டால் தென்னிந்திய மக்கள் தெய்வத் திருக்குறளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதை நேரிலேயே கண்டறிந்து கொள்ள வந்திருப்பேன். ஆனால் இலம்பறேனில் 1937-ம் ஆண்டு தொடக்கம் 1948-ம் ஆண்டு வரையில் எனது வைத்திய சாலையை மேற்பார்வை செய்ய வேண்டிய கடமையில் ஈடுபட்டிருந்தேன். அதன் பின்பும் ஒரு நீண்ட பிரயாணத்தைச் செய்யக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. இப்பெரு நூலினால் வழிகாட்டப்படும் நாடுகள் என்றும் இந் நூலைப் போற்றி என்றென்றும் நல்வாழ்வு வாழ்வனவாக!''

மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், திருமதி நேசமலர் வேலாயுதம் பிள்ளை ஆகிய இருவரும் விரிவுரையாற்றினர்.



திருக்குறள் ஊர்வலக் காட்சி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ''கல்கி'' எழுதிய ''தமிழ்மறை முனிவர் திருநாள்'' கட்டுரையைப் படித்துக் கொண்டு செல்கிறார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் க. கணபதிப் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்.

ஆசிரியர் திரு நீ. மே. யோ. வேதநாயகம், சென்னைக் கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு க. பெருமாள், பண்டிதர் இ. க. முருகேசு, சென்னை மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் செல்வி மே. மாசில்லாமணி அம்மையார் ஆகியவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு இலங்கை அரசாங்க உணவுப்பகுதி நிரந்தரக் காரியதரிசி திரு கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். திரு மறை. திருநாவுக்கரசு, பண்டிதர் க. மயில்வாகனம், பண்டிதர் க. வீரகத்தி முதலியவர்கள் விரிவுரை நிகழ்த்தினர்.

நான்காம் நாள் நிகழ்ச்சிகளுக்கு, இலங்கை ராயல் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திரு வி. இலக்குமணன் அவர்கள் தலைமை வகித்தார். பேராசிரியர் திரு க. பெருமாள், திரு எஸ். எம். கமால்தீன் ஆகிய இருவரும் சொற்பொழிவாற்றினார்கள்.

அகில இலங்கை தமிழ் மறைத் தேர்வில் பரிசிலும் சான்றிதழும் பெற்றவர்க்கு இலங்கை பல்கலைக்கழகப் பேராசிரியர் மருத்துவ கலாநிதி அ. சின்னத்தம்பி அவர்கள் பரிசில்களை வழங்கினார். திருவள்ளுவர் திருநாளாகிய வைகாசி அனுடத்தை அரசினர் விடுமுறை நாளாக்குமாறு கேட்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைக் கலைவளர் நாடக சபை உறுப்பினர், திருக்குறள் கருத்துகள் நிரம்பிய ''கடமையின் பரிசு'' என்னும் நாடகத்தை நடித்துக் காட்டினார்கள். அத்துடன் தமிழ் மறைக் கழகத்தின் ஐந்தாவது திருக்குறள் மகாநாடு இனிது நிறைவெய்தியது.

முதல் நாள் விழாவில் திறந்து வைக்கப்பட்டு நான்கு நாட்களும் நடைபெற்ற திருக்குறள் நூற்காட்சியும் ஓவியக் காட்சியும் பல்லாயிரக்கணக்கான மக்களின் மனங்களைக் கவர்ந்தன.

பெரிய கம்பத்தம் பெத்ததம்புராஜுவின் நிலங்களுக்கும்; சின்னகம்பத்தம் சின்னதம்புராஜுவின் நிலங்களுக்கும் மத்தியில் தான் கந்தசாமியின் காலேவீசம் காணி புஞ்சை இருக்கது. அந்த நாற்பத்திரண்டு செண்டு நிலத்தினால் இப்பொழுது பெரிய கம்பத்துக்கும், சின்ன கம்பத்துக்கும் ஏகத்தகராறு. ஏற்கனவே இருவருக்கும் பகை உண்டுதான். என்றாலும் இந்தக் 'காலே வீசத்தினால்' அது பெரிதாக வளர்ந்து ஜ்வாலை விட்டு எரிய ஆரம்பித்து விட்டது.

தம்முடைய நாற்பத்தி ஒன்பதே முக்கால் காணியோடு, கந்தசாமியின் காலேவீசத்தையும் விலைக்கு வாங்கிச் சேர்த்து ஒரே சதுரமாக்கி ஐம்பது காணியாகப் பார்க்கவேண்டுமென்ற ஆசை பெத்த தம்புராஜுவுக்கு.

அதைப் போலத்தான் சின்னதம்பு ராஜுவுக்கும் ஆசை. அந்தக் காலே வீசத்தையும் சேர்த்து விட்டால், பெத்ததம்புவின் நிலங்களைவிட ஒரு வீசம் காணி அதிகமாய் விடும்.

'மேலும் எத்தனை நாட்களுக்குத்தான் பெரிய கம்பத்தம் பெரிய கம்பத்தமாகவேயும், சின்ன கம்பத்தம் சின்னகம்பத்தமாகவேயும் இருந்து கொண்டிருப்பது? ஆகையால் மாறுதல் மிகவும் அவசியம். எப்பாடு பட்டாவது அந்தக் காலேவீசத்தை வாங்கி விடவேண்டும். அப்படி வாங்க முடியாவிட்டாலும் அது பெத்ததம்புவின் கைக்குப் போய் விடக் கூடாது!'



இப்படித் தீர்மானித்துக் கொண்டு அதற்கான காரியங்களில் முழுமூச்சோடு முனைந்தார் சின்னதம்புராஜு.

கந்தசாமிக்கு அந்தக் காலே வீசத்தைத் தவிர வேறு பூமி கிடையாது! அந்தக் காலே வீசத்தினாலும் காலணா பிரயோசனமில்லை! அவன் தலையெடுத்த நாள்முதல் அது தரம்பாகவே கிடக்கிறது. எந்த மாசூலும் அதில் செய்யப்படவில்லை. செய்யவும் முடியாது!

ஏனென்றால் இரண்டு கம்பத்தங்களும் அதைச் சுற்றிக் கரும்புப் பயிர் செய்கிறார்கள். நாற்புறமும் கரும்பு உயர்ந்து வளரும்போது, நடுவில் வேறு எந்தப் பயிர்தான் முளைத்துத் தலைதூக்க முடியும்?

வளர்ந்த கரும்புத் தோட்டங்களின் நிழல்: அந்த நிழல் வெளிச்சத்தைக் காலேவீசத்துக்குள் நுழைய விடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் பொழுது, சூரிய வெளிச்சமின்றி எப்படித் தானியங்கள் முளைத்துப் பயிராக முடியும்? அதோடு அதில் நெல்லோ, கேழ்வரகோ நட்டுப் பயிரானாலும், கரும்புத் தோட்டங்களுக்கு வரும் குருவிகள் அதைச் சும்மா விட்டு வைக்குமா?

மேலும் அந்தச் சின்னஞ்சிறு நிலத்தைக் கந்தசாமியிடமிருந்து, பிடுங்கிக் கொள்ள இரண்டு கம்பத்தங்களும் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் பொழுது கேவலம் கந்தசாமி அதில் பயிரிட்டுப் பலனைக் கண்டுவிடுவதற்கு முடியுமா? அல்லது பலனைக் காணத்தான் விட்டுவிடுவார்களா!

நிலத்திலிருந்து ஏதாவது பலனைக் கண்டு விட்டால் கந்தசாமி அதை விற்றுவிட நினைக்க மாட்டானல்லவா! ஆகையால் மற்ற விவகாரங்களில் இரண்டு கம்பத்தங்களுக்குள்ளேயும் அபிப்பிராயபேதங்கள் ஆயிரம் இருந்தாலும் கந்தசாமியின் காலே வீசம் எப்பொழுதும் தரம்பாகவே இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் போட்டி போட்டிக் கொண்டு செய்வதிலும், அதில் எதுவும் விளைந்து விடாமல் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதிலும் மிகவும் ஒற்றுமையாய் இருந்தன.

கந்தசாமி தன் வயிற்றுக்கு அதை நம்பி யிருக்கவில்லை. இரண்டு ஜதை உழவு மாடுகள்தான் அவனுக்கும், அவன் குடும்பத்துக்கும் கஞ்சி ஊற்றிக் கொண்டிருந்தன.

தனக்கு எந்தவகையிலும் பிரயோசனமில்லாத — அந்தக் காலே வீசத்தை விற்றுக் காசாக்கி விடலாமே யென்று பலமுறை அவன் எண்ணியதுண்டு. ஆனாலும் தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் குடும்பப் பாரம்பரைச் சொத்து அது ஒன்றுதான் என்ற நினைப்பு அவனை




உங்களுக்குத் தெரியுமா?
ஹத்திபாயின் 'தராசு மார்க்'
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் பாத்திரங்கள்
சிக்கனமானவை
நீடித்துழைப்பவை
பளபளப்பானவை
உத்தரவாதமுள்ளது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்
ஹத்திபாய் துள்சிதாஸ் & சன்ஸ், பம்பாய்-2.

அப்படிச் செய்யவிடாமல் தடுத்துக்கொண்டே யிருந்தது.

பெத்ததம்பு மனம் வைத்தாலும் சரி, அல்லது சின்னதம்பு மனம் வைத்தாலும் சரி, அந்தக் காலே விசத்தில் ஏதாவது மகசூல் எழுப்ப வழி செய்யலாம். தங்களுடைய இன்ஜின் மூலமாகத் தண்ணீர் இறைத்துக் கொடுக்கலாம். அல்லது தாங்களே கூட அதைப் பயிரிட்டுக் கந்தசாமிக்கு ஏதாவது குத்தகை கொடுக்கலாம்.

அப்படி யெல்லாம் பெரிய மனிதர்கள் மனம் வைத்தால், நல்ல காரியங்கள் செய்து விட்டால், உலகம் ஏன் இப்படி இருந்து கொண்டிருக்கிறது ? சொர்க்கமாகி விடாதா?

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், கந்தசாமியின் காலேவிசத்தின் வழியாகத்தான் இரண்டு கம்பத்தங்களின் நிலங்களுக்கும் ஏரித் தண்ணீர் வந்து பாய வேண்டும் ! கிணற்றிலிருந்து இன்ஜின் மூலமாக நீர் பாய்ச்சவேண்டு மென்றால் கூட அந்தக் காலே விசத்தின் வழியாகப் பாய்ந்தால்தான் இரண்டு பண்ணைகளின் எல்லா நிலங்களுக்கும் சரியாகப் பாய்ச்ச முடியும்.

ஆகவே, அந்தக் 'காலே விசம்' இரண்டு கம்பத்தங்களுக்கும் உயிர் நாடி போன்றது ! அது, கந்தசாமியின் நிலமாக இருக்கும் வரையில், இரண்டு கம்பத்தங்களும் அதன் வழியே நீர்ப்பாசனம் செய்து கொள்வதில் எவ்விதத் தகராறும் இருக்க நியாயமில்லை.

ஆனால், அது பெரிய தம்புவிடம் சேர்ந்து விட்டால், சின்னத் தம்புவின் நிலங்களுக்கு ஆபத்து! அதன் வழியே தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளப் பெரியதம்புஅனுமதிக்கமாட்டார். நீர்ப்பாசனத்துக்கு அதை விட்டால் வேறு சரியான வழியும் கிடையாது. சின்னதம்புவின் கைக்கு அந்த நிலம் மாறி விட்டாலும், பெரிய தம்புவின் நிலங்களுக்கும் அதேகதி தான் ஏற்பட்டுவிடும்.

ஆகையால் இரண்டு பிரபுக்களும் அதைக் கைப்பற்றுவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டு, அதே சமயத்தில் மற்றவர் கைக்கு அது மாறிவிடாமலும் பார்த்துக் கொண்டார்கள்.

இப்படியே எத்தனை நாட்களுக்குக் காத்திருக்க முடியும்? இதற்கு ஒரு முடிவு வேண்டாமா?

ஒரு நாள்:—

பெரிய தம்பு தன் கையாட்களை அழைத்தார். "கந்தசாமியிடம் உழவு மாடுகள் இருப்பதனால்தானே, வழிக்கு வரமாட்டேனென்கிறான். நிலத்தையும் விற்க மாட்டேனென்று பிடிவாதம் செய்கிறான்? அதனால்...!" என்று ஒரு மாதிரியாக இழுத்தார்.

"ஆமாங்க! அதை நாங்கள் கவனிச்சிக்கிறோமுங்க !" என்றான் அவருடைய கையாட்களில் ஒருவன்.

அதே நேரத்தில் சின்னத் தம்புவும் தன் ஆட்களுடன் குசு குசுவென்று ஏதோ ரகசியம் பேசிக் கொண்டிருந்தார்.

"இதென்ன பிரமாதம், இன்று ராத்திரிக்கே வேலையை முடித்து விடுகிறோமுங்க!" என்று அவருடைய ஆட்களும் வாக்களித்து விட்டுச் சென்றார்கள்.

அவ்வளவுதான்!



நடிகை:—நான் பாடுவதற்கு இரவல் குரல் ஏற்பாடு செய்தது போல, நான் பேசுவதற்குப் பதிலாக வேறு ஒருவரைப் பேசச் சொல்லுங்களேன் !

டைரக்டர்:—ஏன்? உங்களுக்குப் பதிலாக வேறு ஒருவரையே நடிக்கச் செய்து விட்டால் போச்சு !

மறு நாள் காலை கந்தசாமியின் உழவுமாடுகள் நான்கும் கொட்டிலில் செத்துக்கிடந்தன.

கந்தசாமி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறினான் ! அழுதான் !

ஊரிலுள்ள நல்ல மனிதர்கள் இந்த அக்கிரமத்தைக் கண்டு ரத்தக் கண்ணீர் வடித்தார்கள்; அவர்களில் பலருக்குத் தெரியும், இது யாருடைய வேலையாய் இருக்குமென்று. தெரிந்தாலும் வாயைத் திறக்க வழியில்லை. எல்லாம் பெரிய இடத்து விஷயம் மூச்சுவிடக் கூடாது. விடவும் முடியாது!

பெரியதம்பு தம் ஆட்களின் சாமர்த்தியத்தை மெச்சிப் பரிசுகள் வழங்கினார். அப்பொழுது அவர்களில் ஒருவன், "ஒரு விஷயம் தெரியுங்களா ? இரவு நாங்கள் அங்கே போகும்பொழுது, சின்னக்கம்பத்தம் ஆட்களை அங்கே பார்த்தோம் !" என்று கூறினான்.

"என்ன?" பரிசுகள் வழங்க நீண்ட பெரிய தம்புவின் கரம் திடீரென்று நடுங்க ஆரம்பித்து விட்டது.

"ஆமாங்க! அவங்களும் அதே வேலையாய்த்தான் அங்கு வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது! ஆனால் எங்களைக் கண்டதும் பயந்து ஓடி விட்டார்கள்!"

"காரியத்தைக் கெடுத்து விட்டீர்களே ! யாருக்கும் தெரியாமல் அல்லவா விஷயத்தை முடிக்கச் சொன்னேன் !"

"தெரிந்தால் என்னங்க? அவர்கள்தான் எங்களுக்கு முன்னே இரண்டு மாடுகளை வேலை தீர்த்து விட்டார்களே !"

"என்னப்பா சொல்கிறீர்கள் ?"

"சின்னக் கம்பத்தம் ஆட்கள் ஒரு ஜோடியைக் கொன்று விட்டார்கள். எங்கள் பங்குக்கு ஒரு ஜோடிதான் பாக்கி யிருந்தது. நாங்கள் இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப் போயிருந்தால், அதற்குள் அவர்களே அதையும் முடித்துவிட்டுப் போயிருப்பார்கள் !"

"ஓகோ ! அப்படியா சங்கதி ! சின்னதம்புவும் பெரிய ஆள்தான் !" என்று மனத்துக்

குள்ளேயே கூறிக்கொண்டு அவசரம் அவசரமாகக் கந்தசாமியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார் பெரியதம்புராஜு.

"என்னப்பா கந்தசாமி! நாலையுமா அடித்துப் போட்டுட்டானுக! யார் வேலையாய் இருக்கும் இது?" என்று அவன் நிலைக்கு வருந்துபவர் போல நடித்தார் பெரிய தம்பு.

"ஆமாங்க! நாலையும் எந்தப் பாவியோ அடித்துக் கொன்று விட்டானுங்க! அவன் நல்லா விருப்பானுங்களா! என்று கதறினான் கந்தசாமி.

"நீ கவலைப்படாதே கந்தசாமி! நாலுக்கு எட்டு மாடுகள் வாங்கித் தருகிறேன்! கையில் செலவுக்கு ஐந்நூறு கொடுக்கிறேன்!" என்றார் பெரிய கம்பத்தம்.

கந்தசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. காரணம் தெரியாமல் விழித்தான்.

"ஆமாம், கந்தசாமி! அந்தக் காலே வீசத்தை மட்டும்!" என்று இழுத்தார்.

கந்தசாமிக்கு இப்பொழுதுதான் விஷயம் விளங்கிற்று. யோசித்தான். பிழைப்புக்கு வேறு வழியில்லை. நிலத்தை விற்றுத்தானாக வேண்டும். பேரமும் அப்படி ஒன்றும் மோசமானதாக இல்லை. நான்கு ஜோடி உழவு மாடுகள்; கையிலும் ஐந்நூறு! காலே வீசம் காணிக்கு யார் இவ்வளவு ரூபாய் கொடுப்பார்கள்?

"பார்க்கலாமுங்க...!" என்று வாக்கு கொடுத்தான் கந்தசாமி.

பெத்ததம்பு வெற்றியுடன் வீடு திரும்பினார். கந்தசாமியின் வீட்டுக்குப் பெரிய தம்பு வந்து போன செய்தி மறு விநாடி சின்னதம்புவுக்குத் தெரிந்து விட்டது. உடனே அவரும் கந்தசாமியின் வீட்டுக்கு ஓடிவந்தார்.

காலே வீசத்தைத் தமக்குத் தருவதாயிருந்தால்.." நான்கு ஜதை மாடுகளோடு, கையில் ரொக்கமாக ஆயிரம் ரூபாய் தருவதாகவும்" அவர் சொன்னார்.

கந்தசாமி தடுமாறினான்: "கேவலம் காலே வீசம் காணிக்கா இவ்வளவு பணம்?" என்று வாயைப் பிளந்தான்.

"ஆமாம்! நாளைக்கே பத்திரம் வாங்கிப் பதிவு செய்து விடலாம்!" என்று கூறிவிட்டுச் சின்னக் கம்பத்தம் போய் விட்டார்.

பெரிய கம்பத்தத்தின் காதுகளில் இந்த விஷயம் விழுந்ததும், உடனே கிராம மணியக்காரரைக் கந்தசாமியிடம் தூது அனுப்பி, "மாடுகளும், ரொக்கம் இரண்டாயிரமும்" என்று விலை கூறச் செய்தார்.

இது சின்னதம்பு கேள்விப்பட்டு உடனே கிராமக் கர்ணத்தை அழைத்து, "மாடுகளோடு, வீடு கட்டிக் கொள்ள ஒரு காலி மனையும் கையில் ஐயாயிரமும்...!" என்று செய்தி அனுப்பினார்.

போட்டி வலுத்தது.

ஐயாயிரம், பத்தாயிரமாய், பத்தாயிரம் இருபதாயிரமாய், அது முப்பதாயிரமுமாய், மேலும் மளமள வென்று உயர்ந்தது.

கடைசியில் கந்தசாமியின் காலே வீசம் காணிக்கு ஐம்பத்தையாயிரம் ரூபாய்கள் கொடுத்து அதைத் தம்முடையதாக்கிக் கொண்டு விட்டார் சின்னதம்பு.

அவருடைய நிலங்கள் முழுவதையும் அடகு வைத்துத்தான் ஐம்பத்தையாயிரம் ரூபாய்கள் கடன் வாங்கினார். போட்டி மயக்கத்திலிருந்த அவர், 'தான் இத்தனை ரூபாய்கள் கடன்படுகிறோம்' என்பதை உணரத் தவறிவிட்டார். அப்படியே உணர்ந்தாலும் அப்பொழுது அவர் அதைப் பொருட்படுத்தியிருக்கவும் மாட்டார்.

அவருடைய நோக்கமெல்லாம், "தாம் அந்த நிலத்தைச் சொந்தமாக்கிக் கொண்டு, தம்முடைய ஜென்ம வைரியான பெத்த தம்புவின் நிலங்களுக்கு அதன் வழியாக நீர் பாய்ச்ச முடியாமல் தடை செய்ய வேண்டும். நீரின்றிப் பெத்ததம்புவின் நிலங்கள் மாறுவோடு காய வேண்டும்!" என்பதுதானே?

"டேய்! அந்தக் காலே வீசத்தை நாளைக்கே உழுது பயிரிடுங்கடா! ஜாக்கிரதை! யாரும் அந்த நிலத்தின் வழியே தண்ணீர் கொண்டு போகக்கூடாது! ஆமாம்!" என்று உத்தர விட்டார் சின்னதம்பு.

"நீங்கள் அதன் வழியாகவே தண்ணீர் கொண்டு வந்து நம்ப நிலங்களுக்குப் பாய்ச்சுங்கள்! யார் வந்து மறிக்கிறான் பார்க்கலாம்!" என்று கர்ஜித்தார் பெரியதம்பு.

இரண்டு கம்பத்தங்களும் அடி ஆட்களை நிறைய அமர்த்திக் கொண்டன. எப்பொழுதும்போல் கிராம மணியக்காரர் ஒரு பக்கம், கர்ணம் ஒரு பக்கம் சேர்ந்து கொண்டு விரோதத்தை வளர்த்துக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு கம்பத்தங்களின் ஆட்களும் ஒரு நாள் மோதிக் கொண்டார்கள். மண்வெட்டி, கடப்பை, கோடரி, எல்லாம் ஆயுதங்களாய் உபயோகிக்கப்பட்டன. மனிதர்கள் மிருகங்களானார்கள். அல்ல! ஆக்கப்பட்டார்கள். ஒருவரை யொருவர் மூர்க்கமாய்த் தாக்கிக் கொண்டார்கள். தண்ணீர் பாய்ச்சுவதற்காகச் சென்றவர்கள், தங்கள் ரத்தத்தைப் பாய்ச்சி விட்டு மடிந்தார்கள்.

இருதரப்பிலும் பல உயிர்கள் சேதம்!

வழக்கு பதிவாயிற்று. விசாரணை நடந்தது. நடந்து கொண்டே போயிற்று. சென்னை, பம்பாய், தில்லி இங்கிருந்தெல்லாம் பெரிய பெரிய வக்கீல்கள் வந்து, கம்பத்தங்களின் காசைக் கரைத்து, வழக்கை வளர்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

பல ஆண்டுகள் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது. பிறகு அந்த வழக்கின் முடிவு என்னவாயிற்றோ? தெரியாது.

இதெல்லாம் நடந்து இப்பொழுது பத்து வருடங்களுக்கு மேல் கழிந்து விட்டன.

தற்சமயம், கந்தசாமிதான் அந்த ஊரில் பெரிய கம்பத்தக்காரனாய் விளங்குகிறான். பெரியதம்பு ராஜுவின் நிலங்களையும், சின்னதம்பு ராஜுவின் நிலங்களையும் ஏலத்தில் எடுத்து தன்னுடையதாக்கிக் கொண்டு விட்டான். மேலும் ஒரு முக்கிய விஷயம்: தங்கள் சொத்தை வழக்கிலும், வம்பிலும் அழித்துவிட்ட பெத்த தம்புவும், சின்ன தம்புவும், இப்பொழுது கந்தசாமியின் பண்ணையில்தான் வேலைக்கு அமர்ந்து அவன் இடும் வேலைகளைச் செய்து கொண்டு வயிறு வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்! இருவரும் இப்பொழுது ஒற்றுமையாய் இருப்பதாகத் தான் கேள்வி!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


பளபளப்போடு
நறுமணமோங்கும் கேசத்திற்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட்
ஹேர் ஆயில்
(கேசத்திற்கு பரிமள தேங்காயெண்ணெய்)
ரோஜா அல்லது மல்லிகை மணமூட்டியது
இலவசம்...
பெரிய சைஸ் ஒவ்வொன்றுடனும் நல்லதொரு
PERFUMED COCONUT HAIR OIL
ROSE
PERFUMED COCONUT HAIR OIL

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

